உ

நவக்கிரகசிந்தாமணி

என்னும்

சாதகசூடாமணி

மூலமும் - உரையும்.

திருமயிலை

குழந்தையாநந்தசுவாமிகளது

சிஷியவர்க்கத்துள் ஒருவராகிய

பிட்சைப்பாவலர்

கணிதநூற்புலவர்

மார்க்கலிங்கஜோதிஷர்

அவர்களால் பார்வையிடப்பட்டு

சென்னை - இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்

சக்கரவர்த்தி பிரஸ்

Copy Right.) 1934 (அணா-12

உ

முருகக்கடவுள் துணை.

சாதக சூடாமணி

மூலமும்-உரையும்.

காப்பு.

வஞ்சிவிருத்தம்.

வெள்ளைவாரணப் பிள்ளையார்பத
முள்ளுவார்மனக் கள்ளமாறுமே.

பிரசூதிலட்சணம்.

விருத்தம்.

உதயத்தானத்தைவிண்ணி லுடுபதிபாராதிற்
பதியைத்தானிழந்துதந்தை பரகிரகத்தனென
விதியொத்தகாமத்தெட்டி லொன்பதில்வெய்யோன்மேவில்
வதியத்தானுபயமுள்ளோர் திரஞ்சாஞ்சஞ்சாரமானேன்:

இதன்பொருள்.

ஜன்மலக்கினத்தைச் சந்திரன்பாராதிருக்கில் பிள்ளைபிறக்குங்காலம் தகப்பன் அசல்வீடு என்பன-7-8-9-ல்-இரவிநிற்க அது சரமாகில் வழியிலென்பன, திரமாகில்-ஊர்க்குள் - என்பன, உபயமாகில் பொதுவிலென்பன-என்றவாறு 1

ஜென்மத்தானத்தின்மந்தன் சேர்ந்திடச்செவ்வாயேழில்
வென்மத்தான்மதிக்குமுன்பின் வெள்ளிமான்மேவினாலும்
வன்மத்தாலன்றேதந்தை வதிந்திடும்பரதேயத்திற்
கன்மத்தாலமரர்க்காகக் கடைந்தெழுமமிர்தமன்னாய்.

இ-ள். இலக்கினத்திற் சனிநிற்க எழாமிடத்தில் செவ்வாய் நிற்க மதிக்கு முன்பின் சுக்கிரன் புதனிற்கத் தந்தை பரதேசமென்று சொல்லுவர். எ-று. 2

திங்களுக்கொன்பதாறி லைந்தினிற்செவ்வாய்காரி
தங்கிடிற்பிள்ளையைத்தாய்தவிர்த்துவிட்டொழியும்பொன்னன்
பங்கமின்மதியைப்பார்க்கி லுதயலக்கினத்தைப்பார்க்கிற்
சங்கணிகர்த்தாய்வாழ்நா டழைத்திடுஞ்சுகியுமாவள்.

இ-ள். சந்திரனுக்கு-9-6-5-ல்-செவ்வாயும் சனியும் கூடிநிற்கில் தாய் பிள்ளையைத்தவிர்ந்து போவாள், சந்திரலக்கினத்தை அல்லது ஜன்மலக்கினத்தை வியாழம்பார்க்கில் நிறைந்த ஆயுசும் சுகஜீவியுமாய் இருப்பள். எ-று. 3

தனுவினினின்றதிங்க டன்னைச்சேய்சனிபார்த்தாலுங்
கனவிலுந்தாயைப்பிள்ளை காண்கிலன்மதிக்காயத்தில்
வினவியசனியுஞ்சேயு மேவிடமதியைநற்கோண்
மனுவொடுநோக்கின்மைந்தன் மறுதாய்கைவசமாய்வாழ்வன்.

இ-ள். தனுவில்நின்ற சந்திரனைச் செவ்வாயாதல் சனியாதல் பார்க்கிலுஞ் சுபதிஷ்டியில்லாதிருந்தாலும் வாலவயதில் தாய்மரணம், சந்திரனுக்கு-11-ல்-சனியுஞ் செவ்வாயுங் கூடிநிற்கச் சந்திரன் சுபக்கிரகங்களைப் பார்ப்பானாகில் மறுதாயின் கைவசமாய் வாழ்வன்

கருதியங்கிசியிற்றோன்றுங் காதலனிலக்கினத்தைப்
பருதிநோக்கிடவேதந்தை பதியினிற்பிறந்தானென்க
வருகதிரவெள்ளிநோக்கின் மாதாவின்றேசமாகுந்
தருபகற்பிறந்தாற்றந்தை தாய்சனிதிங்களேக்கில்.

இ-ள். ஜன்மலக்கினத்தை ஆதித்தன்பார்க்கில் தகப்பனுக்கு இஷ்டமான மனையிற் பிறந்தவன், சந்திரன்பார்க்கில் தாய்மனையிற் பிறந்தவன். எ-று. 5

தாரத்திற்கோட்களெல்லாஞ் சார்ந்துசேர்தனுவினிற்கு
நீரொத்தமதியைநோக்கி னிலைதவிர்ந்தசலிற்பெற்றாள்
வாரொத்தமகரகும்ப காற்களின்மதிதானேறி
லேரொத்துநிறைந்தமாதே யிருட்டினிற்பிறந்தபிள்ளை.

இ-ள். தனுசில்நின்ற சந்திரனைகிரகங்களெல்லாம் ஏழில்நின்று பார்க்கில் பிறர்மனையிற்பிறந்தபிள்ளை, சந்திரன் மகரக்கால் கும்பக் கால் ஏழில் இருட்டுவீட்டிற்பிறந்தபிள்ளை. எ-று. 6.

சுகத்தினிற்றிங்கண்மேவச் சூரியன்சனியன்பார்க்க
வகத்திருள்வீட்டிற்பெற்ற ளம்புலிசனிநாலோங்கச்
சகத்திருள்ராசிதோன்றச் சந்ததியிருட்டிற் * சாத
மிகத்திருமூவர்நீச மேவிடத்தரையிற்சாதம்.

இ-ள். இலக்கினத்துக்கு-4-ல்-நின்றசந்திரனைச் சனிபார்க்கில் இருட்டுவீட்டிற்பிறந்தபிள்ளை, சனியுஞ் சந்திரனுங்கூடி-4-ல்-நிற்கக் கும்பமுதற் கடகம்வரைக்கும் இருட்டுராசி அதிலே ஒருராசியிற் பிறந்தால் இருட்டுவீட்டிற்பிறந்தபிள்ளை, மூன்று கிரகம் நீசத்து நிற்குமாகில் தரையிற்பிறந்தபிள்ளை தரித்திரனுமாவான். எ-று. 7

காலிரண்டிராசிதோன்றிக் காரிநின்றிடக்காமத்தி
லாலியகருமமாறி லவனிசேய்நின்றுநோக்கில்
வேலியன்கண்ணுய்சாதன் மீனத்தில்வெள்ளிநோக்கிற்
பாலியலன்னைக்கேற்ற பதியினிற்பிறந்தபாலன்.

இ-ள். மிதுனங்-கன்னி-மகரம்-கும்பம் - இதிலொன்று இலக் கினமாய் அதிற் சனிநிற்க-7-10-6-ல்-செவ்வாய்நின்றுபார்க்கிற் சுடு காட்டிற்பிறந்தபிள்ளை, சுக்கிரன் - மீனத்தில்நின்றுபார்க்கில் தாய்க் கிஷ்டமான மனையிற் பிறந்தபிள்ளை. எ-று. 8

குறைவிலாமதனின்றேளிற் குலவியதனுவைநோக்கி
லறைதருமன்னைசுற்றத் தழகியவிடத்தில்வெய்யோ
னிறையுறைமனைபுத்தேளி லிலங்குமாலயத்திற்பொன்னே
னிறைமகவகத்துமாலு நிகழ்த்துமோவியஞ்சேர்வீடு.

இ-ள் பூரணச்சந்திர னேழில்நின்று லக்கினத்தைப்பார்க்கில் தா யினுடைய சுற்றத்தார்மனையிற் பிறந்தபிள்ளை, ஆதித்தன் பார்க்கு மாகில் இராஜாக்கள்மனையில் அல்லது தேவாலயத்திற் பிறந்தவன்,

* சாதகம்—சாதம்—எனமருவிற்று.

வியாழம் பார்க்குமாகில் பூசையறையில் அல்லது யாகஞ்செய்தமனையிற் பிறந்தவன், புதன் பார்க்குமாகிற் சித்திரமெழுதிய வீட்டிற் பிறந்தவன். எ-று. 9

பாவராமூவரென்று பனிமதியுடனேநிற்கிற்
றேவராயினுமன்னைக்குத் தீவினைகொடுக்கும்பாவ
ரேவராகிலுநாலேழி லிருந்திடச்செனித்தாலன்னைச்
சாவராநற்கோணேக்கிற் றவிர்ந்திடுமிடர்கடானே.

இ-ள். சந்திரனுடனே மூன்று பாபகிரகங்கூடினால் தாய்க்குப் பீடையுண்டாம். எந்த பாபக்கிரகமானாலும லக்கினத்துக்காகிலும், சந்திரனுக்காகிலும், ஏழினும் நாலினும் நின்றாற் றாய்மரணம், சுபக்கிரகங்கள்பார்க்கில் தோஷமில்லை எ-று. 10

களக்கறைமதிய நின்ற ராசிமுற்கூறதாகில்
விளக்கினினிறைந்த வெண்ணெய்விளம்புவர்நடுவிற்பாதி
யளக்கருங்கடையிலற்பந் திரியுமவ்வளவேயாகு
மிளக்கமாய்ப்பொருமிவட்ட மிட்டெழுமிருதனத்தாய்.

இ-ள். பிள்ளைபிறக்கும்போது சந்திரனின்றராசி முதற்கூறாகில் விளக்கிலேநிறைந்த எண்ணெயும் முழுத்திரியுமென்பது நடுக்கூறாகிற் பாதித்திரியுமாம். எ-று. 11

சரந்திரமுபயமூன்றி லாதவனுரைதாவிற்
கரந்தனனடவேதீபக் காட்சியும்வேறுகாணு
நிரந்தரமுள்ளதாகு நின்றதிற்பாதியாகு
முருமுதயத்துக்கோளுந் திரேகாணக்கோளும்வாசல்.

இ-ள். பிள்ளை பிறக்கும்போது ஆதித்தன் சரத்தில்நின்றால் விளக்குபேதித்து வேறேவிளக்கென்பது, திரமாகில் முதல்வைத்த விளக்கு முற்றுமிருக்கும் உபயமாகில் விளக்கிருந்த விடம்விட்டு பேதித்திருக்குமென்பது இலக்கினதிபதியு மிலக்கினத்தில் நின்ற கோட்களும் இலக்கினத் திரேகாணதிபதியும், இவர்கள் மூன்று பேரில் பெலவானிடத்திலே வாசல். எ-று. 12

சூரியன்சுங்கனுக்கும் கீழ்த்திசைதுலங்கத்தெற்கே
காரராவாரனுக்குங் கருதுமேற்றிசையைக்காரி
நீரியிற்றிங்கனுக்கு நேரிலுத்தரத்தைமால்பொன்
ஞரியநோக்குமென்றே யறைந்தனர்தமிழையாய்ந்தோர்.

இ-ள். ஞாயிறும் வெள்ளியுமீ கிழக்குத்திசையை நோக்கும் செவ்வாயும் பாம்புந் தென்றிசையைநோக்கும், சனியுந் திங்களும் மேல்திசையைநோக்கும், புதனும் வியாழமும் வடதிசையைநோக்கும், இப்படி திசையையறிக. எ-று 13

காரியின்கோட்களெல்லாங் கண்ணுறிற்கலைந்தவீட்டைச்
சீரியன்மனையதாக்குஞ் சித்திரவீடுமாலாஞ்
சூரியன்றிரண்மரத்தாற் சுங்கனூதனம்பொன்னாட்சி
பூமன்றியாலெரிந்து புதுக்கியவீடதாமால்.

இ-ள். கிரகங்களையெல்லாஞ் சனிபார்க்குமாகில், முன்கலைந்த வீட்டைப் புதித்து எடுத்தவீட்டிற் பிறந்தவன், புதன்பார்க்கிற் சித்திரமெழுதியவீட்டிற் பிறந்தவன், சூரியன்பார்க்கில் மரந்திரண்ட வீட்டிற்பிறந்தவன், வெள்ளிபார்க்கில் புதுவீடென்பதாம், வியாழம் பார்க்கில் ஆட்சிமனை யென்பது, செவ்வாய்பார்க்கில் தீயால்வெந்தழிந்தவீட்டைக் கட்டினவீட்டிற்பிறந்தவன் எ-று. 14

மறிகுளிர்துலைதேள்கும்பம் வந்ததால்வாழ்மனைக்கு
குறிகிழக்காகுஞ்சென்மங் தோதண்டமிதுனங்கன்னி
செறிகயல்சேர்மனைக்குச் சென்மமும்வடபாலாகுந்
தரிவிடைமேற்கர்ஞ்சிங்கந் தாவுமான்றெற்கதாமே.

இ-ள். மேடம் கர்க்கடகம்-துலாம் விருச்சிகம் கும்பம் இந்த ராசியிலே ஒன்று ஜென்மமாகில் வீட்டிற்கிழக்கடையப் பிறந்தவன் தனுசு மிதுனம் கன்னி மீனம் இதிலொன்று ஜென்மமாகில்வீட்டில் வடக்கடையப்பிறந்தவன், ரிஷபமாகில் மேற்காமென்பது, சிங்கமாகில் தெற்காமென்பது. எ-று. 15

இலக்கினமுதலாய்த்திங்க ளிருக்குமவ்வோரைமட்டுந்
துலக்கமாயிருக்குங்கோட்க டொடையதாமறையினுள்ளோர்
விலக்கருமிலக்கினத்தார் தொகையதாய்விரவுமுள்ளே
கலக்கருமிருந்தராசி கலந்தகோள்வெளியிற்காணும்.

இ-ள். பிள்ளைபிறந்த லக்கினமுதலாய்ச் சந்திரனின்றராசி வரைக்கும் கண்ட தொகைப்பேர் உள்ளிருந்தாரென்றும் இலக்கினம் இந்தராசிக்காலென்று அறிந்து அத்தொகைப்பேர் உள்ளிருந்தாரென்றுஞ்சொல்வது, இதில் லக்கினபெலனுஞ் சந்திரபெலனும் பார்த்துச்சொல்வது லக்கினத்துக்குஞ் சந்திரலக்கினத்துக்கும் முன்பின்னிருந்த கோட்களைக்கண்டு வெளியிற் பேர்த்தொகைசொல்வது, முன்பின்கிரகமில்லாமலிருந்தால் நோக்குங்கோட்கண்டு வெளியிற் பேர்த்தொகைசொல்வது. எ-று. 16

உச்சமூலந்தன்வீட்டி லிருந்தகோளுயர்ந்தசாதி
கொச்சைநீசக்கோண்மூடங் கொண்டகோடீயரிக்கோண்
மிச்சமாய்வெளியுமுள்ளு மேவினோர்கீழ்சாதிப்பேர்
நச்சமாம்விழியாய்லக்னக் கானுதனிறமேநாட்டும்.

இ-ள். பிள்ளை ஜெனிக்குங்காலத்தில் உச்சத்தானக்கோள் மூலத்தானக்கோள் ஆட்சித்தானக்கோள் இவர்கள் மேல்ஜாதியென்றறிவது நீசமுடன் சத்துருக்கோள் கீழ்ஜாதியென்றறிவது, மித்திரக்கோள் சமஜாதியென்றறிவது இலக்கினமெந்த ராசிக்காலோ அந்தக்கானுக் கதிபதி நிறமேயென்றறிவது. அல்லது ராசியிலே நின்றகிரகநிறமுஞ் சுபராசியாகில் ராசிநிறமுஞ்சொல்வது. எ-று. 17

இரத்தமேவெளுப்புச்சாம மிரத்தமேவெளுப்புபச்சை
தரத்திருபொன்பொன்வெள்ளை தனிக்கறுப்பரத்தமென்றே
யுரைத்தனர்மேடமாதி யொளியவனுகில்வெள்ளை
நிரைத்தவெண்ணிறத்தன்பச்சை பொன்னிறம்வெண்ணீருட்டே.

இ-ள். ஜென்மலக்கினம் மேடமாகில் இரத்தவர்னம், ரிஷபமாகில் வெள்ளை, மிதுனமாகில் பச்சை, கர்க்கடகம் சிங்கம் வெளுப்பு,

கன்னி-பச்சை, துலாம்-கறுப்பு, மீனஞ்-சிவப்பு, இப்படிக்கு ராசி நிறமறிவது, சூரியனுஞ்-சந்திரனும் - வெள்ளை, செவவாய் - சிவப்பு, புதன்-பச்சை, வியாழம்-பொன்னிறம், சுக்கிரன் - வெள்ளை, சனி-ராகு-கறுப்பு, கேது-சிவப்பு, இப்படி கிரகநிறமறிவது. எ-று. 18

நாடியவுதயராசி திரேகாணமுதற்கூறுகிற்
றேடியசிரம்வலக்கண் செவிமூக்குத்திகழ்சதுப்பு
மூடியமேல்வாய்கீழ்வாய் மிடப்புறத்துறுவுமோவாய்
கூடியகபோலமூக்குக் கூர்செவியிடக்கண்கூறே.

இ-ள். இலக்கின முதல்திரேகாணமாகில் இலக்கினந்தலை-2 மிடம் வலக்கண்-3-மிடம் செவி-4-மிடம் மூக்கு-5-மிடம் கதுப்பு-6 மிடம் மேல்வாய்-7-மிடம் கீழ்வாய் - 8 - மிடம் இடப்புறத்து மேல் வாய்-9-மிடங் கதுப்பு, 10-மிடம்-மூக்கு, 11-மிடம்-செவி, 12-மிடம் கண். எ-று. 19

கூறியசென்மராசி லக்கினநடுக்கூறுகின்
மீறியகழுத்துத்தோள்கை மேவுரம்விலாமேற்குக்கி
மாறியவுந்திமேலாம் வயிறுகைகீழுமாங்கை
மீதேறியவுரந்தோள்கண்டந் தெரிவதாய்ச்செப்புவீரே.

இ-ள். பிள்ளைபிறந்தராசி நடுத்திரேகாணமாகில் இலக்கினம் கழுத்து- 2-மிடம் தோள்:3-மிடம்-கை-4-மிடம் மேல்வாய் 5 மிடம் விலா 6 மிடம் மேல்வயிறு 7 மிடம் நாபிக்குமேல்வயிறு 8 மிடம் இடது விலாப்பக்கம் 9 மிடம் கை 10 மிடம் உரம் 11 மிடம்தோள் 12 மிடம் கண்டம். எ-று. 20

செப்பியசென்மராசி யந்தியஞ்சென்மமாகி
லப்புறதொப்புளாதி சகலமாண்குறியோடுறு
வைப்புறுசாணுக்சங்கம் வருபதமிடக்கால்சங்கத்
தப்புறச்சாணுமூரு சகனமாண்குறியாய்ச்சாற்றும்.

இ-ள். பிள்ளைபிறக்தராசி கடைத்திரேகாணமாகில் இலக்கி னந்தொப்புள், 2 மிடம் வலது சகனம் 3 மிடம் ஆண்குறி 4 மிடம்

தொடை 5 மிடம் முழங்கால் 6 மிடம் கணைக்கால் 7 மிடம் இரண்டு பாதம் 8 மிடம் இடதுகணுக்கால் 9 மிடம் முழங்கால் 10 மிடம் தொடை 11 மிடம் சகனம் 12 மிடம் ஆண்குறி. எ-று. 21

எந்தத்தானத்தில்வெய்யோ னிருந்தனனத்தாணத்தாற்
பந்தித்தமாற்காலாலும் பணிமதிக்கொம்பானீரிற்
சந்தித்தசெந்துவாலுந் தரைமகன்சத்திரத்தீயாற்
புந்திக்குமண்மரத்தாற் புண்புகர்சனியுங்கல்லே.

இ-ள். பிள்ளைபிறந்தராசி மூன்றுந்திரேகாணத்தி லின்னதிரே காணமென்றறிந்து உடலை மூன்றுவகுப்பாய்ச்சொன்னதிலே எந்த தானத்திற் சூரியனின்றானோ அந்ததானத்தை மரத்தினாலே பீடை நாற்கால்ஜீவனாலும் பீடை தழும்பு சந்திரனுக்குக் கொம்பினாலும் ஜல ஜெந்துவாலும் பீடை செவ்வாய்க்குத் தீயுங்கருவியினாலும் பீடை புதனுக்கு மண்மரத்தினாலும் பீடை வெள்ளிக்கு கொட்டுகிற ஜெந்துவினாலும் பீடை சனிக்கு கல்லினாலே பீடை. எ-று. 22

அம்புலிமால்பொன்சுங்க ஞரியக்கோளாய்நின்று
னம்புமுன்சொன்னதான நசைபெறமருவுண்டாகும்
வெம்பியகோட்கணின்றால் விரணமுந்தழும்புமேவுங்
கம்புலமிடற்றாய்ராசி நண்டுமுன்னிடையிற்காட்டும்.

இ-ள். செனித்தபிள்ளைக்கு முன்சொன்ன அவயவங்களிலே பூரணச்சந்திரன் புதன் வியாழம் வெள்ளி இவர்கள் சுபராசியடைந்து பெலமாய் நிற்பாராகில் அழகியமறுவுண்டாம், ஞாயிறு செவ்வாய்-சனி நிற்பாராகில் அவரவர்களுக்குச்சொன்ன கருவியினாலே புண் தழும்பு வடுவுண்டாம், திராராசியாகில் பிறக்கும்போதுண்டாம் சராராசியாகில் அல்லது உபயராசியாகில் நின்றகிரகத்திற்கும், பிறந்தபிறகு மறுவுண்டாம் இது அவரவர்களுடைய சித்திரங்களிலுண்டாம். எ-று. 23

எழினிலெட்டீராறு நிவையினிற்குறைந்ததிங்கட்
டாழ்வுறுசுபர்களோடே தங்கிடத்தனக்கோணேக்கப்
பாழ்படக்கேந்திரத்திற் பதிந்திடப்பாவரோடே
சூழ்மதியாறெட்டாகிற் றோன்றல்சாந்துணிந்துசொல்லே.

இ-ள். பிள்ளைபிறந்த லக்கினத்துக்கு 7-ல் 8-ல் 12-ஜீரணசந்திரன் பாவரோடேகூடிநிற்கச் சுபகேந்திர மில்லாதிருக்கப்பிள்ளை மரணம் எ-று. 24

சந்ததிதோன்றராசிக் கதிபதிசுதிசெய்கோளோ
டுய்ந்திடுமவரிற்றோற்கி லுறுபாவனுடனேசாவாம்
வந்தசேய்க்கேழிற்பாவர் வந்திடவாழ்சென்மத்திற்
றந்திகெட்டழிந்ததிங்கள் சார்ந்திடப்பாலன்சாவாம்

இ-ள். பிள்ளைபிறந்தராசிக்கதிபதி பாவக்கோளுககு யுத்தத்திலேதோற்கில் பாலன் உடனேமரணம் அல்லது லக்கினத்திலேபாவக்கோளுடனே சமசந்திரனிற்க 8-ல் 7-ல் பாவாள்நிற்கச் சுபன் பாராதிருக்கப் பிள்ளைமரணம் எ-று. 25

செருக்குஞ்சிக்கமுதலாறிற் சேர்ந்தகோட்கள் வருங்கோளைப்
பெருக்கவெல்லுங்குடமாதி யாறினின்றபெருங்கோளே
விரிக்கிவ்வருங்கோளவைவெல்லும் வெற்றிதோல்விமெல்லியலா
யுரைக்கில்வெற்றிபுகர்தெற்கே யொழிந்தால்வெற்றிவடக்குறிலே

இ-ள் கிரகயுத்தம் வெற்றிதோல்வியறிந்து சிங்கமுத லாறுராசியிலேநின்ற கோட்கள் வருங்கோட்களைவெல்லும் கும்பமுதல்ஆறுராசியிலேநின்றகோட களைவருங் கோட்கள்வெல்லும் கிரகயுத்த சங்கையறியும்படி எந்தத்தானத்துக் கதிபதியானாலும் ஒருகிரகத்துடனேகூடி ஒருராசியிலிருந்து ஒருகாலேறிற் கிரகயுத்தமுண்டு இருவரிற்றோற்றவன் எந்ததானத்துக் கதிபதியோ அந்ததானம் நாசமாம். எ-று. 26

சந்தித்தநாலேழெட்டிற் றருபத்திற்பாவரோடே
வந்திக்குமதிநின்றாலு மையத்தின்மதிநின்றாலுஞ்
சிந்திக்குந்தீக்கேழெட்டிற் றீக்கோட்கள்சேருமாகி
லந்திக்குமுன்னேபால னன்னையோடழியுமாதே.

இ-ள். பிள்ளைபிறந்தலக்கினத்திற்கு 4-7-8-10-ல்-சந்திரன்பாவருடனேகூடிநின்றாலும் இந்தத்தானங்களில் பாவர்நடுவே மதிநின்றாலும் திக்கு 7-8-ல் பாவர்நின்றாலும் தாயும் பிள்ளையும் மரணம் என்றவாறு. 27

ஓரையினெடுக்கத்திங்க ளுதித்திடவுயார்ந்ததற்கோள்
பார்வைதானின்றிப்பாவர் பத்தினிலாறிற்பார்க்கக்
காரைவென்விருந்தகோதை கயல்விழிமானேகால
ஞரையுமவனிதங்க வரைக்கணமவன்பொருந்தான்

இ-ள். பிள்ளைபிறக்குங்காலம் ராசி கடைசியில் சந்திரனிற்ப சுபக்கிரகம் பாராதிருக்க இலக்கினத்துக்கு 6-10-ல் பாவர்நிற்கப் பிள்ளை மரணம் எ-று. 28

மேடந்தேளரிசரன்மாஞ மிவையினில்விளங்குந்திங்கள்
கூட்டவெட்டதனிற்செவ்வாய் குறுக்கிடக்கொடுங்கோ ளேக்க
வீடழிந்துடனேதாயு மெச்சமுங்கருவியாலே
பாடுறுமுதியோர்முன்னே பகர்ந்தனர் பரிந்துமாதே.

இ-ள். பிள்ளைபிறக்குங்காலம் மேடம் சிங்கம் விருச்சிகம் மகரம் கும்பம் இந்தராசியொன்றிலே குறைந்ததிங்கள்நிற்க அந்ததிங்களுக்கு எட்டில் செவ்வாய்நிற்க திங்களைப்பாபக்கிரகம் பார்க்கப்பிள்ளையும் தாயும் கருவியினுலே மரணம் எ-று. 29

விரித்திடுமோரைதன்னி லிதுவேமச்செவ்வாயெட்டிற்
றரித்திடச்சுபத்தில்வெய்யோன் சார்ந்திடவியத்திற்காரி
பரிந்திட்டநற்கோளேக்கும் பாழ்படப்பிறந்தபாலன்
மரித்திடுமுடனேநீல மலர்விழியணையமானே.

இ-ள். பிள்ளைபிறந்தலக்கினத்திற் சந்திரன்நிற்க 8-ல் செவ்வாய்நிற்க 9-ல் ஆதித்தன்நிற்க 12-ல் சனிநிற்க சுபக்கிரகம் பாராதிருக்கப் பிள்ளைமரணம் எ-று. 30

ஐந்தொன்பதீராறேழி வாயுத்தானத்திலொன்றி
னேந்தின்பங்குறைந்ததிங்க ளசக்கோளுடனேநண்ண
வந்தின்பந்தராதுறைத்தன் மரணமால்சீவன்வெள்ளி
தந்தின்பநோக்குண்டாகிற் றணிந்திடுமிடர்கட்டானே

இ-ள். பிள்ளைபிறந்தலக்கினத்தில் 5-7-8-9-12-இந்ததானங்களிலே குறைந்ததிங்கள் பாலருடனேகூடிநிற்கப் பிள்ளைமரணம் இந்தச்சந்திரனைச் சுபக்கிரகம்பார்க்க மரணமில்லை எ-று. 31

சிரியலறிந்தனலோர் தெளிந்ததாமரிட்டகால
மாரியலறியவேண்டி லம்புலியோர்டுய்வெங்கோட்
சூருயன்முதற்பாபக்கோட் டடர்ந்தவர்பெலத்தைக்கண்டு
காரியற்குடிலவ்வோரை மாதநாட்கழித்தார்கற்றோர்

இ-ள். இதுவரையில் பாலாரிட்டஞ் சொன்னவைகளுக் கெல்லாம் மரணகாலமறியவேண்டுல் சூரியன் முதலாயுள்ள பாவக்கோட்களிலே எந்தப்பாவக்கோள் பெலவானென்றறிந்து பெலமுடைய பாவக்கோள் சந்திரனுடனேகூடியிருந்தாலும் சந்திரனைப் பார்த்தாலும் அந்தப்பாவக்கோள் இராசிமாதம் அந்தபாவக்கோளென்று மகரராசிமாதம் அவனின்ற நட்சத்திரம் அவைகளிலே பிள்ளை மரணம் என்றவாறு. 32

பிரசூதி லட்சணம்

பாலாரிட்டம்-முற்றிற்று.

பாவப் பொது.

ஆட்சியாமுச்சமூலமவசவர் தானின்றானிற்
காட்சியாம்பலன்களாகுங் கைவரும்புரணமாகுந்
தாட்சியாய்நீச்சமூடந் தருவிருபகைவீடானிற்
சூட்சமாம்பலன்களற்பந் துன்பமேதுடருங் கோட்கள்

இ-ள். யாதொருகோட்களாட்சியுச்சமூலத் திரிகோணம் அதிநட்பு நட்புவீடாயிருந்தாலும் இந்தக்காலேறினாலும் அவர்கள்கொடுக்கிறபலன் மிகுதியும் வாதனை யாதொருகோள் சூரியனுடனே கூடி அஸ்தங்கிதமானாலும் நீசமாய் அதிசத்துருவா யிருந்தாலும் அற்பபலன்கொடுக்கும் எ-று. 1

நீசராசியி லநின்றகோளுச்சமூலக்காலில்
வாசமாமரைப்பலன்கண் மத்திபமுச்சமூலத்
நீசரால்நின்றநீசக் காலேறினுமீவர்
தாசராயுலகத்துத்துந் தானமுமகலுநீசம்

இ-ள். யாதொருகிரகங்கள் செனிக்குங்காலத்தில்நீசராசியிலே நின்று உச்சக்காலேறில் அவர்களுக்கு மத்தியில் லாதிபலன்கொடுக்கும் உச்சமூலராசியிலேநின்று நீசக்காலேறினால் கடைசியிலே பாதிபலன்கொடுக்கும் இருந்தராசியுமேறுங்காலும் நீசமாகில் அந்தக் கிரகபலன் இடருகிய கெட்டபலன்கொடுக்கும் அல்லது வறுமையும்லோகநிந்தனையுமுண்டாம் எ-று. 2

உச்சமூலந்தன்னாட்சி யுறுமதிநட்புநட்பு
மிச்சமாஞ்சமனென்றைக்கும் பகையதிபகையிலங்காக்
கொச்சையாநீசமென்றே கொள்கையீந்திடவேகோட்கள்
கச்சணிமுலையாய்நின்ற கதிபலன்கண்டுசாற்றே

இ-ள். கிரகங்களுக்குப் பெலாக்கிரமமறியும்படி உச்சமூலராசி ஆட்சிநட்பு நட்புச்சமன் சத்துரு அதிசத்துருநீசம்இந்தவொன்பதுமறியவும் எ-று. 3

உற்பத்தியுச்சமாதி பெலன்கடான்முழுதுமூலங்
கற்பித்தாரொன்றுமுக்காற் றனதரைகாலரைக்கால்
விற்பத்திகாலரைக்கான் மேவுமாகாணிமின்னே
வற்பித்தசத்ருநீச மரைக்காணிவகையிற்காணே

இ-ள். உச்சத்துக்கு பூரணபெலன் மூலத்துக்கு முக்கால்பெலன் ஆட்சிக்கு அரைப்பெலன் அதிமித்திரனுக்கு காலேஅரைக்கால் பெலன் மித்திரனுக்கு கால்பெலன் சமனுக்கு அரைக்கால் பெலன் சத்துருவுக்கு மாகாணிபெலன் அதிசத்துருவுக்கு அரைக்காணிபெலன் நீசனுக்கும் அது இந்தப்படியே கோட்களின் பெலனறியவும் என்றவாறு. 4

துலங்கியேபெருக்கவாழுஞ் சுமுகனுஞ்சொந்தவன்ன
நலங்கொளுமனங்களிப்பா ஞாயவுள்ளத்தன்சாந்தன்
கலங்கிலானுயர்ந்தசத்திக் காதிபல்லுயிரைக்காய்வன்
வலங்கொண்மெய்பன்னதிட்டன் மனப்பயனுடவுமாதே

இ-ள். உச்சமாதிபாகம் பலன் சரீரகாந்தியும் வெகுசெல்வமுமுடையவன் மூலத்துக்குச் சஞ்சாரமில்லாம் விருப்பிடத்திலேசுகஜீவனமாம் ஆட்சிக்குச் சுகசோபனபுருஷன் அதி நட்புக்குச்சாந்தன்

ன், ஞாயகுணசீலன், நட்புக்குத்திடகுணசீலன், சமனுக்குப் பல பீவடபண்ணிச் சீவனம்பொருகையான், சத்துருவுக்கு அங்கத்திற் குறையுள்ளான்-அதி சத்துருவுராசிக்கு சகலஜனவிரோதி துஷ்டன், நீசராசிக்கு வறுமையுமனப்பயமுமுள்ளான் இந்த அடைவே கோள்களறியவ-று. 5

சரந்தனைமூன் றுகூறுய்ச் சனித்தபேர்முற்கூறுகில்
வரந்தருபெலன்கண்மீறு மையமத்திமமாறி
னிரந்திடுமதமமாகு நிகழ்கதிர்மூன்றினுக்குங்
கரந்திடுமதியேயேறுங் கடையின்மத்திமமாய்க்காணும்.

இ-ள். ஜெனித்தராசி சராதிமுற்கூறுகில் வெகுஉத்தமபலன் நடுக்கூறுகில் மத்திம பலன், கடைக்கூறுகில், அதமபலன்-திராசிக்கும் இப்படி அதம முத்தமம் மத்திபம் எ-று. 6

சகத்தினுளுபயமுன்னே தனைபதாஞ்சனியேபார்க்கி
லிகத்தினிற்பலன்களெல்லா மத்திமமிடையிற்றுட்சி
சுகத்தினையருளுமீறிற் சொல்லியராசிமூன்றும்
வகுத்தனர்வராகமோரை வடமொழிவழுத்துநூலோர்.

இ-ள். உபயராசிக்கு முற்கூறு மத்திமபலன், நடுக்கூறு அதமபலன், கடைக்கூறு உத்தமபலன், இந்தவகையால்சரந்திர முபயமூன்றுவகை ராசிக்கும் அறியவும், அந்தராசியிலேநின்றகோளுக்கு இந்தடவே பலன்சொல்வது எ-று. 7

ஆறினையெட்டைமற்றை யீராறையடைந்தகோளு
நீறுமாறெட்டீராறுங் கோளொடுநின்றகோளுஞ்
சீறியபகைநீசத்திற் றீக்கோளைச்சேர்ந்தகோளு
மூறிடுமென்பதல்லாற் பயனென்றுமுதவிடாதால்.

இ-ள். யாதொருகோட்கள்-6-8-12-ல் நிற்கினும், இந்தத்தானத்துக் கதிபதியுடனே கூடினகோளும்பகை, நீசவீட்டிலிருந்த கோளும் விபரீதபலன்களைக்கொடுக்கும் எ-று. 8

எந்தத்தானத்துக்கேனும் பலன்சொல்லவேண்டுமாகி
லந்ததானத்தையன்னோர் லக்கினமாகவைத்து
பந்தித்தவோரையாதி பன்னிருதானத்துள்ளுஞ்
சிந்தித்துப்பலன்களெல்லாந் தேறியேயறியச்செப்பே

இ-ள். பன்னிருதானத்துக்குப் பலன்சொல்லவேண்டுமாகில் அந்ததானத்தையுந் தானுதிபதியையும், லச்கினமாகவைத்து பாவாதிபதியையும், பாவத்தையும்பார்த்துப்பலன்சொல்வது எ-று. 9

அதிபன்காரகனுமென்ன வுறைந்திடுமிவர்கடாமு
முதயத்தானுக்குமிக்க வுறவுண்டேற்பயனுமுண்டாஞ்
சதிசெய்சத்துருவேயாகிற் பயனுஞ்சத்துருவாமென்பர்
மதிநுதன்மாதேயுச்ச முதயனேற்பலனேநல்கும்

இ-ள். உதயநாதனுக்குயாதொருபாவத்துக்கதியதியுங்காரகனுமுறவாகில் வெகு உத்தமபலன், சத்துருவாகில் விபரீதபலன், உதயநாதனுச்சமாகில்-உத்தமபலன் எ-று. 10

நட்பினிலாட்சிதன்னி லுசசத்தினண்ணினும்
பெட்புறநற்கோளோடும் பிரிவிலாதிருந்பிரேனும்
விட்பிலாவுதயநாதன் வர்த்தனைவிரும்பிடாதே
திட்பமாம் பலன்கணல்குஞ் சேயரிகமலக்கண்ணாய்

இ-ள். யாதொருகோள் உச்சமூலம் ஆட்சி நட்புவீட்டிலிருந்தாலும், சுபருடன்கூடினகோளும் லக்கினுதிபதிக்கு நட்பாயிருந்தகோளும்கொடுக்கும்பலன் வர்த்தனையுண்டாம் எ-று. 11

பூண்டதானங்கட்கேனும் பொருவில்காரகக்கோட்கேனுங்
காண்டகுமுன்னும்பின்னுங் கருதியதிரிகோணத்து
மீண்டியவெட்டுந்தீக்கோ ளிருப்பவெங்கோட்கணோக்கின்
மாண்டிடும்பலன்கணற்கோ ணோக்கிடிற்றேடமாறும்.

இ-ள். மாதுருதானத்திலும் தானத்துக்கு முன்னும்பின்னும் அந்ததானுதிபதி காரகாளிவர்களுக்கு முன்னும் பின்னும் தானுதிபதிகாரனுக்குந் திரிகோணத்திலே அல்லது அஷ்டமத்திலேஇந்தவகைப்படி தானங்களிலே பாவக்கோள்நிற்கில்விபரீதபலன், சுபக்கோள் நோக்கில் தோஷமில்லை எ-று. 12

எண்ணியகாரகக்கோ ளியல்பெறுதானஞ்சேரி
னண்ணியபலன்களெல்லா நவையுறுமென்பர்வெள்ளி
பெண்ணிடத்தானத்தின்கோள் பெறுமகத்தானஞ்சேரிற்
றிண்ணஞ்செய்மனைவிநாச மென்றனர்தெளிந்தநூலோர்

இ-ள். யாதொருதானத்துக்காரகனுச்ச நட்பாட்சிமூல மிருக்கி லும், வெள்ளிபெலத்துடனிருந்தாலும் அந்தபாவம் வார்த்தனே ஐந் திற் குடையவன் ஏழில்நிற்கதாரத்துக்கும் புத்திரனுக்கும் தோஷ முண்டு எ-று. 13

கொள்ளுந்தானங்கடம்மைக் கூறியதானத்தின்கோ
ளுள்ளகாரகநற்கோளோடுந்திரிகோணந்தன்னில்
விள்ளருங்கேந்திரத்தில் வீறெடுநிற்பாராகில்
வெள்ளருமந்தந்தானப் பலனியல்பெய்துமாதோ.

இ-ள். யாதொரு பாவாதியாகிலும் அதற்குக்காரகனுகிலுங்கே ந்திரத்திரிகோணங்களிலே சுபாளுடனேகூடி பெலத்து நின்றால் அ ந்தபாவபலன், உத்தமபலன் கொடுக்கும் எ-று. 14

மாதராய்த்தானத்தின்கோள் வழுவில்காரகனுங்கோட்கள்
கோதிலாதொருவன்சன்ம லக்னத்ரிகோணம்பற்றி
பாதியாய்க்கண்டந்தன்னி லணையுமப்பாபலன்களெல்லா
நீதியாயவனேச்சாரும் லெக்கினேசனேயுநேர்வார்

இ-ள் யாதொருபாவாதிகாரன்கேந்திரத் திரிகோணத்தில்நிற்க அந்தபாவம உத்தமபலன், லக்கினேசன்கொடுக்கிறபலன் முன்கொ டுக்கும் எ-று. 15

காரகன்றனத்தின்கோள் கலந்தநாலாறெட்டாகச்
சேருநாட்டிரிகோணத்திற் றீக்கோட்கள்சேர்ந்தநாளி
ஞரிகள்சனிசேர்கால நண்ணுமிக்கோளும்வந்தால்
வாரமாங்கோட்கட்கேற்றூர் மரணத்தையடைவர்மாதோ.

இ-ள். யாதொருபாவாதியுடனேயாகிலும் பாவாதிக்கு 6-7-8 இந்த நட்சத்திரத்திலேயாகிலும், அதற்கு திரிகோணத்திலேயாகிலு ம் பாவக்கோள்நிற்க அந்த பாவக்கோளுடைய திசை அபகாரசித்தி ரம்வாய்ந்த ராசியிலே சனியும்வர அந்த பாவத்துக்கு ஏற்றூர் மர ணம் எ-று. 16

சிறந்தலக்கினத்திரிகோண மெட்டினிலுநிற்செய்பொன்
குறைந்திடுமதியந்தீக்கோள் கூடிடவன்னேர்நீச

மறந்தருபகையினெய்தின் வருகுலமனைத்துமன்னோன்
பிறந்திடநாசமாகு மென்றனர்பெரியநூலோர்.

இ-ள். 4-5-8-9-இந்தராசியில் வியாழமும் குறைந்தமதியும் பாபக்கோளுங்கூடிநிற்க பகை நீசமெய்த பிறந்தவன்குலம் நாசமாகும் எ-று. 17

மாதுருகாரகனருன் கோளிருந்திடுமோரைந்தான்
மீதுநட்பாச்சியுச்ச நற்கோளேமேவிலன்னோர்க்
கோதியபலன்களுண்டாங் குருபகைநீசமாறெட்
டாகியவிவற்றைச்சாரி லவர்பெலநாசமாமே

இ-ள். யாதொருபாபத்துக்கதிபதிகாரனிவர்களிருந்த ராசிக்குடையவன் நட்பாட்சி யுச்ச மித்திர நற்கோளைச்சேரில் அந்த பாவபலன் உத்தமபலன் அல்லது நீசமூடப்-பகையிலும்-6-8-12-ல் இருக்கிலும் அந்தபாவத்துக்குசொல்லும்பலன்நாசம் எ-று. 18

பாக்கியத்ததிபனைந்திற் பதிநாதன்லக்னநாத
னிக்கருங்கருமநாதனிகழ் சுகத்ததிபனின்னோர்
தாக்கியராசிநாதன் பவரொடுஞ்சார்ந்தகோட்க
ளாக்கமாம்பலத்தைநல்கு மாட்சியேலதிகநன்றாம்.

இ-ள். இலக்கினம்-4-5-9-10இந்தஐந்துகோளுமிருந்தவீட்டிற்குடையவனும், அவர்களுடனேகூடினகோளும் கொடுக்கும்பல னுத்தமம், இவர்களாட்சி யுச்சமூலநட்பாகில் அதிகநன்று எ-று. 19

தூயகோணின்றவோரைக் கதிபதிபலன்கடுய்தாந்
தீயகோணின்றவோரைக் கதிபதிபலன்கடீதா
மாயமேழிரண்டுள்ளோனு மவர்தமையடைந்தகோளுங்
காயுமாலெட்டினுள்ளோன் கானகைகாட்டுமன்றே.

இ-ள். நற்கோள்நின்றராசிக் கதிபதிகொடுக்கும்பலன் நன்மை தீக்கோள்நின்றராசிக்கதிபதிகொடுக்கும்பலன்தீமை, 2-7-ல் இருந்தகோளும்இவரைக்கூடினகோளும் புதனுக்கு எட்டிலுள்ளகோளும் நன்மைப்பலன் கொடுக்கும் எ-று. 20

மரணத்தானத்தோனின்ற ராசிநாண்மாதந்தன்னில்
விரணத்தாற்பகையுநோயும் வேந்தரான்முனிவுமுண்டா

மரணத்தாம்வீடும்பொன்னு மழிந்துசாத்துயரில்வீழ்வார்
தருணத்தார்சொன்னநீதி தனித்திருவணையமாதே.

இ-ள். ஜென்ம லக்கினத்திலே அஷ்டமாதிபதி யாதொருநட்ச த்திரராசியில் நின்றானோ அந்தநட்சத்திரமும் அந்தமாதமும்கஷ்ட பலன் எ-று. 20

பன்னிருதானத்துக்கும் பலன்சொல்லும்பண்புகூறி
னுன்னுமோர்தானந்தன்னி லுறைந்தவனதிபன்பார்த்தோன்
மன்னுகாரகனென்போரால் வருபலன்வகுக்கலாகு
முன்னுந்தானததீராறன்மொழிவை பொன்னவைகண்முற்றும்

இ-ள். பனிரண்டுதானத்திற்கும் பலன்சொல்லவேண்டில் அந் தந்த பாவ திதி இருந்த கோளைப்பார்த்து அக்கோள் காரகன் இவ ருடைய பெலமறிந்து சொல்லுவது-எ-று. 21

தானத்தாற்சொல்லவேண்டுந் தற்காலபலன்களெல்லா
ஞானத்தால்வருவதெல்லா மிரண்டினுணவிலப்பாற்றே
மானத்தால்வியாழநின்ற தானம்வர்த்தனையாய்நோக்கும்
பீனத்தான்சனிசேர்தானம் பெலன்கெடும்பீடைநோயால்.

இ-ள். நன்மை-தீமை-அறியவேண்டில் வியாழம்நின்றராசியை க்கொண்டு சொல்லும்பலன் வெகு உத்தமம், சனி நின்ற ராசியை க்கொண்டு சொல்லும்பலன்-பத்திபம்-எ-று. 22

தனநாதனுறெட்டீரா றெனுமொன்றிற்சாரச்சாரு
மினவோரைநாதன்சேருந் தானங்கள்கெடுமேபார்க்கிற்
அனுபாகுந்தீயொராறெட்டீராறேற்றொருடருந்துன்ப
முனியாதாற்கோளாறெட் டீராறேன்முனிவுதிண்ணம்.

இ-ள். இரண்டாமிடத்துக்குடையவன்-6-8-12ல் நிற்கினும் இல க்கினுதிபதி-6-8-12-ல் நிற்கினும் அல்லது பார்க்கினும் தீமைப்பல ன், பாபக்கிரகங்கள் 6-8-12-ல் நிற்கில் நன்மைப்பலன்-எ-று. 23

அந்தணன்றனக்கொன்றைந்தி லரும்புகர்தனக்கொன்றேழின்
முந்தியதிரிகோணத்தின் முறையினற்கோகள்சேர்நாண்

மைந்தருமனைவிதானும் வருமந்நாளிற்காரி
தொந்தமாங்காலமன்னோர் துயர்கடன்முடிக்கும்வாறே.

இ-ள். வியாழத்துக்கு 1-5-ல் சுக்கிரனுக்கு-1-7-ல் திரிகோண க்கோட்கள் சேருநாள் மைந்தரும் மனைவியும் வரும். அந்நாளிற்சனி வரில் துயரமென்பது-எ-று. 24

திசைக்கதிபதிக்கானுலுஞ் சென்மலக்கினத்திற்கேனுந்
தசைக்குமூன்றுறெட்டீரா றுகியதானந்தன்னுள்
வசிக்குங்கோளவர்களோடு வதியுங்கோளேனும்வந்து
பொசிக்குநாட்கேடேயன்றி மரணமும்புகலலாமே.

இ-ள். ஜென்மலக்கினத்துக் கானுலுந் திசைநாதனுக் கானுலும் 3-6-8-12-க்கு உடையவர்களுடைய திசை அபகாரசித்திரமு மவர்களுடனேகூடினபேர்களுடைய திசை அபகாரசித்திர மானுலும் வந்தால் வெகு கஷ்டபலன் அன்றியும் மரணம்வரும்-எ-று. 25

வார்முலையொன்றுமூன்றைந் தேழிருநாலாந்தன்னிற்
சீரியகோட்களின்றித் தீயகோள்சேருநாளிற்
பாரினிற்பகரவொண்ணுத் துன்பங்கள்பலவுமெய்துங்
கோரமாமன்னேருற்ற திசைகளுங்கொடியதாமே.

இ-ள். 1-3-5-7-8-அதிலே சுபக்கோளின்றி தீக்கோட்கள்வரும்போது அவருடையதிசை அபகாரசித்திரங்களிலே கஷ்டம்வரும் இவர்களுடனேகூடின கிரகங்களின்திசை யபகாரசித்திரங்களிலும் கஷ்டமேயாம்-எ-று. 26

பொதுவிதி-முற்றுப்பெற்றது.

உ

முருகக்கடவுடுணை.

இலக்கன பாவம்.

சீரெனாயிலக்கினேசன் மித்திராங்கிசத்திற்சேரச்
சார்வதாச்சுபக்கோள்பார்க்கிற் சவுக்கியலக்கினேச
ஞாரவேபெலத்துக்கேந்திர கோணத்திலமையநய்லோர்
பார்வையேபெற்றாலாயு பாக்கியமுள்ளதாமே.

இ-ள். இலக்கினேசன் பெலமாக இருக்க கேந்திரகோணத்தி
லிருந்து ஸ்வயாங்கிச மித்திராங்கிசமேறச் சுபக்கிரகம்பார்க்கதேகச
வுக்கியம் லக்கினேசன் பெலமாக இருக்கக் கேந்திரகோணத்திலிரு
ந்து சுபாள்பாரக்க பாவியாள் பாராதிருக்கத் தேகசவுக்கியமென்
பது என்றவாறு. 1

உள்ளதோரிரவிதேவ லோகாங்கிசமுற்றவும்பேர்
விள்ளரும்லக்கினாதி பெலக்கவும் பாக்கியாதி
மெள்ளவேசொச்சவுச்ச வங்கிசம்விரும்பியேற்ப
பிள்ளையும்யோகவானாய்ப் பெலமுடனிருப்பதாமே.

இ-ள். சூரியன் தேவலோகாங்கிசமேற லக்கினேசன் பெலமா
கஇருக்க பாக்கியேசன் சுயாங்கிசமேற வெகுபாக்கியமும் கீர்ததியு
ம் பெற்றவன் எ-று. 2

இருப்பதோர்லக்கினேசன் பெலஞ்சுபவர்க்கமேற
விருப்புடன்சொச்சமாகிக் கர்மலாபந்தார்பார்க்கப்
பொருந்தியதீர்க்கவாயுள் புகழுடன்செல்வமுண்டாய்த்
தருந்தனைதிகாரங்கிர்த்தி மானெனத்தழைத்துவாழ்வான்

இ-ள். இலக்கினாதிபதி அற்பபெலவானாயிருக்க சுபவர்க்கமே
றசுபக்ஷேத்திரத்திலிருக்க கர்மாதிபதியாலே அல்லது பாக்கியாதிப
தியாலே பார்க்கப்பட்டு தீர்க்காயுசுந் தனலாபமுங்கீர்த்தியுமுண்டா
ம் என்றவாறு. 3

வானெனுமிலக்கினேசன் பாவியருடனேவாழ
ஹீனமாஞ்சுகக்கோள்பார்க்கிற் றேடமேயிலலக்னேசன்

றூனமாம்பலமேயாகி யங்கிசகோணந்தன்னில்
நாலெனனப்பாவிபார்க்கி னுளுமேரோகியாவள்

இ-ள். இலக்கினேசன் குருநாளுடனேகூடில் தேகசவுக்கியமி
ல்லை சுடக்கிரகம்பார்க்கில் பலனுண்டு இலக்கினேசன் பலவீனனுயி
ருக்க கேந்திரகோணத்தில் பாவிகளிருக்க எந்நேரமும் ரோகமுண்
டாம் என்றவாறு. 4

ஆமெனும்லக்கினத்திற் பாவியாய்க்குளிகனுளச்
சேமனுங்குளிகன்பார்க்கப் பாவியுமிராகுங்கூடத்
தாமெனுமிரவிபார்க்கப் பில்லிசூனியத்தான்மாய்வன்
மானமாஞ்சனியும்பாம்பும் வஞ்சனையாலேமாய்வன்

இ-ள். இலக்கினத்தில் பாவியிருக்க குளிகன்திரிகோணத்திலி
ருக்க அல்லது இலக்கினுதிபதியுடனேகூட இலக்கினேச னுடனே
பாவிகூட இராகு உதயமாக சூனியத்தினுலேமரணம் சனியுடனே
இராகுகூடி இலக்கினத்திலிருக்க வஞ்சனையால் மரணம் எ—று. 5

தானவனிலக்கினத்தில் ராகுவாய்ச்சனிசேய்கூட
வீனமாம்பிரகற்பீச மெட்டினிலக்கினேச
னானமாமிராகுகூடி லிப்படியுரைத்தல்கூடும்
பானலங்கொண்டகோதாய் பார்த்திவைபகாநன்றே

இ-ள். இலக்கினத்திற் சனியுஞ்செவவாயு மிராகுவுங் கூடியி
ருக்க பிரகஸ்பீஜம் லக்கினேசனஷ்டமத்தில் இராகுவுடனேயிருக்க
பிரகஸ்பீஜம் எ-று. 6

நன்றெனுமிலக்கினேச னிருத்திடுமிராசிநாதன்
பொன்றியராகு * மாந்தி கூடிடிற்பிரகற்பீச
மன்றியுமட்டமேச னேறுமங்கிசத்தினுதன்
றன்றியாயாவுங்கூடி லப்படிச் சொல்லலாமே

இ-ள். இலக்கினேசனிருந்த ராசிக்குடையவன் இராகு செவ்
வாய் மாந்தியுடனேகூடியிருக்க முன்சொன்னபலன் அஷ்டமேசன்
எந்த அங்கிசம் ஏறினுனே அந்த அங்கிசாதிபதி இராகுடனேகூடி
ல் முன்சொன்னபலன் எ—று. 7

* மாந்தி குளிகன்.

சொல்லியலக்கினேசன் சேயனேவைதுறக்கப்
பல்லவர்பாவிகூட வன்றியும்பார்க்குமாகில்
வில்லினுற்கல்லேறன்றி வசூரியால்விரணமுண்டா
மல்லது சனியவ்வண்ண மாகிலக்கினியாலாமே

இ-ள். இலக்கினேசன்செவ்வாயாகஇருக்கஅவ்விலக்கினத்திலு மிருக்க பாவிகளுடனேகூட அல்லது பார்க்கவில்லினுலாதல், கல்லெறிதலினுலாதல் விரணம், அல்லது வசூரியால்விரணம், சனி இப்படியிருந்தால் வாதம் அக்கினிசத்திர மிதனுல் விரணமுண்டாம் எ-று.

ஆயதோர்லக்கினுதி யங்கிசத்தானம்பொல்லாத்
தீயவர்சுபர்கள்கூடச் சுட்கமாஞ்சுபர்கள்வீட்டி
னுயகனிலக்கினுதி யிருக்கவுமட்டமத்தின்
மாயவன்சுடர்க்கோளாகிற் சுட்கமாய்நவில்வர்மாதோ

இ-ள். இலக்கினேசன்குரூரக்கிரகத்துடநேகூடியிருக்க சுட்கசரீரம், சுட்கக்கிரகங்கள்வீட்டில் இலக்கினுதிபதியிருக்கஅல்லது அஷ்டமத்திலிருக்க சுட்கசரீரம் எ-று. 9

லக்கினனங்கிசாதி யிருந்திடச்சுபர்கள்வீடாய்ச்
சொல்லத்தகர்சுட்கமாகுஞ் சுக்கிரன்லக்கினுதி
நலத்தகுசுபர்கள்பார்க்கிற் றாலமாம்லக்கினுதி
செலக்கிரகமாகநல்லோர்திருட்டியேற்றாலமாமே

இ-ள். இலக்கினுதிபதி ஏறின அங்கிசாதிபதிசுடர்க்கிரகத்திலிருக்க சுட்கதேகம், சக்கிரன்-இலக்கினத்திலிருக்க சுபக்கிரகம்பார்க்க தூலதேகமாம் இலக்கினுதிபதி சலக்கிரகமாக இருக்க அல்லது பெலவானுக இருக்கச் சுபக்கிரகங்கள் கூடியிருக்க தூலமாக இருக்கிற சரீரமென்று சொல்வது எ-று. 10

தூலமாம்லக்கினுதிசெலத்திலேதோன்றவந்தப்
பாலனேச்சுபக்கோள்கூடப் பார்ப்பதுஞ்செலமேற்றாலம்
வாலனும்லக்கினுதி வாழ்வதுசுபர்வீடாகச்
சீலனங்கிசத்திலாதல் செலத்துற நல்லதேகம்

இ-ள். இலக்கினுதிபதி செலராசியிலேயிருக்கச் சுபக்கிரகத்துடனேகூடி செலக்கிரகம்பார்க்கத் தூலகாயம், லக்கினம் சுபாள்

க்ஷேத்திரமாகவிருக்க அல்லது லக்கினாதி ஏறின அங்கிசாதிபதி செலராசியிலிருக்க நல்லசரீரம் எ-று. 11.

நல்லதாம்லக்கினத்திற் குருநிற்கவன்றிப்பார்க்கச்
சொல்லலாம்லக்கினந்தான் சொலுமெனிற்றூலகாயம்
புல்லியசனியும்ராகும் லக்கினம்வரிற்பசாசா
மில்லையேலிரவிசெவ்வா யிருந்திடிற்சுட்கதேகம்

இ-ள். இலக்கினத்தில் குருவிருக்க அல்லது குருவால்பார்க்கப் பட்டலக்கினஞ் செலராசியாகத் தூலகாயம், லக்கினத்தில் சனியு மிராகுவுமிருக்கப் பசாசு கவையாயிருப்பன், லக்கினத்தி லாதித்த னுஞ் செவ்வாயுமிருக்க சுட்கதேகம் எ-று. 12

சுகமெனுமிலக்கினத்துக் குடையவனதிலேதோன்றி
யகமெனவாழ்வுற்றேற மங்கிசந்தன்வீடுச்ச
நிகரிலாத்திரேகாணத்துஞ் சுகமதுமேறநீண்ட
புகர்குருமதிமால்பார்க்கிற் புகழுடன்வாழ்வன்றீர்க்கம்

இ-ள். லக்கினாதிபதி லக்கினத்திலிருந்து சொட்சேந்திரவுச்சம் ஏறி சுபத்திரேகாணம் ஏறச்சுபதிருஷ்டியுண்டாகச் சனனமுதல் ம ரணாந்தம்வரைக்கும் பாக்கியமுடையவன் எ-று. 13

தீர்க்கமாம்லக்கினாதிலாபமேசேரநல்லோர்
பகர்க்கவேயன்றிகேந்தி ரத்தில்வீடுச்சமாக
வேர்க்கவேசிங்கனங்கிச மேறவேபொன்னவன்றான்
கூர்க்கமத்தியிலேவாழ்ந்து குணமுடனிருப்பன்றானே

இ-ள். இலக்கினாதிபதிலாபாங்கிசமேறசுபக்கிரகம்பார்க்க அல் லது கேந்திரம்மேறக்கேந்திரத்தில்சொச்ச உச்சனாகி இருக்கச் சிங்கா சனாங்கிசம்மேற குருபார்க்கமத்தியிலே சவுக்கியம் எ-று. 14

இருந்தலக்னாதிசொச்சவுச்சமாயினியோர்பார்க்கப்
பரந்துசோபனகேந்திரத்து பார்வதாங்கிசமேபற்ற
மருந்தெனுமத்தியோகம் லக்னகேந்திரம்பொன்பார்க்க
வருந்திலக்கினத்தான்கேந்திரத் தயிராவதாங்கிசநன்றே.

இ-ள். லக்கினாதிசொட்சேந்திரவுச்சமாகச்சுபக்கிரகம்பார்க்கில் லக்கினேசன் சுபகேந்திரத்தி லிருக்கப் பார்வதாங்கிசமேற மத்தி

யில்சவுக்கியம், லக்கினத்தை வியாழம் கேந்திரத்திலிருந்து பார்க்க அல்லது லக்கினாதிபதி கேந்திரத்தில் பெலத்துப் பூரணமாகவிருக்க அல்லது ஐராவதாங்கிசமேற அவனுக்குப் புத்திர மித்திரகளத்திராதிகளுடனே மரணவரையுஞ் செல்வம்-எ-று. 15

நன்றெனும்லக்கினாதி கோபுராங்கிசமாய்ச்சுங்க
னன்றியுந்தேவலோகாங் கிசமாகின்மத்தியந்தந்
துன்றியபின்னுஞ்செல்வஞ் சுபர்களக்கினமாய்ப்பாவி
யொன்றியதனமாய்க்கேந்திரத்துச்சமேன்மத்தியோகம்

இ-ள். லக்கினேசன் கோவிராங்கிசமேற சுக்கிரன் தேவலோகாங்கிசமேற அவனுக்கு மத்தியிலேயும் மத்திபத்திலேயும்யோகம் லக்கினத்தில் பாவியிருக்க தனத்தில் சுபனிருக்க லக்னாதிபதி கேந்திரகோணவுச்சனாக விருக்க அவனுக்கு மத்திலேயும் அந்தியததிலேயும் சவுக்கியம்-எ-று 16

யோகலக்கினத்திற்பாவி யாரச்சுபர்வர்க்கமாகிப்
பாகுசேர்பாக்கியத்திற் பாவியானலமுன்றீபன்
வாகனும்லக்கினாதி பத்திலக்கினத்தில்வாழத்
தோகையேசுபக்கோள்பார்க்கின் மத்தியில்யோகஞ்சொல்லே.

இ-ள். லக்கினத்திற் பாவியிருக்க கனத்தில் சுபனிருக்கப்பாக்கியத்திற்பாவியிருக்க வாலீபசவுக்கியம், பிறகு தாரித்திரம், லக்கினேசன் கர்மததிலிருக்க அல்லது லக்கினத்திலிருக்க சுபக்கிரகம்பார்க்க மத்தியிலேயோகம்-எ-று. 17

சொல்லியலக்கினத்திற் பாவியும்ராகுந்தோன்ற
நல்லதாங்கேந்திரத்திற் பாவிகளிருந்துநாட
வல்லவன்லக்கினாதி நீசமாய்வாழ்வானாகிற்
புல்வன்றுர்க்கீர்த்தியாகிப் புகழின்றிச்சிலநாள்வர்ழ்வன்

இ-ள். லக்கினத்திற் பாவியும் ராகுவுமிருக்க கேந்திரங்களில் பாவிகளிருக்கலக்னாதிபதிநீசனாயிருக்க துர்க்கீர்த்தியையுடையவன்.

வாழுமோர்லக்கினாதி வீரியனாகவந்த
வீழிதன்வீடதாகி லரசனுக்கீர்த்திமேவு
நாளிலேலக்கினன்மூன்று றெட்டீராறுநண்ணக்
காளைபுரத்திருமின்றிக் காமியாய்வேசையாவன்

இ-ள். லக்கினாதிபதி ஞரோபவீரியனாக அந்த வீராதிபன் சுப க்ஷேத்திரனாகில் கீர்த்திமானாகி ராஜாவாயிருப்பான். லக்கினாதிபதி 3-6-8-12-லிருக்கில் சுக்கிரன்பார்க்க புத்திராளில்லை பாக்கியமத்திபம், வேசாசங்கன்—எ-று. 19

வானதாம்லக்கினாதி வீடதாய்ப்பலமாய்வாழத்
தானவன்சுபக்கோள்கேந்திரக் கோணங்சுடன்னிலாகிப்
பானபேர்சுபனுங்காமநாதனும் பார்வைதங்கி
யீனமாங்கேந்தித்தி லிருக்கிற்றீர்க்காயுவாமே.

இ-ள். லக்கினாதிபதி பெலமாகியிருக்க சுபக்கிரகம் கேந்திரத் திரிகோணத்திலிருக்க சுபாள் பார்க்க கர்மாதிகூட அல்லது திரி கோணத்லிருக்க பாக்கியகீர்த்தித் தனதான்யவனும் தீர்க்காயு சுடையவன்-எ-று. 20

ஆயுவாம்லக்கினாதிபதிபெலங்கேந்திரத்தால்
மேயவர்சுபரேபார்க்கிற் றீர்க்காயுமிருத்திவில்லை
நாயகனென்னலோ நாதனைக்குணவானாகி
பீவுடன்றியாகிராச லட்சுமியுடையனாமே.

இ-ள். லக்கினாதிபதி அதிபெலமாகஇருக்க சுபக்கிரகம் பார்க் கக்கேந்திரனாகயிருக்க மிருத்துவில்லை தீர்க்காயுசுங் குணவானுமாகி இராஜலட்சுமியுடையவனாக இருப்பான்—எ—று. 21

உடையவன்லக்கினாதி யொன்றுகான்கேழ்பத்திற்
திடமூடன்குருவோடாகத் தீபர்கேந்திரக்கோணத்து
மடவுடன்கூடார்பாரா ரெட்டினுமனுகாராகி
லிடமுடன்வாழ்வான்றீர்க்க வாயுளுங்கீர்த்தியாமே.

இ-ள்: லக்கினத்துக் கேந்திரகோணத்தில் எட்டாமிடத்தில் பாவிகளில்லாதிருக்க லக்கினாதிபதியும் வியாழமும்-1-4-10—லிருக்க கீர்த்திமானும் புண்ணியவானும் தீர்க்காயுசுடையவனாயுமிருப்பன்.

தீர்க்கமாய்லக்கினாதி தனத்திற்கர்மத்திலாகி
லேர்க்கவேலாபனோடே கூடினுமிருபதாண்டா
மார்க்குலகத்தானேறு மயங்சன்றிரிகோணத்தாற்
கூர்க்குமுச்சத்தாலாபன் கூடமுப்பத்திரண்டே

இ-ள். இலக்கினுதிபதி தனத்திலாவது கர்மத்திலாவது இருக்க அல்லது லாபனுடனேகூடியிருக்க இருபதுவயசுக்குசுகம் லக்கினுதிபதியிருந்த அங்கிசாதிபதி கேந்திரகோணவுச்சனுக லாபேசனுடனே கூடியிருக்க முப்பத்திரண்டு வ. சுக்கு பிராக்கியம் எ-று. 23

இன்பமாம்லக்கினுதி சுபராசியிருக்கவந்த
வன்பனைச்சுபக்கோள்பார்க்க கோபுராங்கிசத்திலேற
மங்குணமறுபதாண்டு வாழுவான்லக்கினத்தில்
றன்பலமுற்றும்ரண்டா மிடப்பலஞ்சாற்றுவாமே

இ-ள். இலக்கினேசன் சுபராசியிலிருக்க சுபக்கிரகம் பார்க்க கோபுராங்கிசமேற அறுபதுவயசுக்குச் சுகம் எ-று. 24

இலக்கினபாவம்-முற்றிற்று.

இரண்டாம்பாவம்.

சாத்தியநாமந்தானுந் தன்முகங்குடும்பம்வித்தை
யேற்றியவிலாவின்பக்க மத்திரமிதயமுண்ணல்
கூர்த்தகன்குருவுமென்னக் குறித்துணர்வேங்கிடேச
மூர்த்தியேயுரைத்தார்க்கெல்லா மூடனுன்விரிக்கலுற்றேன்.

இ-ள். குடும்பம் முகம் விலாப்பக்கம் வித்தை மந்திரம் இதயம் போசனம் குரு தனம் இவையெல்லாம் இரண்டாமிடங்கொண்டு சொல்வது எ-று. 1

விரித்தெழுலக்கினேசன் வித்தையாளுடனேகூடி
பரித்தடமூன்றுறெட்டு பன்னிரண்டதிலேவாழத்
தரித்தமாதனத்தான்ருனு மிலக்கினனுடனேசார
விரித்திடுநயனந்தன்னை யந்தகனுகத்தாளே

இ-ள். இலக்கினுதிபதி இரண்டாமிடமுடையவனுடனே 3-6 12-லிருக்க 2-மிடமுடையவன் லக்கினத்திலிருக்க அந்தகனுவான் என்றவாறு. 2

ஆகமாமிலக்கினத்தி லிரவியேநீசமா
வேகமாமிராகுபார்க்கில் விரணமாங்கண்ணிலென்றுந்
தாகமாங்குடும்பந்தன்னிற் சனிகுசனுடனேகூடச்
சோகனுக்குளிகன்பார்க்கி லாந்தைகண்ணெனச்சொன்மின்னே.

இ-ள். சூரியலக்கினத்தில் நீசனுயிருக்க ராகுபார்க்க எந்நேரமுங் கண்ணில்விரணமாம் 2-மிடத்தில் சனி-செவ்வாயிருக்கக்குளிகன்பார்க்க ஆந்தைக்கண்ணென்பது எ-று. 3

மன்னியவிரவியிந்து தனத்திலாய்ராகுமந்த
னண்ணியேபார்க்கஙன்று தயனமத்தகமேயாகும்
பன்னியேதனத்திலொன்றைப் பாவியாய்க்குடும்பநாதன்
வன்னியாம்பாவிகூடத் தூரமேதெரியாதாமே

இ-ள். சந்திரனும் சூரியனும் இரண்டாமிடத்திலிருக்க இரண்டாமிடமுடையவன் பாவியுடனேகூடிச் சுபக்கிரக திருஷ்டியில்லாதிருக்க தூரம்வருவது தெரியாது அரைப்பார்வை ரோகநேத்திரமென்பது எ-று. 4

தெரிதருநேத்திராதி செல்லுமங்கிசத்துநாத
னரியினும்பாலர்வீட்டி லிருக்கவும்பாவியாகி
லரியெனுங்கேதுமாந்தி நேத்திராதிபனுங்கூட
வுரியதாங்கண்ணிலென்றும் விரணமேயுடையதாமெ.

இ-ள். நேத்திரஸ்தாதிபதி ஏறின அங்கிசாதிபதி பாபக்ஷேத்திரத்தில் பாவியாயிருக்க நேத்திராதிபதியுடனே கேது குளிகன்கூட நேத்திரவிரணம் எ-று. 5

தாமெனுமிரவிசேயுந் தனத்திலாய்ச்சுபர்பாராரேற்
பூமன்கணர்த்தமாகும் புகன்றிடுநயனத்தானும்
சோமனுஞ்சுபரேகூடக் காரகற்சுபரேபார்க்கக்
தேமலிநயனமென்றுந் தீர்க்கமாயிலங்குந்தாமே்

இ-ள் சூரியனுஞ் செவ்வாயும் நேத்திரஸ்தானத்திலிருக்க சுபக்கிரகத்திருஷ்டியில்லாதிருந்தால் இரத்தக்கண் நயனுதிபதி சவுமியனுடனேகூட காரகன் சூரியனேச்சுபாள்பார்க்க நல்லகண் எ-று.

இலங்கியகுடும்பநாத னுச்சசொட்சேத்திரத்திற்
குலங்கிளர்சுபரேகூடப் பாரகமாக்குடும்பியாவன்
பெலம்படுந்தனத்தானுச்சச் சொச்சனுய்ப்பெரியோர்பார்க்க
நலந்திகழ்லக்கினதி யவ்வணமாகநன்றே

இ-ள். குடும்பநாதன்-சவுமியனுயிருக்க உச்சசொட்சேத்திரனு யிருக்க சவுமியாள்கூடப்பார்க்கவெகு குடும்பரக்ஷகனுகவும், வாக்குக்காரனுகவுமிருப்பன், குடும்பாதி சொட்சேத்திரவுச்சனுக சுபக்கிரகம்பார்க்க, லக்கினதிபதி உச்சச்சொட்சேத்திரனுக, அனேககுடும்பரட்சகனுய் இருப்பான் எ-று.

நன்றெனுந்தலத்தில்வியாழ மாதியர்நல்லோர்பார்க்க
வன்றியும்பிரசேயுச்சச் சேத்திரமதனிலாக
வென்றிகொளரசனுக வெகுசனரட்சகன்றான்
மன்றினிற்கீர்த்திபெற்று வாழுவான்குடும்பியாயே

இ-ள். குடும்பத்தில் வியாழம்நிற்க சுபாள்பார்க்க பிருகு உச்ச சொட்சேத்திரத்திலிருக்க பரோபகாரியம் வெகுஜன ரட்சகனு வன எ-று. 8

குடும்பத்திற்பாபியாகிக் குடும்பனுறெட்டிலேயு
மடைந்திடலக்கினதி யப்படியாகிற்றுக்க
மிடம்படும்பாபிரண்டி லிருக்கவுமிலக்கினதி
துடர்ந்தவேயாறெட்டாகிற் றுக்கியாய்ப்பொசிப்பிலானே.

இ-ள். குடும்பத்திற் பாவிகளிருக்க குடும்பாதிபதிசஷ்டாட்டம வியத்திற்போகஜென்மலக்கினதிபதியும் அப்படிப்போகப் பொசிப்புக்குச் சந்தேகம், இரண்டில் வெகுபாவியிருக்க, லக்கினதிபதி பாவியாகச் சஷ்டாட்டமவியத்திற் போகிலவனுக்கு சுகஜீவனமும் சுகமுமில்லை எ-று. 9

பொசித்திடுந்தனத்தன்றன்வீ டுச்சமாய்ப்பொருந்தவந்த
விசித்திரன்லக்கினதி விலாட்டிகனுகிமேவ
விசைப்படுங்குடும்பநாத னிருந்தவீடுடையான்கேந்திர
நசைப்படுங்கோணமாகி னல்லவன்றனவான்ராஜன்

இ-ள். குடும்பாதிபதி சொட்சேத்திரவுச்சனுகவிருக்க, லக்கினுதிபதி பெலாட்டியனுயிருக்க, குடும்பராசிநாத னிருந்தவீடான் கேந்திரத்திரிகோணத்திலிருக்க அனேகஜென்மித்திரனுக இரட்சிப்பான் எ-று. 10

தனத்தினுதிபனிருந்த ராசியான்கேந்திரந்தன்னின்
மனத்துடன்சுபனேலோரைஞ் ஞூறுபேர்மன்னுய்வாழ்வ
னினத்துடனிரண்டான்பாபி யிருக்கினுமிலக்கினுதி
சினத்திடும்பாவிகூடச் சட்டாட்டஞ்சேரத்துக்கி

இ-ள். குடும்பேசனிருந்த ராசியாதிபதிகேந்திரங்களிற்சுபனுகி யிருக்க ஐஞ்ஞூறுபேரை இரட்சிப்பான், குடும்பாதிபதி பாபானுடனேகூட லக்கினுதிபதியும் பாபானுடனேகூடி சட்டாஷ்டம வியங்களிலேயிருக்கத் தனமில்லை எ-று. 11

சேரவாந்தனேசன்பாரா வங்கிசஞ்சேரவிந்து
தீரனுய்த்தனத்திலக்னன் சிங்காசனுங்சமேறப்
பாரானகுருபாராவ தாங்கிசம்பற்றிலந்தச்
சூரன்மூவாயிரம்பொன் சுகமெனக்குடும்பவானே.

இ-ள். தனேசன்பாராவதாங்கிசமேற மூவாயிரம்பொன் ஆஸ்தியாக இருப்பான், தனத்திற் சந்திரனிருக்க லக்கினுதிபதி சிங்காசனுங்கிசமேற வியாழம் பர்வதாங்கிசமேற மேற்சொல்லியபலன் எ-று.

குடும்பனும்பரமவுச்ச னுயவன்கொள்ளும்வீட்டான்
றுடங்கியகுருவாய்ப்பிள்ளை தோன்றுலக்கினத்துநாத
னிடம்பயிறன்வீடுச்ச மேறிலாயிரம்லட்சம்பொன்
னுடந்தையாய்த்தேடிமீறு மும்பர்கோனெனவும்வாழ்வன்.

இ-ள். குடும்பநாதன் பரமோச்சனுக அந்தவீட்டுக்குடையவன் வியாழமாக இலக்கினுதிபதியுஞ் சொட்சேத்திர வுச்சனுகியிருக்க அவன் ஆயிரலட்சம்பொன்னுக்கதிபதியாவன் எ-று. 13

உம்பர்கோன்வியாழஞ்சிங்கா சனுங்கிசமுவந்துவாழ
நம்பினும்பிருகுபாலன் கோபுராங்கிசத்தைநண்ண
வம்புவிதனத்தான்மேலா யயிராவதாங்சமேறத்
தம்பமாயளவிலாத தனத்தினுக்குடையனுமே.

இ-ள். குரு-சிங்காசனுங்கிசமும் சுக்கிரன் ஐந்துக்குடையவன் இவர்கள் கோபுராங்கிசமும், சந்திரன் இரண்டாமிடத்திற் குடைய வன் இவர்கள் ஐராவதாங்கிசமும் பெறில் அளவிறந்த தனப்பிராப் தியுடையவனுகும் எ-று.

தனத்தினன்சலத்திலாகச் சதுர்த்தவன்சலவானுகச்
சினத்தெழுங்கர்மந்தானுஞ் செலராசியுடையனுகிற்
கனத்தநிட்சேபயோகங் கைவந்துகர்மவானு
யனைத்துடன்கூடிவாழு மலரவனறைந்ததன்றே

இ-ள். இரண்டாமிடத்திற்குடையவன் நாலாமிடத்திற்குடை யவன் ஜலராசியிலிருந்து பத்தாமிடத்திற்குடையவனும் அப்படியா கில் நிதிநிட்சேபலாபம் உண்டாகி சுகஜீவியாய்வாழ்வன் எ-று. 15

சேர்ந்திடுமுகத்தானத்தான் கேந்திரபாகஞ்செல்ல
வார்ந்திடுமுகத்தானத்திற் சுபர்களேவாழவந்த
சாந்தணிகுழலாய்நல்ல முகமொடுதனவானுவன்
பாந்தண்மேற்கிடந்தபாருட் பரியவனழகுவாழ்ந்தே.

இ-ள். இரண்டாமிடத்திற்குடையவன் கேந்திரத்தில் இருக்க மேற்படி இரண்டாமிடத்தில் சுபக்கிரகங்கள் இருக்கில் தனவானும் சவுந்தரியமான முகத்தையுடையவனுமாம் எ-று. 16

வாழ்ந்தெழுங்குடும்பனேடே குளிகனும்வாழவன்றிக்
கூர்ந்திடுந்தனத்தானீசனென்னிலேகோபியாகுஞ்
சாந்தணிதனத்தான்பொன்ன னுகவுமதனிற்றங்கு
மேந்தருனுச்சனுகச் சாத்திரமெவையுங்கற்பான்.

இ-ள். இரண்டாமிடத்திற் குடையவனுடனே குளிகன் நிற் கினும், இரண்டாமிடத்திற் குடையவன் நீசமாகினும் வெகுண்ட வாக்கியாம், இரண்டாமிடத்திற் குடையவனுதல் குருவாதல் நின்ற இராசியாதிபதி உச்சம் அல்லது உச்சாங்கிசம்பெறில் சகலசாஸ்திர பண்டிதனும் எ-று. 17

கற்பதாம்வர்க்குநாதன் சுபன்வர்க்கோத்தமந்தானேறப்
பற்பனதனத்தான்பொன்னன் பாராவதாங்கமேறப்
புற்பதம்பிருகுபார்லனுச்சமாய்ப்புதனுங்கூடிப்
பற்பமாயயிராவதப் பதத்தினிற்றனத்தனுமே

இ-ள். இரண்டாமிடத்திற்குடையவன் சுபவர்க்கோத்தமாங்கி
சம் ஏற இரண்டாமிடத்தில்நின்ற கிரகம் அல்லது குரு பராவதாங்
கிசம் ஏற சுக்கிரன் ஐந்துக்குடையவன் உச்சம் அல்லது உச்சாங்
கிசம்பெற்று புதனுடன்கூடி ஐராவதாங்கிசமும்பெறில் தனவந்த 18
னும் எ-று.

தானமாயவாக்குதன்னிற் பாவிகளிருக்கப்பால
னீனமாய்ப்பானுதானு மேனமாந்தியினோடேறி
வானவசுபாள்பாராரேல் வார்த்தையும்பேசாதேதான்
பொன்னுமன்றித்துட்டனாகவேபோகுவானே.

இ-ள். இரண்டாமிடத்தில் பாபக்கிரகங்கள் இருக்க ஐந்தா
மிடத்திற்குடையவன் சூரியன் சூரியன் இவர்கள் பலஹீனர்களாய்
குளிகனுடனேகூடி சுபதிருஷ்டியில்லாமல் நவாங்கிசத்தில்மேஷராசி
ஏறி இருக்கில் ஊமையும்போகியும் துஷ்டனுமாய் இருப்பான்எ-று.

பானினுங்கேந்திரத்திற் பாவிகளின்றிச்சுங்கன்
றனுமேபுதனோடாகத் தனத்தினினுச்சமாகில்
நானிலந்தன்னிலேதான் சோதிடநவின்றுகல்வி
மானெனத்தனத்தானாகி யறமிகச்செய்வானன்றே.

இ-ள். சுக்கிரனவன் சூரியனுடனேகூடியாதல், சூரியனல்லா
தபாவிகளுடனே கூடாது புதனுடனே கேந்திரங்களிலே கூடியாத
ல், நவாங்கிசத்தில் தனுங்கிசம் அல்லது உச்சாங்கிசம்பெறில் ஜோ
திஷசாஸ்திரியும் கவித்துவமுள்ளவனும் தனவானும் தர்ம்மவானுமா 20
ய்வாழ்குவன் எ-று.

நன்றெனவாக்குநாதன் புதனுடன்கூடிவாழ
வன்றியேபுந்திபார்க்கக் கேந்திரமதுவனாக
வென்றிசேர்தன்வீடாக வியாழன்றான்பார்க்கக்காரி
துன்றுவெண்மதியோடாகச் சோதிடசாத்ரஞ்சொல்வான்

இ-ள். இரண்டாமிடத்திற் குடையவன் கேந்திரம் ஏறி புத
னுடன் கூடினும் புதனைப் பார்க்கினும் இவர்களைக் குருஸ்வக்ஷேத்
திரகாராகை இருந்து பார்க்கினும், விருத்திசந்திரனுடனே சனி கூடி
நிற்கினும் ஜோதிஷசாஸ்திரியாவன். 21

சொல்லியகேந்திரத்திற் கோணத்திற்குருவேதோன்ற
வல்லதுமோரைநாத னுச்சத்தானத்தில்வாக்கான்
புல்லிப்புதனேகூடப் புகழுடனிருப்பாராகின்
மல்லலம்புவனந்தன்னிற் சோதிடம்வகுப்பானன்றே.

இ-ள். குரு கேந்திரகோணங்களில் நிற்கினும் இலக்கினேசன் உச்சராசியிலே இரண்டாமிடத்திற் குடையவனுடனேயாதல் புதனுடனேயாதல் கூடிநிற்கினும் ஜோதிஷசாஸ்திரம் பாடவல்லவன். எ-று. 22

வகுத்திடும்வாக்குநாதன் பருதிசேயாகவாழ
மருத்துவம்புகர்பொன்பார்க்க வழங்குசோதிடநூல்வல்லான்
மிகுத்துடன்றனவான்வெள்ளி பொன்னெனக்கதிர்சேய்பார்க்கப்
பகுத்திடுந்தனவானுச்ச னுகவேவேதம்பண்ணும்.

இ-ள். இரண்டாமிடத்திற்குடையவன் சூரியனுகவாதல் அங்காரகனுகவாதல் இருக்க இவர்களைக் குரு சுக்கிராள்பார்க்கில்ஜோதிஷசாஸ்திரம் பாடவல்லவன் இரண்டாமிடத்திற் குடையவன் குரு சுக்கிராளாய் சூரியாங்காரகாளாலே பார்க்கப்பெற்று உச்சராசியிநிற்கில் வேதம்செய்யவல்லலன் எ-று. 23

பண்ணியதனத்தான்பொன்ன னுகவுமமலமேற
மின்னியகதிரோன்வெள்ளி பார்க்கவேவேதத்தேர்வன்
மன்னியதனத்திற்பானு வதிந்திடவாக்குநாதன்
பொன்னுடன்சட்டவட்டம் வியர்புகப்புலவன்மாதோ

இ-ள். இரண்டாமிடத்திற் குடையவன் குருவாய்சுபவர்க்கம் ஏற இவர்களைச்சூரியசுக்கிராள் பார்க்கில் வேதமபாடவல்லன் இரண்டாமிடத்திற் சூரியனிருக்க மேற்படி இரண்டாமிடத்திற் குடையவன் குருவுடனேகூடி சஷ்டாஷ்டமவியத்தில் இருக்க சகலசாஸ்திரவல்லவனும் எ-று. 24

மாதகலக்கினுதி வந்தவங்கிசந்தானுச்ச
நாதநாதன்வீடாகில் நவிலிரண்டாமிடத்தா
னேதமில்லாத்தவைதே கியங்கிசமுச்சவீடாங்
கோதிலாவங்கிசமேயேறக் குபேரன்போற்றனமுண்டாமே.

இ-ள். இலக்கினுதிபதி ஏறினஅங்கிசாதிபதி உச்சசொட் சேத்திராங்கிசமேற வெகுதனதிபதியாயிருப்பான் எ-று. 25

தனதனுமிலக்கினுதி தரித்திடுமிராசியானு
மினமெனக்கர்ம்மவீட்டா னிவர்களேவிலக்கநாலா
மணியுடைவேந்தைப்பொன்னேமகிழ்வுடன்பார்க்கின்முன்னம்
வினவிலாவாலிபத்திற் றனமென்விளம்பலாமே

இ-ள். கர்மாதிபன் தனுதிபதியுடபின லக்கினுதிபதியிருந்த இ
ராசியாதிபதிபெலக்க 4-மிடமுடையவனை வியாழத்தால் பார்க்கப்ப
ட்டால் வாலீபந்தொடுத்து தனலாபமுண்டாம் எ-று. 26

விளம்பிதன்றனவாபன் லக்கினனிவர்கடன்னைத்
துளங்கியசுகத்தான்பார்க்கச் சொச்சோச்சந்துலங்கியேறும்
வளந்துவாழ்வீசேடவங்கி சம்வரினுவந்துவாக்கா
னுளந்திகழுச்சவங்ச மூறத்தனமுண்டாமென்றே.

இ-ள். இலக்கினுதிபதியும் லாபாதிபதியும் சுகவானுலேபார்க்க
ப்பட்ட உச்ச சொட்சேத்திரனுக இருக்க விசேஷாங்கிசம் ஏற இர
ண்டாமிடமுடையவன் உச்சாங்கிசமடுக்க வாலீபந்தொடுத்துத்தன
லாபமுண்டாம் எ-று. 27

நன்றெனுந்தனத்தான்லாபத் துவனணியுதிக்கத்தோன்று
மன்றல்சேர்லக்கினேசன் வாக்கிலாய்லாபநாத
னென்றியலக்கினத்தி லுதித்திடமுன்னம்வைத்து
நின்றதோர்நிட்சேபம்மாய் நிதிவந்துகூடுந்தானே

இ-ள். இலக்கினேசன்தனத்திலிருக்கத்தனேசன்லாபத்திலிரு
க்க லாபேன் லக்கினத்திலிருக்க நிட்சேபயோகமுண்டு எ-று.

கூடியகிரகமெல்லாம் லக்கினத்தானைக்கூடி
யாடவிற்குருவும்வைகி யங்கிசமேறிலாபந்
தேடருந்தனத்தானுச்ச னுகவுஞ்செழிப்பதாமே
நாடுதற்கரிதாம்வீர்ய தனங்களெந்நாளுமுண்டாம்

இ-ள். சகலகிரகங்களும் இலக்கினுதிபதியுடனேகூட குருவர்
க்கவைகேசியங்கிசமேறத் தனலாபமுண்டு தனுதிபதி பாம்புச்சனுகி
யிக்க அவனுக்கு வீரியமான தனங்கள் வந்துசேரும் எ-று. 29

நாளுமேசுபகாகோள்ரண்டாங் காலிலானத்தைநாட
வாழ்வுமோமத்தியாகும் வாககினன்புகனேடாகித்

தாழ்விலாலக்கினதி பெலமுதலாபத்தானை
மீனிபோல்வியாழம்பார்க்கில் விருத்தத்திற்றனமுண்டாமே.

இ-ள். இரண்டாமிடத்தில் சுபனிருக்க திரவியம் வயசுமததி யில் வரும் இரண்டாமிடமுடையவனோடே புதன்கூடலக்கினதிபதி பெலமாகவிருக்க லாபாதியைக் குருபார்க்க விருத்தவயசிலேதனமு ண்டாம்-எ-று. 30

உண்டிடும்பிராதுர்நாதன் லெக்கினன்றனேசனென்றுய்க்
கண்டும்பௌனுற்றுனங் கிரகமேகண்ணுற்பார்க்க
ரண்டிடமுடையனாலே பார்த்தியற்சகோதராளாற்
கொண்டிடுத்தனங்களென்று கூறினர்நூல்வல்லோரே.

இ-ள். மூன்றாமிடமுடையவன்தினை பன்-லக்னதிபன்-பெல லாயிருக்க, புருஷகிரகங்களாலேயும், இரண்டாமிட முடையவனாலே யும் பார்க்கப்பட்ட சகோதராளால் திரவியம்வந்துசேரும்-எ-று. 31

வல்லவன்தாராதுர்நாதன் றனத்திலாய்க்கேந்திரத்தி
னல்லபூமகனேபார்க்க லக்னேசன்பார்க்கமுன்போ
லில்லையேலக்கினதி தனத்தவன்கேந்திரத்திற்
சொல்லியேமாறிலாபன் பார்க்கவுந்தனமுண்டாமே.

இ-ள். மூன்றாமிடமுடையவன் தனத்திலிருக்கச் செவ்வாய் கேந்திரத்திலிருக்க இவர்களைபெல்லாம் லக்கினதிபதி பார்க்கச் சகோதராளால் திரவியம்வந்துசேரும், லக்கினதிபன் தனதிபதியுட ன் அன்னிய புண்ணியகேந்திரங்களிலிருந்துபார்க்க லாபாதிபதி யாலே தனதிபதியைப்பார்க்கச் சுபக்கிரகங்களும்பார்க்க நானவிதத் திரவியமும் வரும்-எ-று.

துகமெனுங்குருவும்புத்தி ரேசனுங்கேந்திரத்தி
லுகமெனுங்கோணத்தாத லுதிக்கவுமிலக்கினதி
யகமெனவுச்சனாய்வை தேசியங்கிசமுவப்ப
மகவினாற்றனமுண்டாகி வருமெனவுரைக்கலாமே.

இ-ள். புத்திரேசனும் வியாழமூங்கேந்திரத்திரிகோணத்திலிரு க்க இலக்கினதிபதி வைசேகிகாங்கிசம் ஏறப் புத்திராளாலே தன முண்டாம்-எ-று. 33

உரைத்தசத்துருவான்ரண்டா மிடனுடன்கூடப்பொன்னுந்
துரைக்கதுபெலமாய்நோக்கிற் சத்ருவாற்றனமுண்டாகு
மிரைத்தெழுமேழாம்வீட்டா னுடன்றனகாதன்கூடில்
விரைத்தபொன்பார்க்கலக்னத்திரத்தினுன்மிகவுண்டாமே.

இ-ள். சஷ்ட்டேசனுடன் தனாதிபன்கூட பெலாட்டியனாக இருக்க வியாழம்பெலமாக இருக்கச் சத்துருவினால் தனலாபங் களத்திராதிபதியை வியாழம்பார்க்க திரிமூலதனமுண்டாம்-எ-று. 34

மிகமெனுமிரவிநன்றாய் பெலத்துடன்வியாழம்பார்க்கத்
துகமெனுங்கர்ம்மநாதன் பெலன்சொலப்பிதாவாலாபங்
ககமதிலாபத்தானுங் குருவுமேமாறிப்பார்க்கச்
செகமதிற்பொன்னேபார்க்கத் தெய்வயாற்றனமேசேரும்.

இ-ள். பிதுரு காரகன் பெலக்கக் குருலாலே பார்க்கப்பட்ட கர்மேசன் பெலமாக இருக்க பிதாவினிடதனம்வரும், லாபேசனும்-வியாழமு மன்னியோன்னியமாய்ப் பார்க்க, அல்லது வியாழமாகிலும் பார்க்க தேவதைகளாலே தனம்வந்துசேரும்-எ-று. 35

சேர்ந்தெழுலக்கினாதி பெலத்திலேசெயமாய்ப்பாவி
பேர்ந்ததைப்பார்க்கரண்டான் சட்டாட்டம்போகம்பானு
வீர்ந்திடுமீனனாகி யில்லதுவியனிரண்டாய்ச்
சார்ந்திடத்தனத்தினீசன் சட்டமாதெண்டமாமே.

இ-ள். இலக்கினாதிபன் ஈனபெலமாகப் பாவிகளாற்பார்க்கப்பட்ட சட்டாஷ்டிமத்தில் தானாதிபதியும் ஆதித்தனும்போக அவர்கள் நீசனாகத்தன ஈனம், வெயேசன் தனராசியிலிருக்க லாபாதிபதி அஷ்டமத்திற்போகத் தனத்தில் நீசனிருக்க இராஜதெண்டத்தினாலே தனசேதம் வரும்-எ-று. 36

தெண்டியாத்தனேசனாச ராசிதானீசனாகத்
தண்டியேகுருசட்டாட்ட மாசராற்றனங்கனாசம்
ரண்டெனவியயன்கூட லக்கினனாறெட்டாமி
ரண்டிலக்கினனுநாதம் வியன்பார்க்கக்கோபச்சேதம்.

இ-ள். தனேசன் நாசராசியிற்போக அல்லது நீசனுகப்போக வியாழமுஞ் சஷ்டாஷ்டமவியத்திற்போக இராஜதெண்டத்தினுல் தனச்சேதம், வியாதிபதியுடனேபார்க்க இலக்கினேசன் நாசராசியி னுலே பாவியாக இருக்க இராஜகோபத்தினுல் தன்ச்சேதம்-எ-று.

சேதமாங்கர்மலாபன் னேமகண்டாங்சமேறச்
சார்தனநாதனுந்தா னவனுறிற்சிரச்சேதம்மாம்
போதவேதனத்தான்கர்ம்ம நாசமாய்ப்போகலோகத்
தாகரிமாபற்பாவி யவரங்சந்தனமேநாசம்.

இ-ள். கர்மேசன் லாபாதிபதி யமகண்டாங்கிசம் ஏறினும் நாசராசியிலிருக்கினும் சிரச்சேதம்வரும். தனுதிபதியுமப்படியிருக்க லோக அபவாதத்தினுல் தனச்சேதம்-எ-று. 38

தனதெனுங்குரூரமான அங்கிசஞ்சார்ந்துபாவூ
ளினமெனக்கூடலாப னிவ்வண்ணமாகிச்சேதம்
வினவியதனத்தானின்ற ராசியான்குளிகன்கூடி
யனுதினமாறெட்டாகி லவர்கட்குந்தனமேநாசம்.

இ-ள். தனேசன்குரூர அங்கிசம் ஏறிப்பாவிகளுடனேயிருக்க லாபாதிபதியும் அப்படியிருக்கத் தனஈனன், தனுதிபதி எந்தராசியி லிருந்தானே அந்த ராசியாதிபதி சஷ்டாஷ்டமவியத்திற்போகக் குளிகனுடனேகூடத்தன ஈனன்-எ-று. 39

அவர்களிற்றனத்தான்றன்னைப் புகர்குருவாமேலபார்த்துக்
குவடெனுங்குரூரசட்டி யங்கிசங்குறகிவாழ
நவமெனுமிலக்கினுதி சட்டாட்டவியங்கணுடைப்
பவனெனத்தனத்தைவைத்துப் பார்த்துப்பினிழந்துபோவான்.

இ-ள். தனுதிபதியைக் குரு சுக்கிரன்பார்க்கப்பட்டு குரூரசஷ் டியங்கிசமேற, லாபாதிபதியும் லக்கினுதிபதியும், சஷ்டாஷ்டம விய ங்களிற்போக வெகுநாள் தனமிருந்து இழந்துபோவான்-எ-று. 40

இளங்கையான்றனத்தான்வைகே சியங்கிசமேறப்பொன்னன்
வளர்துயர்வீட்டின்மூலத் ரிகோணத்தில்வருமேயாகி

துளங்திகழ்தனமேதேடி யிருக்குமாப்போலேநாளி
லிழந்துபின்றேடித்தேடி யிருப்பதுதிண்ணமாமே.

இ-ள். தனவான் வைசேஷியக்கிசமேறக் குரு சொட்சேத்திரமூலத்திரிகோணத்திலிருக்க லாபம்வந்து நாசமாகப்போம்-எ-று. 41

இருப்பதிலக்கினத்தான் றனத்தினிலாபமாறுன்
விருப்புடன்கூடவேழிற் சுக்கிரன்மின்னூர்சேத
மருக்கமழ்புகரோனேழில் வியாழந்தான்பாராவிட்டாற்
றிருக்களாலாயிரம்பொன் சிதையும்வேய்த்தோளணங்கே.

இ-ள். இலக்கினேசன் தனத்திலிருக்க, லாபேசன் ஆறுமிடமுடையவனுடனேகூட ஏழிற் சுக்கிரனிருக்க ஸ்திரீமூலத்தினால் ஆயிரம்பொன்விரயமாம்-எ-று. 42

வேயத்திற்புகரேவாழமுந்தனத்திலாகிச்
சேயுற்றசிகரமாதி சேர்ந்திடத்திரியாலாப
மாயுற்றலக்கினாதி யுடன்பொன்வைசேசிமேவச்
சீயப்பொன்கேந்திரகோணந் திரியினாலாபநல்லாய்.

இ-ள். வியற்திற் சுக்கிரனிருக்க தனத்தில் வியாழம்நிற்கச் சந்திரன் கர்மாதியுடனேகூடியிருக்க ஸ்திரீகளினாலே அர்ச்சிப்பன், குருலக்கினாதிபதியுடனேகூடித்தனேசன் வைசேசியங்கிசமேறக் கேந்திரத்திரிகோணத்தில் வியாழமிருக்க முன்சொன்னபலன்-எ-று.

நல்லதோாதனத்தான்கேசி யங்கிசமதுவேநாட
வல்லவன்பாக்கியாதி களத்திரத்தானமாகப்
புல்லியனாலாம்வீட்டிற் சுக்கிரனிற்கப்பாவ
ரெல்லையில்லாதிரண்டு லட்சம்பொன்னூட்சிப்பானே.

இ-ள். தனாதிபதி வைசேசியங்கிசமேறப் பாக்கியாதிபதி ஏழினிலிருக்க நாலாமிடத்தில் சுபனிருக்க இரண்டுலட்சம்பொன் அர்ச்சிப்பான்-எ-று. 44

ஆட்சியாம்புகரும்வேயன் றனத்திலேவியாழமாகிக்
காட்சியாம்லக்கினேசன் வைசேசியங்சங்காணத்

தாட்சியாம்லக்கினாதி பதியுடனாகிலென்று
மாட்சிமையாகநாளு வித்தினிலாபம்வாய்க்கும்.

இ-ள். வியத்திற்சுக்கிரனிருக்க தனத்தில் வியாழமிருக்க லக்கினேசன் வைசேஷிகாம்சமேற அல்லது லக்கினாதிபதியுடனே கூட நானாவிதத்திரவியம்வந்துசேரும்-எ-று. 45

வாய்த்தெழுலாபனாதன் பாக்கியம்வாழவன்றிப்
பாக்கியம்வாபத்தானைப் பார்த்தவர்க்கோத்தமமான
தேய்த்தவங்கிசமேயேறச் சுகமுண்டாய்ச்சதகம்பத்தாய்க்
காய்த்தபொன்னார்த்தியாகிக் கனமுடன்வாழ்குவானே.

இ-ள். லாபேசன் பாக்கியத்திலிருக்க அல்லது பாக்கியாதிபதி லாபேசனைப்பார்க்க குரு வர்க்கோத்தமாங்கிசமேறப் பதினாயிரம் பொன்னாட்சிப்பான்-எ-று. 46

கனகனுந்தனத்தான்சட்டாட் டமவியனுடனேகூட
வனுதினந்தனமேயில்லை யருக்கனுஞ்சனியுங்கூடிப்
புனிதனும்புகருமாறிற் பூமகன்கூடவன்றி
வினவியசனிதானாறின் மேவினும்பிட்சையாவான்.

இ-ள். இரண்டாமிடமுடையவன்சஷ்டாஷ்டமவியாதிபதியுடனேகூடியிருக்க அவனுக்குத்தனமில்லை, சூரியன் சனியுடனேகூடி சுக்கிரன் ஆறுமிடத்திற் செவ்வாயுடனேகூட அல்லது 6-மிடத்திற் சனியிருக்கப் பிக்ஷாவிருத்திப ண்ணுவன்-எ-று. 47

மேவியசனியுஞ்சேயுந் தனத்திலேவிளங்கவிந்து
பாவியாயெட்டிலாகிற் பயித்தியக்காரனாவா
னாவியவட்டபத்திற் சனிராகுநாலிலாகத்
தாவிலேயெட்டிற்குரூர சட்டியான்மத்தியாமே.

இ-ள். செவ்வாயும் சனியும் இரண்டாமிடத்திலிருக்கச் சந்திரன் அஷ்டமத்திலிருக்கப் பயித்தியக்காரனாவான், அஷ்டமத்தில் இராகுகேதுவிருக்க நாலாமிடத்திற் சனியிருக்க அல்லது எட்டாமிடத்திலிருக்க குருக்க குரூர்சஷ்டியங்கிசமேறப் பயித்தியக்காரவான்-எ-று. 48

மத்தவாகேசனீசஞ் சட்டாட்டவியக்கள்பாம்பு
மத்தனுஞ்சனியுமிந்து மட்டனுமரணந்தாயாஞ்
சித்தமாம்லாபன்மைந்தன் சேரிலேசெய்பாம்பா
லுத்தமாமதியுக்கூடத் தாயனுமரணமாமே.

இ-ள். வாக்குஸ்தானாதிபதி நீசனாக சஷ்டாஷ்டம வியங்களிலே ராகு கேது விருக்க 5-மிடத்திற் சனியுடனேகூடி சந்திரனிருக்க மாதா அனுமாணம், லாபேசன்-சனியுடனேகூட அல்லது செவ்வாயுடனேகூட ராகு கேது சந்திரனுடனேகூட மாதாஅனுமாணம்-எ-று. 49

தாயெனுமிலக்கினேசன் றனபதியுடனேசார
வேயெனும்புகருங்கூடக் குருவதைவிரும்பிப்பார்க்க
நாயகன்வேயனோடே நண்ணவேதானும்பொல்லாத்
தீயவன்ரணத்துக்குள்ளாய்ச்செயலுடன்வாழ்குவானே.

இ-ள். இலக்கினேசன் தனாதிபனுடனேயும் வியாதிபனுடனேயுங்கூட குருபார்க்க வியாதிபனுடனே தனாதிபன் இருக்க ரணப்படுவான்-எ-று. 50

செயல்பொருதனத்தான்பாவி லக்கினவியத்திற்சேரத்
தயவுடன்கிசத்திற் றனன்சனிவீடுதாக்க
வியல்புடன்ரணமாம்ரண்டிற் பாவியாய்லக்கினேசன்
மயல்பொருவியமாய்ரண்டாமங்கிசஞ்சனியவ்வண்ணம்.

இ-ள். தனத்தில் பாவியிருக்க லக்கினேசன்வியத்திலிருக்கத் தனாதிபதி சனியங்கிசமேற இரணப்படுவான் 2-ல் பாவியாய் லக்கினேசன் வியமாய் இரண்டாமிடத்தா னங்கிசத்திற் சனிபார்க்க ரணப்படுவான்-எ-று. 51

வண்ணமாம்பாக்கியாதி பதினொன்றில்வாழப்பானு
திண்ணமாய்தனமேசேரத் தனத்தவனீசஞ்சேரப்
பண்ணியேபாவராலுந் தனமுறவட்டமத்திற்
றண்ணிலாப்பாவர்கூடில் ரணமுடன்காலம்போமே.

இ-ள். பாக்கியாதிபதி லாபத்திலிருக்க ஆதித்தன் தனத்திலி ருக்கத் தனேசன் நீசராசியிலிருக்க அல்லது பாவாள் தனத்தில் அ ஷ்டமத்திலிருக்க ரணமுண்டாம் எ-று. 52

காலமாந்தனேசன்சட்டாட் டமவியமேவக்கண்டு
கோலமாங்குரூரசட்டி யங்கிசங்கொள்ளலாபன்
வாலமாம்லக்கினேசனுடன்சட்டிவருமேயாகி
லேலவேரணமுண்டாகி யிருப்பதுவாக்குத்தானே

இ-ள். தனேசன் சஷ்டாஷ்டமவியத்திற்போகக் குரூரசஷ்டிய ங்கிசமேற லாபேசனும் லக்கினேசனும் குரூரசஷ்டியங்கிசமேறரண ம்வரும் எ-று. 53

வாக்கினன்றன்சட்டாட்ட வியமதாய்ராகுவாறி
னீக்கமில்லாமற்கூடிற் றந்தம்போமிரவிரண்டா
யேர்க்கவேசெவ்வாய்நாலி லிருக்கவும்பல்லுநோயாந்
தாக்கியபெலத்தைப்பார்த்து தன்னிலேயாய்ந்துபாரே.

இ-ள். வாக்குஸ்தானாதிபதி சஷ்டாஷ்டமத்திலிருக்க ராகுவும் ஆறில்கூடியிருக்க பல்விழுந்துபோம் ஆதித்தன்தனத்திலிருக்க செ வ்வாய் நாலிலிருக்க பல்நோயுண்டாம் எ-று. 54

ஆய்ந்துபார்தனத்தினானு மட்டமமிருக்கவெய்யோன்
காய்ந்திடுலக்கினாதி யுடன்ரோகத்தானங்காண
வேய்ந்திடுங்கர்னநோயு மிலக்கினன்றனத்தானாறன்
வாய்ந்துகூடச்சேய்சுங்கன்வாக்குறிற்பல்வாலீபத்திற்போமே.

இ-ள். தனாதிபதி அஷ்டமத்திலிருக்க ஆதித்தனுடனேகூடல க்கினாதிபதி ஆறுமிடத்திலிருக்கரணரோகணம்வரும் ஆறுமிடமூடை யவனுடனே தனாதிபதியும் லக்கினாதிபதியுங்கூடச் செவ்வாயும் சனி யும் தனத்திலிருக்க வாலிபத்திற் பல்விழுந்துபோம் எ-று. 55

வாலீபன்றனத்தானத்தான் மித்துருவங்கம்வாழ்ந்து
சீலமாயுச்சமாக வியாழமுமதியுநன்றாய்ப்

பாலனைப்பெலனுய்நண்ணப் போசனப்பரிவுண்டாகு
மேலவேவாக்கான்கார னங்கிசகவதேன்முன்போல்

இ-ள். வாக்குத்தானுதிபதி பித்துரு அங்கிசமேறிப்பரமவுச்ச த்திலிருக்க சந்திரனும் வியாழமும் பெலத்திருக்க போசனசவுக்கிய முண்டு வாகருத்தானதிபதி நல்ல அங்கிசமேற வாகருககாரகன்நல் ல அங்கிசமேற போசனசவுககியமுண்டாம் எ-று. 56

முன்பதாம்புகருமிந்தும் பெலமுறத்தனத்திறை
னன்பினுலேவிசேடவங்கிசமதனில்வாழப்
பின்பதாமிவக்கினேச னுடன்சனிமெலமாய்க்கூடி
லின்பமாம்பொசிப்புகிட்டா திருபபதுதிண்ணமாமே

இ-ள். சுக்கிரன்சந்திரன்பெலத்திருக்க தானுதிபதிவிசேஷாங் கிசமேற லக்கினேசனுடனே சனிகூடச்சங்கடபோசனம் எ-று.

இருந்திடுந்தனத்தானுச்ச வைகேசிகாங்கமேறப்
புரிந்தெழும்புந்தியோடே கூடவும்புத்திரே
னந்தியேபேறுமந்த வங்கிசநாதன்வீடாய்ப்
பொருந்தவேயிருக்கவெள்ளி பாத்திரமதிற்பொசிப்பன்

இ-ள். இரண்டாமிடமுடையவன் உச்சமாகவைகேசி காங்கிச மேரப் புதனுடனேகூடப் புத்திரேசன் ஏறின அங்கிசத்தில் அங்கி சாதிபதி பெலத்திருக்க வெள்ளிபாத்திரத்திற் பொசிப்பன் எ-று.

பொசிப்பென்னுந்தனத்தான்பாவ சகிதனுப்பொருந்துவீடா
யொசித்தவாரெட்டுவீய முதிததிடிலோடுபட்டை
விசித்திரன்பத்திரகாச ராசியைவிரும்பப்பாவ
ரசிதத்தைப்பார்க்கிலோடு பட்டையாயறையலாமே

இ-ள். வாக்குஸ்தானுதிபன் பாவக்கிரகசகினுக• அவனிருந்த ராசியான் அஷ்டமவியங்களிற்போக ஓடு வட்டைகளிற் பொசிப்பா ள் என்றவாறு. 59

அறைந்தெழுமைந்தனுகி யரசெனுஞ்சுபனேயாகி
நிறைந்துதானிருந்தவீட்டான் சுபனெனச்சுபனேபார்க்கச்

சிறந்தவாழ்நல்லபுத்தி புத்திரேசனுஞ்சிறக்க
வறந்தருங்குருவுஞ்சுங்கன் மருமமேலமரர்பாக்கியம்.

இ-ள். புத்திரஸ்தானாதிபதி சுபனாகச் சுபக்கிரகமிருந்த அவ னிருந்த ராசியாதிபதியுஞ் சுபனாகச் சுபக்கிரகம்பார்க்க நல்ல புத்தி யுடையவன், புத்திரநாதன் பெலவானா யிருக்க விசேஷாங்கிசமேறக் குரு சுக்கிராளாற் பார்க்கப்பட்டசொட்சேத்திரத்திலிருக்கத் தெய் வம்போக்கிய போஜனமுண்டு எ-று. 60

அமரர்தன்குருவும்புந்தி தனபதிகூடவன்றி
விமலனுந்தனத்தைப்பாாக்க கேசியங்கிசம்விரும்பி
நமதெனமிருத்துவங்கி சத்தாறுமேறநன்றாய்த்
தமதெனவமரருண யுண்ணலாந்தாழ்ச்சியில்லை

இ-ள். தனாதிபதியுடனே குரு புதன் கூட அல்லது பார்க்க வைகேசியங்கிச மிருத்துவங்கிசமேற தேவபோக்கிய போசனமுண் டாம் எ-று. 61

ஊண்டருந்தனத்தான்பொன்னன் புகரெனப்புதனும்பார்க்கக்
காண்கெனக்கூடக்கேசி யங்கிசங்கமழ்பொசிப்பாஞ்
சேண்பொருந்தனத்தான்பாவ நீசனுய்க்குரூரசட்டி
பூண்பலபொசிப்புதேடிக் கருத்தழிந்துலேந்துபோவான்

இ-ள். வாக்குத்தானாதிபதி குரு சுக்கிரனாக அவனைப் புதன் பார்க்கக்கூட வைகேசியங்கிசமேற தெய்வபோஜனம், தானாதிபதி சொட்சமித்துரு உச்சமல்தேல் பாவநீசனாய்க் குரூரசஷ்டியாங்கிச மாயிருக்க அல்லது பார்க்க அன்னங் தேடிப்பொசிப்பான் எ-று.

கருத்தெனுந்தனத்தானத்திற் காரியாய்த்தனத்தானீசம்
பொருத்தவுமன்றிக்கூட சிராத்தத்திற்பொசிப்பதாவா
னுருத்தெழுந்தனத்தான்காரி சேய்குளிகன்னோடாக
வரித்ததைப்பார்வையாகி லுஞ்சிராரத்தமன்னும்.

இ-ள். தனத்திற் சனியிருக்க அந்தத்தானாதிபதி நீசனாக அல் லது சனியுடனேகூட, சிரார்த்தங்களிற்கூடித் தின்பன், புத்திர நாதன் சனி செவ்வாய் குளிகனுடனேகூட அல்லது அவர்கள்பார்க் கச் சிரார்த்தம் வாங்கிப் பொசிப்பான் எ-று. 63

மன்னியதனத்தான்பாவ சகிதனுய்லக்கினத்தி
லண்ணியுந்தனத்திலாறி லாதித்தன்சேயேயாகப்
பன்னியசெய்தான்பார்க்கப் பெரியோர்கடமைப்பல்காலும்
பொன்னிகர்விரதனுகிப் பூசிதம்பண்ணுவானே.

இ-ள். தனத்தான் பாவியுடனே கூடியிருக்க, லக்கினேசன் சஷ்டமத்தானத்திலே ஆதித்தனிருந்து செவ்வாயாலே பார்க்கப் பட்டால் பெரியோர்களைப் பூசிப்பன் எ-று. 64

பண்ணியசெவவாய்சத்ரு தானையுதத்திற்பற்றத்
தண்ணியில்வியத்திலாதல் சனிகூடத்துறுவர்ச்காகு
மெண்ணியசனியிரண்டி னுலெனும்பாவரேறிற்
றிண்ணமாந்திடனேபேசித் திரிவதுவாக்குத்தானே.

இ-ள். இலக்கினம் வியத்திற் செவ்வாயிருக்க சத்துரு தானுதி பதியாக இருக்கச் சனியுங்கூடியிருக்கத் துர்வாக்குபேசுவன், தனத் திற் சனியிருக்கக் கர்ம்ம நாலிற் பாவிகளிருக்கப் படுதூஷணபுத்தி யுடையவன் எ-று. 65

வாக்கிலோர்காயமாந்தி மனத்துடன்பார்க்குமாகிற்
ருக்கியசர்ப்பபீதி தனத்தினிற்பாவியாக
நீக்கமில்லாமற்பாவி பார்க்கக்ரூராங்சமேவத்
தேக்கியதனத்தான்பாவி கூடவேசர்ப்பந்தீண்டும்.

இ-ள். தனத்திலே ராகுவிருக்கக்குளிகனுலேபார்க்கப்பட்டால் பாம்பினுற் பீதியுண்டு, தனத்திற் பாவியிருக்கப் பாவிபார்க்கக் குரூ ராங்கிசமேற இரண்டாமிடமுடையவன் பாவியுடனேகூட சர்ப்பந் தீண்டும் இப்படி பெலாபெலமறிந்து ஆராய்ந்துசொல்லுவது. 66

இரண்டாம்பாவ முற்றிற்று.

உ

முருகக்கடவுடுணை.

மூன்றும் பாவம்.

கூடிபதனத்தின்பாவங் கூறினோமூன்றும்பாவ
நாடியசகசம்பிராதுர்ப் பராக்கிரமங்களவுரோகம்
வீடியகழுத்துமேலும் வித்தைதட்சணம்பட்சிப்புத்
தேடியவேங்கடேச தேவனுமருள்செய்தானே

இ-ள். மூன்றுமிடங்கொண்டு சகசம் சகோதரம் பராக்கிரமம் சழுத்து களவு ரோகம் வித்தை தட்சணம் பட்சிப்பு இவைகளைச் சொல்லுவோம் எ-று. 1

செய்தியாமூன்றும்பாவந் தேவனுஞ்சேயுங்கூடி
வெய்யவன்பாபாள்கூட வல்லதுவிரும்பிப்பார்க்க
வெய்தியாய்ச்சட்டவட்ட வியங்களிலிருக்குமாகி
னையவேசகோதரங்க ளுசமாங்கலைவல்லோரே

இ-ள். மூன்றுமிடமுடையவனும் செவ்வாயும் பாவிகளுடனே கூடிப் பாவிகள்பார்த்து சஷ்டாஷ்டம வியங்களிலிருக்கச் சகோத ராள் நாசம் எ-று. 2

வல்லவர்பாவாண்மூன்றில் வதியவும்பார்க்குநாச
நல்லதேமூன்றுநீச னங்கிசநாசமாகிற்
புல்லவன்பாவரோடு சகிதனாய்ப்பொருந்துமாகி
லில்லையாஞ்சகோதரங்க ளென்றுமாமுனிவன்கூறும்

இ-ள். மூன்றில் பாவியிருக்க அல்லது பாவிகள்பார்க்க சகோ தரமில்லை சகோதரநீசனாக நீசாங்கிசமேற பாவசமானிதனாக இருக்க ச்சகோதரமில்லை எ-று. 3

கூறியமூன்றும்விட்டான் குறுகுமங்கிசத்துநாத
நீறிலைநீசாங்ச மேறவேபிராதாவில்லை
தேறியேசகோதரத்திற் பாவியேசேரவன்றி
மீறுகாரகனைக்கூடிற் சோதரம்விலக்கதாமே

இ-ள். சகோதரத்தானுதிபதி ஏறினவங்கிசாதிபதி நீசாங்கிச மேறச் சகோதரநாசம் மூன்றுமிடமுடையவன் பாவியாக இருக்க காரகனுமப்படியே யிருக்கச் சகோதரமில்லை எ-று. 4

விலக்கனும்பிராதுர்நாத னங்கிசமெடுத்தவீட்டான்
பிலத்திடநாசராசி யாயிடிற்பிராதாவில்லை
யிலக்கினமூன்றும்வீட்டா னெடுத்தவங்கிசத்தானத்தான்
றலத்தினிற்சட்டவட்டம் வியமெனிற்பிராதாநாசம்

இ-ள். பிராதுரு ஸ்தானுதிபதி ஏறின அங்கிசாதிபதி யிருந்த வீட்டிற்குடையவன் சஷ்டாஷ்டம வியங்களிலிருக்கச் சகோதரநாசமாம் என்றவாறு. 5

நாசமாஞ்சகோதரத்தான் குரூரசட்டியங்கமேறப்
பாசமாங்காரகன்று னனுவெனிற்றனியனுகு
மாசிலாமூன்றும்வீட்டான் பர்வதாங்கிசத்தின்மன்னத்
தாசனுய்ச்சுபரேபார்க்கச் சகோதரமிகவுண்டாமே

இ-ள். மூன்றுமிடமுடையவன் குரூரசஷ்டியங்கிமேறக்காரகனுமப்படியேயேற அவனொருத்தனுகப்பிறப்பன் சகோதரத்தானுதிபதி பெலஈனமில்லாமல் பாராவதாங்கிசமேற சுபனுடனே கூடியிருக்க சுபாள்பார்க்கச் சகோதரலாபமுண்டாம் எ-று. 6

உண்டெனுஞ்சகோதரத்தை நாதன்காரகனேமேலும்
விண்டெனச்சுபாளேபார்க்கிற் சகோதரமிகவுமுண்டு
கொண்டலாமூன்றும்வீட்டான் கோணகேந்திரமேயாக
வுண்டெனவுச்சமாகச் சகோதரமிகவுண்டசமே

இ-ள். சகோதரகாரகன் சகோதரத்தானுதிபதியைசுபாள்பார்க்கப் பெலவானுயிருக்கச் சகோதரலாபமுண்டு மூன்றுமிடமுடையவன் கேந்திரத் திரிகோணத்திலிருக்க உச்ச ஸ்வட்சேத்திரனுகச் சகோதர வர்த்தனேயுண்டாம் எ-று. 7

மிகவெனும்பிராதுர்நாதன் சேயெனும்வீடுமாகி
னகைவீரிசுபரேபார்க்கிற் பராக்ரமனுகவாழ்வ
னுகமெனுமூன்றும்வீட்டா னுச்சனுய்ப்பிலவானுகித்
திகமுங்கேந்திரநாதன்று னுண்டெனிற்றயின்யனுமே

இ-ள். மூன்றாமிடமுடையவன் செவ்வாய்க்கு ஸ்வட்சேத்திரனாக அந்தராசி பெலவானாக இருந்தால்பராக்கிரமசாலியாயிரும்பான், மூன்றாமிடமுடையவன் உச்சனாக இருக்க, சேந்திரத் திரிகோணங்களிலே சுபக்கிரமாகியிருக்க வைசேசியங்கிசம் ஏற தைரியவானாயிருப்பன்-எ-று. 8

தயின்யத்தானென்னநல்லோர் சகிதனுய்வைசேசித்தன்
புயலெனத்தீரனவன் பொருவிலாமூன்றாம்வீட்டான்
றயவுடனுச்சனாகச் சகோதரஞ்சாமேயாகிற்
பயமன்றித்தீரனவன் பராக்கிரமசாலியாமே

இ-ள். மூன்றாமிடமுடையவன் சுபக்கிரகத்துடனேகூடி வைசேசியங்கிசம் ஏற தீரனாக இருப்பன், மூன்றாமிடமுடையவனுச்சனாக மூன்றாமிடஞ் சரராசியாக இருக்க அவன் பராக்கிரமசாலியாவான்-எ-று. 9

பார்க்கிரமத்தானத்தபனும் பன்னிரண்டாகவந்தத்
தீர்க்கமாங்காரகன்றான் சொட்சேத்ரவுச்சனாகி
லேர்க்கவேசன்வந்தானு மெதிர்ப்பமூன்றாமிடததா
னார்க்கவேகாரகன்பா ராவதமாகிற்றீரன்.

இ-ள். மூன்றாமிடமுடையவன் பனிரண்டிலிருக்கக் காரகன் பெலவானாக அவன் ஸ்வட்சேத்திர வுச்சனாக முதற்களம் வந்துமறுபடியும் தயிரியம்வரும், காரகன் பாரவதாங்கிசமேறத் தீரனாகி யுத்தம்பண்ணுவான்-எ-று. 10

தீரனப்பிராதுர்ப்பாத னாதித்தனுடனேசேர
வாரனுஞ்சசியுங்கூடிச் சனிபார்க்கவவனுந்தீரன்
கோரமாமூன்றாம்வீட்டான் குருவுடன்கூடவேழாம்
பாரவான்சேயாற்சண்டை பண்ணவேமூட்டுவானே.

இ-ள். மூன்றாமிடமுடையவன் ஆதித்தனுடனேகூடச் சந்திரனுடனே செவ்வாய்கூட சனியாலேபார்க்கப்பட யுத்தங்களிலே சாமார்த்தியனாக இருப்பான், மூன்றாமிடமுடையவன்குருவுடனேயும் ஏழாமிடமுடையவன் செவ்வாயுடனேயுங்கூட எந்நேரமுங் கலகமூட்டுவன்-எ-று. 11

மூட்டியமூன்றாம்வீட்டில் ராகுவாயன்றிமூன்றா
னுட்டியவரவுங்கூட வன்றியும்பிராதுர்ப்பாத

னீட்டியகோணகேந்திரஞ் சனியெனுமவனேபார்க்க
வாட்டியகளரோகந்தான் வந்திடுந்திண்ணமாதே.

இ-ள். மூன்றாமிடமுடையவனுடனே ராகுகூட அல்லது ராகு மூன்றாமிடத்திலிருக்க மூன்றாமிடமுடையவன் பிரதிசித்தமாய் கேந்திரத்திரிகோணத்திலிருக்க அவனைச் சனியாலே பார்க்கப்பட்டால் களரோகம்வரும்-எ-று. 12

களமெனுமூன்றாம்வீட்டி னீசரேதங்கநாலா
மளவிடைசட்டவட்ட வியங்களாய்ப்பாவிபார்க்கச்
சளம்வருங்களமாம்ரோகங் குளிகன்றான்மூன்றிற்றங்க
வுளதெனும்ரோகத்தான்மூன் றவனுடன்களரோகம்மே.

இ-ள். மூன்றாமிடத்தில் நீசக்கிரகமிருக்க நாலாமிடத்துக்குடையவன் சஷ்டாஷ்டம வியங்களிலிருக்கப் பாவிகள்பார்க்கக் களரோகம்வரும், மூன்றாமிடத்திற் குளிகனிருக்க மூன்றாமிடமுடையவன் ஆறாமிடமுடையவனுடனேகூட ராகு-குளிகன் பார்க்க களரோகம்வரும்-எ-று. 13

உடன்பொருபுகருமிந்து பிலமுறச்சுபக்கோளாடாய்த்
திடன்படச்சுபர்கள்பார்க்கப் பொன்னின்பாத்திரஞ்சேர்மூன்றிற்
றடத்திங்கள்புந்தியாகிச் சவுமியாள்பார்க்கநன்றா
மிடம்பெறுகாரகன்றா னிவ்வணங்கடுக்கனுண்டாம்.

இ-ள். சுக்கிரனும் சந்திரனும் பெலவானாக சுபாள்கூடப்பார்க்க பொன்பாத்திரத்திற் சாப்பிடுவான், மூன்றாமிடத்தில் புதனிருக்க சவுமியாள்பார்க்கக் காரகனுமப்படியே யிருக்கக் கடுக்கன் அணிவான்-எ-று. 14

கடுகியபானுத்தானம் பாவிகள்பார்க்கமற்ற
வடுதொழிற்கிரகமெல்லா மாரோபங்களரோகம்மாந்
திடமுடன்மூன்றில்ராகு சேரவுஞ்சுபர்பாராமற்
கடவுளர்தானத்தானைப் பார்க்கினுங்களரோகந்தான்.

இ-ள். மூன்றாமிடத்தில் பாவிகளிருக்க மற்றகிரகங்கள் அபரோகத்திலிருக்க விசேஷமாய்க் களரோகமுண்டு, மூன்றாமிடத்தில் ராகுவிருக்க சுபர் பாராதிருக்கக் களரோகம்வரும்-எ-று. 15

ரோகமாந்தானத்தானுஞ் சேயுடன்கூடியந்த
தேகனுஞ்சட்டவட்ட வியமுறிற்செவிகேளாதாம்

பாகமாமூன்றும்வீட்டிற் புகர்நிற்கக்குருவும்பார்க்கப்
பாகனுமிருக்கநீலக்கடுக்கனுமணிகுவானே.

இ-ள். செவ்வாயுடனே அறுமிடத்துக்குடையவன்கூடி சஷ்டாஷ்டமவியத்திலிருக்க செவிகெட்டுப்போம், மூன்றுமிடத்திற் சுக்கிரனிருக்க வியாழம்பார்க்க அல்லது இருக்க நீலக்கல் கடுக்கன் போடுவான் எ-று. 16

வனைகழன்மதியுந்தேவ மந்திரிபுகர்மால்கூட
வனைவாநஞ்சேயுங்கூட வச்சிராபரணமாகும்
புனைமதிபொன்மால்சுங்கன் பொருந்திடமூன்றதாகிற்
றினைசரிபுராணசித்தஞ் செவியுறக்கேட்பன்றனே

இ-ள். சந்திரனுடனேயும் செவ்வாயுடனேயும் சவுமியாள்கூட வைரக்கல்பதித்த ஆபரணம் பூணுவான், சந்திரன் வியாழம் புதன் சுக்கிரன் இவர்கள் மூன்றிலிருக்கப் புராணங்கள்கேட்பன் புண்ணியவான் எ-று. 17

மூன்றும்பாவ முற்றிற்று.

நாலாம் பாவம்

கேள்வியாம்வேங்கடேச கிரீடகன்மூன்றும்பாவந்
தாழ்வுறவுரைத்தேன்பின்னுஞ் சதுர்த்தயங்கிரகமாதா
வாழ்வுறபாரிவீரம் வத்திரஞ்சயனம்பாச
மாள்விலாச்சுகங்களேறும் வாகனஞ்சாற்றுவேனே.

இ-ள். நாலாமிடங்கொண்டு வாகனம் கிரகம் மாதுரு களத்திரம் வீரம் பாசவர்க்கம் சுகம் புடவை மூத்திரகிரிச்சினம் சயனம் நஷ்டம் இவைகளைச் சொல்லுவோம் எ-று. 1

சாற்றியபுகரோனேழிற் சாருமேற்காமிபுந்தி
கார்த்திடலன்யதாரங் குருவுஞ்சேர்தாரமற்ற
சீற்றமாஞ்சனியுமங்க வீனமேசேருஞ்செவ்வாய்
தோற்றிடில்வெகுபேர்பானுப் பரதாரஞ்செப்பலாமே.

இ-ள். சுக்கிரன் களத்திரத்தானத்திலிருக்க அதிககாமி, புதனிருக்கில் அன்னியதாரமிச்சிப்பன், குருவிருக்கில் சோரதாரன்,

சனியிருக்கில் அங்கசன சங்கமம், குசனிருக்கில் வெகு சத்திரிசை யோகம் பானுவிருக்கில் பரதாரம் விரும்புவன் எ-று. 2

செப்பியலக்கினாதி குடும்பனுந்தாரத்தானுக்
கொப்பிலாப்பகையேயாகிற் பரத்திரியுகந்துவாழ்வ
னப்படிலக்கினாதி பாவிகளுடனேயாகத்
தப்புமேற்பாவமேழிற் றரித்திடிற்சாதியீனம்

இ-ள். இலக்கினாதிபதியுங் குடும்பாதிபதியும், களத்திரத்தானாதிபதிக்குச் சத்துருவாகியிருக்கப் பாவஸ்திரீ கெவுனி லக்கினாதிபன் பாவிகளுடனேகூட பாவிகள் பார்க்க அல்லது ஏழாமிடத்திலிருக்க பரஸ்திரீகமனன் எ-று. 3

சாதியாம்லக்கினேசன் குடும்பன்சத்துருவான்கூடி
யேதிலாப்பாவிபார்க்க வீனசாதியளைச்சேர்வன்
கோதிலாப்பாம்புமேழாய்க் குரூரரேபார்க்கிற்கண்ட
மாதரைவிரும்பிப்பொல்லாக் கர்ம்மனாய்வாழுவானே.

இ-ள். இலக்கினாதிபதியும்,சத்துருத்தானாதிபதியும், குடும்பாதிபதியுங்கூடியிருக்கப் பாவிகள்பார்க்க ஈனப் பரஸ்திரீகமனன், ராகு கேது எழிலிருக்கப் பாவிகள் பார்க்க விபசாரம்பண்ணுவன் எ-று.

கர்மனும்வித்தையானுங் களத்திரத்தானத்தானும்
பன்னியவாறிற்பத்திற் பரிந்திடிற்பரவிந்தாகு
நண்ணியவேழாம்வீட்டானாலுறச்செவ்வாய்காண
தன்னிலேவேசியானத் திரீகளைசயனிப்பானே.

இ-ள். கர்மேசன் வித்தியேசன் களத்திரேசன் இவர்கள் ஆறுமிடமுடையவனுடனேகூடி கர்மத்திலிருக்க அவன் பரபுத்திரன் ஏழாமிடமுடையவன் நாலாமிடத்திலிருக்க செவ்வாய்பார்க்க பரஸ்திரீகமனன் எ-று. 5

தகிலியபுத்திரேசன் களத்திரன்பெலனாய்ச்சேர
வகிலமாமாறுன்பார்க்கப் பரவிந்துதிரியுண்டாவன்
பகரிலமுடையான்வாக்காற்பாவிகளுடனேகூடச்
செகமுடையவனேபார்க்கிற் சேரலர்தரிக்குங்கெர்ப்பம்

இ-ள். புத்திரேசனுங்களத்திராதிபதியும்பெலாட்டியாக விருக்க அவன்களத்திரஞ்சோரபுத்தாவால்பிள்ளையுண்டாவள், ஏழாமிட

முடையவனுங் குடும்பாதிபதியும் பாவியுடனேகூடிச் செவ்வாயாலே பார்க்க அவளும் சோரபத்தாவால் பிள்ளையுண்டாவாள்—எ-று. 6

தரித்திடுங்களத்திரேசன் பாக்கியன்சட்டவட்டம்
விரித்தெழும்வியங்களாகக் களத்திரன்பிலனில்லானே
லரித்திடும்புத்திரேசன் பார்த்திடிலவன்றாரத்தாள்
சிரித்திடச்சோரராலே புத்திரர்சிலருண்டாமே.

இ-ள். பாக்கியாதிபதியும் களத்திராதிபதியுஞ்சஷ்டாஷ்டமவி யங்களிலிருக்கக் களத்திராதிபதியும்பெலஈனனாக ஐந்தாமிடமுடை யவன்பார்க்க முன்சொன்னபலனுண்டு-எ-று. 7

சிலவிடுங்கலைகடேய்ந்த மதிசிலபாவிகூடி
யிலகிபவேழாமன்ய காமியஞ்சிடத்தானேழாம்
பலமிலாதேழாம்வீட்டான் பாவனுப்பிருதுபாலன்
பிறமதுகுறைபிற்றாரம் பிள்ளையுண்டாகுமாளும்.

இ-ள். சந்திரன் ஜீரணனாய்ப்பெலனில்லாமல் பாவிகளுடனே கூடி ஏழிலிருக்க அன்னியகளத்திரகாமி, அஞ்சாமிடமுடையவன் ஏழிலிருக்க ஏழாமிடமுடையவன் பாவிகளுடனேகூட சுக்கிரன் பெலவீனனாக, களத்திரங் கொப்பத்துடனே மரணம்-எ-று. 8

பிள்ளையாமதியுநீசம் பெற்றிடக்கர்ம்மனேடே
யுள்ளதாங்களத்திராதி சட்டாட்டவியத்திலோடி
வள்ளருங்குடும்பத்தானஞ் சேயெனிலீனமேவுங்
கள்ளியருடனேசேர்ந்து காலங்கள்கழிந்துபோமே.

இ-ள். சந்திரன் நீசனாய்ப்போக கர்மாதிபதியுங் களத்திராதி பதியுஞ் சஷ்டாஷ்ம வியத்திலேபோகக் குடும்பத்தானத்திற் செவ் வாயிருக்க ஜாதியீனகளத்திரஞ் சேர்வன்-எ-று. 9

கழிந்திடுமேழாம்வீட்டான் பாவிகளுடனேகண்டு
மொழிந்திடுந்தூரசட்டி பங்கிசமுபற்சிபாகி
விழிந்திடுந்திரேகாணத்திற் சனிதானுமேவுமாகி
வழிந்திடுந்தாரத்தானும் விடபட்சணத்தாற்றனே.

இ-ள். ஏழாமிடமுடையவன் பாவிகளுடனேகூட குருரசஷ்டி

யங்கிசம் ஏறச் சனி திரேகாணமேற களத்திரம் விஷபட்சணத்தினால் மரணம்-எ-று. 10

தானெனுங்கர்ம்மாதன்·ராகுவுஞ்சாரவேழிற்
றீனமாஞ்சலராகியாய்ச் சேயுறிற்றிரியுந்துஞ்சுங்
கானவன்களத்திராதி சட்டிங்கிசமாய்க்கண்ட
மானவன்பாகையென்னிற்றூரம்வாழ்வாகச்சொல்லே

இ-ள். காமாதிபதி ராகுவுடனேகூடி ஏழிலிருக்க செவ்வாயா லே பார்க்கப்பட்ட ஏழாமிடஞ் ஜலராசியாயிருக்க ஸ்திரீ தண்ணீரி லேவிழுந்து சாவாள் ஏழாமிடமுடையவன் சஷ்டியங்கிசம் ஏற அதி லிருந்தபாகையெண்ணி அவ்வளவு களத்திரமென்றறிவது-எ-று.

சொல்லியகளத்திரேச னுச்சனுச்சோரநீச
மில்லதுபெலாட்யனாகி லில்லுவிற்பனனேயாகும்
வல்லவன்லக்கினாதிபெலமுறக்களத்திராதி
நல்லனக்குடும்பன்கூட விருதாரநவிலலாமே.

இ-ள். களத்திராதிபதி யுச்சனாக வக்கிரம் நீசமில்லாதிருக்க விற்பன களத்திரமாக இருக்கும் லக்கினேசன் பெலவானாக இருக்க, களத்திரேசனும் குடும்பேசனும் பெலவானாகஇருக்க உபயகளத்திர முண்டாம்-எ-று: 12

நவிலருமதியுப்புந்தி புகர்பொன்னுநலமாய்நாடத்
தரவமென்மூன்றுதாரந் றாதிபன்பாக்கியத்தாய்த்
திரவொளிலக்கினேசன் சட்டாட்டஞ்சேர்ந்து
பவமுறினாற்பதாகும் வயசுமேற்பாரிபற்றும்.

இ-ள். சந்திரன்-புதன்-வியாழம்-பெலமாக இருக்க-அல்லது- சுக்கிரன் பெலமாக இருக்க மூன்றுதாரமென்பது, களத்திராதிபதி பாக்கியத்திலிருக்க லக்கினேசன் சஷ்டாஷ்ட வியங்களிலிருக்கக் குடும்பாபதியுமப்படியிருக்கநாற்பது வயசுக்குமேற் களத்திரமுண்டு.

பாரிலச்கினத்திற்சுக்கன் பரிந்துகேந்திரகோணததாய்
காரியேகேந்திரத்தி லுச்சனேலாபந்தாரந்
தீரனும்வாகனத்திற் சுகனிற்கவாகனேச
னரவேபெலக்கப்பொன்ன னேக்கல்வாகனமாம்யோகம்.

இ-ள். சுகத்திலே சுகனிருக்க, கேந்திரகோண உச்சத்திலிருக்க நல்ல லாபதாரவென்பது, நாலாமிடத்திற் சுபனிருக்க அல்லது நாலாமிடமுடையவன் பெலவானாக வியாழமும் பெலத்திருக்க வாகனயோகமென்பது எ-று. 14

வாகனலாபமேறக் கர்ம்மனும்லாபம்பார்க்க
வேகிலக்கினத்தானேக்கி லிவனுமவ்வணமதாகத்
தாகமாய்பிருகுபால னுலிலாய்த்தானனேடாய்ப்
போகிலக்கினதியோடு பொன்கூடத்துரகமுண்டாம்

இ-ள். வாகனத்தானாதிபதி லாபததிலிருக்க, கர்மாதிபதி வாகனத்தானத்தை அல்லது தானாதிபதியைப்பார்க்க, லக்கினாதிபதியும் பார்க்க வாகனயோகம்வரும், சுக்கிரன் நாலாமிடத்திலிருக்க அல்லது வாகனாதிபதியுடனேகூட, அல்லது வியாழத்துடனே கூடியிருக்க கெஜதுரக பதாதிவரும் எ-று. 15

தும்பிசேரரசன்சுங்க னுடன்கூடவன்றிப்பார்க்க
வெம்பியபாவிநீச னேக்கில்வாகனமுண்டாகுந்
தம்பமாம்பாக்கியாதி வாகன னுடனேசார
நம்பிகேந்திரகோணத்தி லிருக்கவாகனமேநல்கும்.

இ-ள். சுக்கிரன் வியாழத்துடனே கூடியிருக்க அல்லது ஒருத்தர்க்கொருத்தர் பார்வையாக வாகனத்தானத்திலாவது லக்கினத்தானத்திலாவது பாவி நீசாள் பார்த்திருக்க வாகனமுண்டென்பது, பாக்கியாதிபதி வாகனத்தானாதிபதியுடனே கூடியிருக்க அல்லது பாக்கியாதிபதி கேந்திரத்திலிருக்க அல்லது கோணத்திலிருக்க வாகனயோகமுண்டு எ-று. 16

நல்கியபாக்கியாதி வாகன னுடனேகூட
வல்லவன்குருவுநாலாய் வாகனயோகமுண்டாஞ்
சொல்லியலாபமொன்பான் சுகத்தான னுடனேவாழ
வல்லதுலக்னன்கர்மனுநிற்சிங்காசனமுண்டாமே.

இ-ள். பாக்கியாதிபதி வாகனத்தானாதிபதியுடனேகூடியிருக்க வியாழம் வாகனத்திற்பெலமாகியிருக்க இரண்டில் லக்கினநாதனிருக்க வாகனமுடையவனாகியிருப்பன். பாக்கியாதிபதியும்லக்கினாதிபதி

யும் நாலாமிடத்துக்குடையவனுடனே கூடியிருக்க அல்லது கர்மத்திலிருக்க பாவரீசோள் பார்த்திருக்க கர்ம்மாதிபதியுடன் லக்கினதிபதி கூடியிருக்க சிங்காசனபதியாயிருப்பன் எ-று. 17

ஆசனலாபத்தானும் பாக்கியத்தனத்தான்மூன்றில்
வாசனுமொருவனனு மதிக்குகேந்திரத்திலாகத்
தேசறுலாபமைந்திற் குருவீடாய்ச்சிறக்குமாகில்
யோசனைபலநாடாளுங் கண்டசாம்ராச்சியயோகம்

இ-ள். லாபேசனும் பாக்கியேசனும் தனாதிபதியும் இதிலேயொருவர் சந்திரனுக்கு கேந்திரத்திலிருக்க லாபமாகிலுந் தனமாகிலும்வரும், ஐந்தாமிடங் குருவீடாயிருக்க அகண்டசாம்ராச்யயோகம்வரும் எ-று. 18

அகண்டவாகனத்தான்கர்ம்ம தானத்தானுடனேகூடப்
புகன்றசேய்தன்வீடுச்சம் பொருந்திலாப்பூமிலாப
மிகுந்திடுங்கர்ம்மநாலாய் மித்திரனுகநாலான்
மகிழ்ந்துடன்கூடப்பார்க்க வளர்குருலக்கினம்பார்க்க

இ-ள். நாலாமிடமுடையவன் பத்தாமிட முடையவனுடனே கூடியிருக்கச் செவ்வாய் உச்ச ஸ்வட்சேத்திரத்திலிருக்க வெகுபூமிலாபமுண்டு, கர்மராசியுடையவன் பெலவானயிருக்க நாலாமிடமுடையவனுடனேகூடி மித்திரனகியிருக்க க்ஷேத்திர வ்தாதிபதி சுபனுடனேகூடியிருக்க அல்லது பார்க்க காரகனைவியாழம்பார்க்க வெகு க்ஷேத்திரமுண்டு எ-று. 19

பார்க்கிலுஞ்சேத்திராதி யொற்றித்தராசிபார்க்கக்
கார்க்கமாய்ப்பெலனுப்நல்ல கோபுராங்கிசமேயேறத்
தீர்க்கமாய்ச்செவ்வாய்தானு மித்திராங்கிசத்தைச்சேரிற்
சேர்க்கையாய்ச்சேத்திரங்கண் மிகவுண்டாய்ச்செழித்துவாழ்வர்.

இ-ள். க்ஷேத்திராதிபதி ஒற்றித்தராசியிலிருக்க கோபுராங்கிசமேறச்செவ்வாய் மிருத்துவாங்கிசமேற வெகுக்ஷேத்திரமுண்டு எ-று.

செழித்திடுங்கிரகத்தானுஞ் சகோதரனுடனேசேர்ந்து
வழிப்படிற்பிராதுர்சேத்திரம் வருவதுமிகுவதாகும்

விளைத்திடுஞ்சேத்திராதி விரும்புமங்கிசத்தானுலிற்
றழைததவனுடனேகூடிற் சேத்திரந்தானுண்டாமே

இ-ள். மூன்றுமிடமுடையவனும் நாலாமிடமுடையவனுங் கூடில் பிராதுர்க்ஷேத்திரமடையும், க்ஷேத்திர ஸ்தானாதிபதி ஏறின அங்கிசாதிபதி க்ஷேத்திராதிபதியுடனே கூடியிருக்கவெகுக்ஷேத்திரமுண்டு. 21

நாலாம்பாவம்-முற்றிற்று.

ஐந்தாம் பாவம்.

சேத்திரத்தானந்தன்னை செகபதிவேங்கடேச
மூர்த்தியுமுரைத்தாரைந்தா மிடப்பலன்மொழிவதாக
போத்தியாமார்ப்பத்தான புத்திரன்பிருதுபுத்தி
சாற்றுமந்திரங்களெல்லாத் தழைத்திடப்புகன்றவாறே.

இ-ள். ஐந்தாமிடங்கொண்டு ஆர்ப்பனம் புத்திரத்தானம் பிருதுரு புத்தி மந்திரம் இவைகளைச்சொல்லுவது எ-று. 1

தழைத்திடுமைந்தாம்வீடு புதனதுவீடாய்ச்சாரப்
பிழைத்திடச்சனியின்வீடு நற்சனிபிள்ளைபார்க்கிற்
றழைத்ததாச்செழித்தபுத்ரத் தானன்சேரங்கிசத்தா
னுழைத்திடுஞ்சட்டவட்ட வியமுடையுண்டாய்நாசம்

இ-ள். புத்திரதானம் புதக்ஷேத்திரமாக அல்லது சனிவீடாகக்குளிகனாவது சனியாவது அந்தத்தானம்பார்க்கத் தெத்துபுத்திரத்தானாதிபதியெடுக்க வங்கிசமுடையவன் சஷ்டாஷ்டமவியங்களுக்கு அதிபதியாகப் புத்திருண்டாய் நாசம்வரும் எ-று. 2

உண்டெனுமைந்தாம்வீட்டைக் குருபார்க்கப்புத்திரோனுங்
கண்டிடப்பெலனேயாகி லக்கினன்பார்க்கிலுண்டாந்
திண்டிறற்புத்திராதி குருவுக்குகேந்திரகோணப்ப்
பண்டிதன்குடும்பன்பார்க்கப் புத்திரபாக்கியமுண்டாமே

இ-ள். புத்திரத்தானத்தை வியாழம்பார்க்கத்தனாதிபதிபரிபூரணபெலவானாக லக்கினாதிபதி பார்த்திருக்க புத்திரலாபமும்தனலா

பமும் உண்டாம் புத்திரத்தானுதிபதியும் வியாழமுங் கேந்திரத்தி லிருக்க குடும்பேசன் பெலவானுயிருக்க வெகுபுத்திரயோகமுண்டாம் என்றவாறு. 3

ஆமெனும்புத்திராதி சுக்கிரஞகவந்தத்
தாமமாந்தானந்தன்னைப் பாக்கியன்பார்க்கப்பெண்ணுஞ்
சேமனுஞ்சேயுமஞ்சாஞ் சேத்திரமுடையனுக
வாமமாஞ்சிங்கமீன மேடமேற்றெத்துதானே

இ-ள். புத்திரத்தானுதிபதி சுக்கிரனுக புத்திரத்தானத்தைபாக்கியாதிபதிபார்க்க அவனுக்குப் பெண்மெத்தவும்பிறக்கும் புத்திரத்தானத்திலே செவ்வாயிருக்க புத்திரத்தானன்மேடம் சிங்கம் மீனக்க் சுபக்கிரக திருவடியில்லாதிருக்க அவனுக்கு அசீத்தியத்தில்கெத்துபுத்திரன் எ-று. 4

தெத்தியபுதனுமஞ்சாமிடமதாய்ப்பாவர்சேர
நத்தியேலக்கினத்தி னுலிலாய்ச்சுபக்கோளெட்டாய்த்
திட்டெனப்பாக்கியத்தா யல்லதுபார்வையாகப்
புத்திரான்றிமற்றப் புகழுடன்வாழுவானே

இ-ள். புதன் ஐந்தாமிடத்திலிருக்க லக்கினத்திலும் நாலாமிடத்திலும் பாவியிருக்க சுபக்கிரகமிடம் பாக்கியத்திலிருக்க அல்லது பார்க்கப் புத்திரனில்லை எ-று. 5

வாழும்லக்கினத்திற்செவ்வாய் மந்தனுமட்டமந்தா
யாளிலேத்திரவியாகிச் சுபர்நோக்கிற்றெத்ததாகு
மீனிலக்கிணேசன்ருரேச னுமுயர்வியாழந்தானுங்
கோளியாய்த்தனத்தான்பாவ வீனனேற்குழவியில்லை

இ-ள். செவ்வாய்லக்கினத்திலிருக்க அட்டமத்திற்சனியனிருக்க ஐந்தில் சூரியனிருக்க சுபாள்பார்க்கில் காலாந்தியத்தில் தெத்துபுதிரன் வியாழம் பெலவீனனுக புத்திராளில்லை. 6

இல்லெனும்வியாழத்தானு மிருந்திடஞ்சேய்வீடாக
வல்லவேமந்தன்வீட்டிற் ருனுதியாகிற்பிள்ளை
சொல்லியவேழாந்தானஞ் சுக்கிரனிருக்கப்பார்க்க
வில்லையேற்புகரின்வீடேற் பகசும்பனெய்துவானே.

இ-ள். வியாழமிருந்தவீடு செவ்வாய்வீடாக சனியின்வீட்டிற் புததிரதானுதிபதியிருக்க அன்னியதாக ஒருபிள்ளையை வளர்ப்பன் ஏழிற்சுக்கிரனிருக்க பார்க்க அல்லது சுக்கிர க்ஷேத்திரமாக இருக் கப்பகசும்பனம் பண்ணுவன் எ-று. 7

தனபதியுடனேவெள்ளி சாரவுங்குளிகன்பார்க்க
வினவிடாப்பகத்திற்றானுஞ் சும்பனமியற்றமின்னே
யனுதினமேழுமெட்டும் பாவியாய்வியஞ்சேயாகத்
தினகரனேழிற்றார மூன்றுபோய்நாலாள்சேரும்

இ-ள். குடும்பாதிபதியுடனே சுக்கிரன்கூடியிருக்ககுளிகன்பா ர்க்கப் பகசும் னம் 7-8-ல் பாவியிருக்க வியத்திற்செவவாயிருக்கசூ ரியனேழிலிருக்க மூன்றுகளத்திரம் நாசமாய் நாலாவதுவரும் எ-று.

சேர்ந்திடுங்களத்திரத்தி னீசனுயாறுன்சேர
வாய்ந்திடுமேழாம்வீடும் பாவர்வீடாகவாழச்
சார்த்தமாங்குடும்பந்தன்னிற் பாவர்கள்சாரச்சார
வாய்ந்தவாழ்விரண்டுமாய்ந்து கொள்வதுமூன்றுந்தாரம்

இ-ன். இரண்டாமிடத்தில் பாவியிருக்க களத்திரதானத்தில் ஆறுமிடமுடையவ னீசனுயிருக்க ஏழாமிடம் பாவர்வீடாகஇருக்க இரண்டுகளத்திரம் நாசமாய்மூன்றுங்களத்திரமுண்டாம் எ-று.

தாரமாங்காரகன்றான் சனியுடன்கூடப்புத்தி
தீரனும்புகர்தான்பொன்றான் சசிகூடக்குறளாய்ப்பின்போம்
வாரமாம்வியாழம்பாக்கிய கேந்திரம்வாழச்சுங்க
னாலேலோபஞ்சேரி லவர்நோக்கிலழகாம்பாரி

இ-ள். களத்திரகாரகன் சந்திரனுடனேகூட அல்லது புதனுவ து•வியாழமாவதுகூட அல்லது சுக்கிரன்கூட களத்திரங் குறளாய் விபசாரமுண்டென்பது பாக்கியத்திற்கு கேந்திரத்தில் வியாழமிரு க்க லாபத்திற்குக்கேந்திரதில் சுக்கிரனிருக்க அன்னிய புண்ணியவீ டுமொறியிருக்க அனுகூலகளத்திரமென்பது எ-று. 10

பாரியாமேழாம்வீட்டான் பரமோச்சம்பகர்ந்தவேழிற்
சீரியசுபரேவாழ வன்றியுந்தெளிந்தசுங்கன்

சூரியவுச்சனகிற் குலபதியாகவேண்டு
நாரியர்மூன்றுகொண்டு நலமுடனிருக்குறங்காய்

இ-ள். ஏழாமிடமுடையவன் பரமவுச்சனுக சுபக்கிரகமிருக்க அல்லது சுக்கிரன் பரமவுச்சனுயிருக்க மூன்றுகளத்திரமுண்டாம் எ-று. 11

நங்கையேலக்கினேசன் சேயெனவியாழம்நாடத்
தங்கியகல்லாலன்றி சூரியாற்சாமாமாறி
ஓங்கடிதெட்டுதேயம் பாவராயிலக்கினேச
னங்குளோர்ப்பலனேயாகி லற்பமாமாயுடானே

இ-ள். லக்கினேசன் செவ்வாயாகப் பாவிகள்பார்ககக் கல்வினுல்விரணம் சஷ்டாஷ்டமங்கள் வியத்திற் பாவியிருக்க லக்கினேசன் துர்ப்பெலனுகியிருக்க அற்பாயசு எ-று. 12

ஆயுவாம்லக்கினுதி பதிபெலனுகநல்ல
நாயகன்சுபரேபார்க்கக் கேந்திரஞ்சுபரேநண்ணத்
தீயவர்நோக்கிடாதேற் றீர்க்காயுமாசனுதி
நேசமாய்வாழப்பூவி னெறியுறுங்காயத்தானே

இ-ள் இலக்கினுதிபதி பெலனுக சுபக்கிரகம்பார்க்க கேந்திரங்களிருக்க பாவிகள்பார்த்திருக்க மிருத்தியுவில்லாமல் தீர்க்காயுளாய் ராசவல்லவனுகி யிருப்பான் எ-று. 13

இலக்கினமுடையசீவந்தன் கேந்திரத்திரிகோணத்தாய்
விலத்தேழாம்வீடுவியாழ வீடாகவேழில்வந்த
பெலத்துடன்குருவாய்ப்பாவி பார்க்கிலேபிள்ளைதானும்
குலத்துடனுண்டுநூறு குணமுடன்வாழுவானே

இ-ள். இலக்கினுதிபதி கேந்திரத்திரிகோணத்திலிருக்கஅஷ்டமத்தில் பாவியில்லாதிருக்க ஏழில் வியாழமிருந்துபார்க்க புண்ணியவானுக நூறுவயசு இருப்பான் எ-று 14

வானெனுமொன்பத்தஞ்சு பத்திலக்கினத்திற்பொன்ருன்
ருனவன்புத்திசுங்கன் சாரின்மாதோடந்தீரும்
பானுவாம்பகல்பிறக்கின் மதிபமார் லாபஞ்சாசத்
தீனமாங்கோடிதோடந் தீர்ந்திடுஞ்செய்க்குத்தானே

இ-ள். 9-மிடம்-10-மிடம்-5-மிடம்-இலக்கினம் இவைகளில் வியாழமாவது புதனாவது சுக்கிரனாவது இந்தத்தானங்களிலிருக்க எத்தனை தோஷங்களிருந்தாலும் தீரும், பகலிற்பிறந்ததற்குச் சூரியன், ராத்திரிபிறந்ததற்குச் சந்திரன் லக்கினத்துக்கு லாபத்தில் நிற்கையில் கோடி கோஷ மிருந்தாலும் தீரும்-எ-று. 15

தீரனுமிலக்கினேசன் பணபரஞ்சேரவெள்ளி
யாரவேபார்க்கவன்றி யழகுபொன்னுடனேகூடத்
தாரசாமரமாமியோகம் ராசபூச்சியவித்வானுய்ப்
பாரெலாந்துதிக்கவெண்ப தாயுளின்மரிப்பனம்பி.

இ-ள். இலக்கினேசன் பணபரத்திலிருக்க, சுபக்கிரகத்தால் பார்க்கப்பட அல்லது வியாழத்துடனேகூடியிருக்கச் சாமரயோகம், இராஜபூச்சியனுகவும், வித்துவானுகவும், உலகநாதனுகவும், வேதாசாரமறிகிறவனுகவும், என்பதுவருஷமிருப்பான்-எ-று. 16

நம்பியாய்வியாழமிந்து தனக்குக்கேந்திரத்தினண்ண
வம்புவிகுருவினேடே யன்யபுண்ணியங்கேசரிக்கத்
தும்பிகளிடையேசிங்கந் தோன்றியதாகவென்னத்
தம்பியும்வாழ்வானிந்தத் தாரணிமதிக்கத்தானே.

இ-ள். சந்திரனுக்கு கேந்திரத்தில் வியாழம்நிற்க, வியாழங் கேந்திரத்திற் சனிநிற்க ஆயிரம்யானைக்கு ஒருசிங்கம்போலே வாழுவான்-எ-று. 17

மதித்திடும்பாவர்சட்ட வட்டமவியமேவாழ
வுதித்திடுஞ்சுபாகள்கேந்திரத்திரிகோணந்தன்னின்மேவப்
பதித்திடுமிலக்கினேசன் பெலமுறிற்றீர்க்கவாயுள்
கதிப்புறவாழ்வான்லோகங் காத்துமிக்காகத்தானே.

இ-ள். சஷ்டாஷ்டமவியங்களிற் பாவிகளிருக்க, கேந்திரத்திரிகோணத்தில் சுபாளிருக்க இலக்கினேசன், பெல்வானுயிருக்கத் தீர்க்காயசாய் வாழ்வான்-எ-று. 18

மிக்கதாமதிக்குவெள்ளி கேந்திரமிருக்கவிந்துந்
தக்கதாய்கவிக்கிக்கேந்திரந் தனிலுமிலாயுவுண்டா

பக்களின்மிகுந்துநல்ல வாகனயோகமுண்டாய்த்
தக்கதாயிருப்பதாகச் சாற்றிடும்வேதமூன்றும்,

இ-ள். சந்திரனுக்கு கேந்திரத்தில் சுக்கிரனிருக்க, சுக்கிரனுக்குகேந்திரத்தில் சந்திரனிருக்கதீர்க்காயுசும்வாகனமுமுண்டாம்.

மூன்றிடமுடையகோவு மிராகுவுமூன்றில்வாழத்
தோன்றிலேமூன்றுன்கூட ராகுவும்லக்கினத்தில்
வாழ்ந்திடிற்சர்ப் பீதி வருங்களரோகமுண்டா
மீன்றவர்பார்த்துதர்மம் மியற்றுவதியற்கையாமே.

இ-ள். மூன்றுமிடமுடையவனும் ராகுவுங்கூடியிருக்க, இலக்கினத்தில் மூன்றுமிடத்தானும் ராகுவுமிருக்க சர்ப்பபீதியுங் களரோகமும் உண்டாம்-எ-று. 20

இயற்கையாம்லக்கினங்கள் சலமெனக்குருவும்வாழ
முயற்சியாய்மூன்றும்வீட்டான் கூடனீராகும்பீதி
வயத்தனுநாற்காலாலும் வரும்பயமென்றுமுன்னோர்
நயத்துடனல்லோராய்ந்து நவின்றனர்புலவர்மாதோ.

இ-ள். இலக்கினத்திற் குருவிருக்க-3-மிடமுடையவன் கூடியிருக்க அந்தராசி ஜலராசியாயிருக்கச் சலபீதியும் நாற்கால்மிருகத்தினுல் அபாயமுமுண்டாம்-எ-று. 21

விரித்திடுமூன்றும்வீட்டான் சூரியனுடனேமேவப்
பரித்தசேய்மதியுங்கர்ம்ம பாகனுமிராகுங்கூடத்
தரித்திடுமேனிநல்ல சாற்றியநாலாம்வீட்டான்
பிரித்தநல்லவர்க்கமைந்து பெறநல்லகிரகமுண்டே.

இ-ள். மூன்றுமிடமுடையவனுடபன சூரியன்கூட, சந்திரனுடனே கர்ம்மாதிபதிகூட, ராகுவுடனே செவ்வாய்கூடியிருக்க சவுமியனுய் சாந்தபுத்தியுடையவனுயிருப்பன்-4-மிடமுடையவன், ஐந்தாம்வர்க்கமேற நல்லகிரகமூண்டாம்-எ-று. 22

கிரகனுநாலாம்வீட்டான் லக்கினன்லக்கினத்தாய்
சுரர்குருமுதலோர்பார்க்க நற்கிரகஞ்சூட்டிவைக்கு
நரபதிநாலாம்வீட்டான் கேத்திரமுறிலேநல்ல
திரமெனுங்கிரகந்தானுந் தேடிடாதுடனேவாய்க்கும்

இ-ள். நாலாமிடத்துக்குடையவன் இலக்கினுதிபதியுடனேகூடி லக்கினத்திலிருக்க சுபக்கிரகங்களாலே பார்க்கப்பட்டால் பிரயத்தினமில்லாமல் நல்லகிரகம்வாய்க்கும், நாலாமிடமுடையவன் பெலவானுக கேந்திரங்களிலிருக்க நல்லகிரகம்வாய்க்கும் எ-று. 23

வாய்த்திடும்வாக்கினேசன் சுகவர்க்கமைந்துவாய்க்கப்
பாக்கியகிரகமுண்டாம் பரமனுங்கிரகநாதன்
ருக்குமங்கிசத்தான்லக்கின கேந்திரஞ்சாரநல்ல
தீர்க்கமாங்கிரகமுண்டாய்த் தனலாபங்கிட்டுந்தானே.

இ-ள். நாலாமிடமுடையவன் சுகவர்க்கமாய் சுகவர்க்கமேறநல்லகிரகமுண்டு, நாலாமிடமுடையவன் அடுத்த அங்கிசாதிபதி லக்கினகேந்திரங்களிலிருக்க நல்ல கிரகமுந்தனலாபமுண்டாம் எ-று.

கிட்டியகிரககிங்கா சனமேறிற்செங்கல்வீடாந்
திட்டமாம்நாலாம்வீட்டான் சவுமியாள்சேரமுன்பா
மிட்டமாங்காரகேசன் சேய்நோக்கிலெவர்க்குமிக்கா
யெட்டெனவன்றிபந்து மானெனவிளங்குவானே.

இ-ள். கிரகாதிபதி சிங்காசனுங்கிசமேறிற் செங்கல் வீடுகட்டுவன் 4 மிடமுடையவன் சவுமியகிரகங் கூடியிருக்கச் சவுமியாள் பார்க்க பந்து பூச்சியனுயிருப்பன் எ-று. 25

பந்துதானத்தான்றன்னை வியாழம்பாராதிருக்க
வந்தமாங்குரூரசட்டி யங்கிசமதிலேவாழ
நிந்தனைபிறரேசொல்ல நீசர்வாழகத்தில்வாழ்ந்து
புந்தியுமன்றிப்புல்லர் பூவனுமாவனல்லாய்

இ-ள். பந்துத்தானத்தை விழாழ்ம்பாராதிருக்க, பந்தீசன்குரூரசஷ்டியங்கிசம் ஏற, நீசக்கிரகத்தில் வாழ்ந்திருப்பான் எ-று. 26

நல்லதாம்பந்துத்தானம் பாவியேநாடிவாழ
வல்லதுதன்த்தான்பாவி கூடவேயீனனுகும்
வல்லவர்நாலாம்வீட்டா னீசனுய்நாலின்பாவா
னில்லெனிற்பந்துவாலே கலகனுயிருப்பனல்லாய்

இ-ள். பந்துத்தானத்தில் வெகுபாவிகளிருக்க அல்லது பந்துந்தானுதிபதியுடனே பாவிகளிருக்க வெகு தீனனுயிருப்பன், நாலா

மிடத்தில் பாவிகளிருகக அந்தத்தானுதிபதி நீசோங்கிசம் ஏறநித்திய கலபந்துவாக இருப்பன் எ–று. 27

இல்லிடஞ்சரமேயாக ராசியான்சரத்திலேற
பல்பலகிரகமுண்டாய்ப் பாககியஞ்சுகமதாமே
சொல்லியசுகத்தான்பாவ சகிதனுய்ச்சுபாள்பாராம
லெல்லையிலேழானுலான் றன்னையொன்றிச்சிப்பானே

இ-ள். நாலாமிடஞ் சரலககினமாக அந்த ராசிநாதன் சரராசி யிலேயிருகக அனேககிரகமுண்டாம், நாலாமிடமுடையவன் பாவி யுடனேகூடியிருகக சுபககிரகம் பாராதிருகக ஏழாமிடமுடையவ னுடனே நாலாமிடமுடையவன் கூடியிருகக மாதாவுககுச் சமான மானபேரைக கூடுவான் எ–று. 28

இச்சையாங்களத்திராதி மூன்றினிலிருககநாலான்
சட்சையாய்ப்புகரோடாகிற் சகோதரசமானசங்கந்
தச்சுரகிரகத்தானஞ் சனியுறினுலாஞ்சுங்க
னச்சியில்வியமாய்ப்பாககியம் பாவரிற்றுயேசங்கம்.

இ-ள். ஏழாமிடமுடையவன் மூன்றுமிடத்திலிருககச் சுபக கிரகத்துடனே நாலாமிடமூடையவன்கூடியிருககச் சகோதரசமான மானசங்கம், நாலாமிடத்திற் சனியிருகக அந்தவீட்டிற் குடைய வன் 12-ல் சுககிரனுடனேகூட பாககியத்தானம் பாவிவீடாயிருகக மாதருசமானசங்கம் எ–று. 29

சங்கையாஞ்சத்துரேச னுலிலேசாரவிந்தே
யிங்கிதன்புதனுங்கூட வில்லுமேபுருடர்வீடேற்
பங்கனமாதாவைககப் பாம்புதானுலாய்ச்செவ்வாய்
மங்கவேபார்ககப்பானு மகனுங்கூடிடிலவ்வண்ணம்

இ-ள். 6 மிடமுடையவன் 4 ல் நிற்கச்சந்திரனுடனேகூடப்பா ர்கக அந்தவீட்டான் புருஷகிரகமாக இருகக முன்சொன்னபலன், 4-ல் ராகுவிருகக அவனுடனே செவ்வாய்பார்கக சனியுடனே சூரி யன்கூட முன்சொன்னபலன் எ-று. 30

வண்ணமாம்பாம்புமிந்து மாதருத்தானமாகிற்
புண்ணியசுபர்பாராரேற் பொதுவைசியர்களின் விந்தா

நண்ணியபுகரும்பானு நாலிலாய்ச்செவ்வாய்பார்க்க
வெண்ணிலாச்சத்திரியர் விந்தெனவியம்பலாமே

இ-ள். 4-ல் ராகு கேதுவுடனேசந்திரனிருக்க வைசியருடைய புத்திரனும் சூரியனுடனேகூடி சுக்கிரன் நாலிலிருக்க செவ்வாயாலேபார்க்கப்பட்டால் க்ஷத்திரியருடனே கூடித் தரித்த கெர்ப்பம் என்றவாறு. 31

விந்துவாமிலக்கினேசன் சுபனுடன்விரும்பவன்றிச்
சுந்தரன்பிதாவாற்கூடப் பத்திரன்றேன்றிப்பார்க்க
நிந்தையாம்பரர்கள்சாதஞ் சுகத்தினிற்பாவிநிற்க
மந்தமாதிலக்கினன்மூன்ருன் பார்க்கிலவ்வண்ணமாமே.

இ-ள். இலக்கினேசன் நாலாமிடமுடையவனுடனே கூடியிருக்கஅல்லது பாக்கியனுடனேகூடி ஆருமிடமுடையவன் பார்க்கப்பாசாதகன் மாதுருதானத்தில் பாவிநிற்க மாதுருகாரகன்பாவியிடனே கூடியிருக்க இலக்கினுதிபதி மூன்ருமிடமுடையவனுடனே கூடிநிற்கபரசாதகன் எ-று. 32

வண்ணமாஞ்சுகதானத்திற் பாவியாய்மாலோன்பார்க்கப்
பெண்ணதாமாதுாத்தானன் குளிகனுங்கூடிநீசா
ளெண்ணிலாச்சட்டவட்ட வியங்களில்வாகனன்ரு
னண்ணச்சேய்மாந்திபார்க்க ராசிகேதகமேநாடும்

இ-ள். மாதுருதானத்திற் பாவிநிற்க புதனலே பார்க்கப்பட்ட மாதுருத்தானுதிபதி குளிகனுடனேகூட ஈனவிந்து சஷ்டாஷ்டமவியங்களில் வாகனுதிபதிநிற்க குளிகன்செவ்வாயால் பார்க்கப்பட்டலாபாதிபதிகூட ஒற்றித்தராசியாக இருக்க வாகனங்செத்தக் மென்பது என்றவாறு. 33

நாடியவாகனேசன் புகருடன்வியந்தினண்ணத்
தேடுவான்சுயமாய்வீடு பிதுர்மாதுர்கிரகஞ்சேரான்
பாடியலக்கினதி பதியுடன்பாக்கியேச
னேடியும்பார்க்கக்கர்மன் சுபன்கூடவாகனங்கள்

இ-ள். 4-மிடமுடையவன் வியத்திற் சுக்கிரனுடனேகூடிநிற்க மாதாபிதாவழியில்லாமல் சுபக்கிரகத் தேடுவன் இலக்கினுதிபதியும்

பாக்கியாதிபதியுமன்றி புண்ணியர் பார்த்திருக்க கர்மேச னுலாமிட முடையவனுடனேகூட அவனுக்கு கஜதுரகமுண்டாம் எ-று.

சுகனெனும்பிருகுபால னுச்சமாய்த்தோன்றவொன்பான்
புகலருங்கேந்திரத்தாய் வாகனம்பூமிசேரும்
தகுமெனத்தனத்தானுச்சந் தனதுசேத்திரமாய்வீய
முகமெனச்சுதனைப்பார்க்கின் மூன்றுவாகனமுண்டாமே

இ-ள். உச்சனுய் சுக்கிரனிருக்கப் பாக்கியாதிபதி கேந்திரத்திலிருக்க வெகுவாகன கஜமூண்டு இரண்டாமிடமுடையவன்உச்சஸ்வட்சேத்திரத்திலிருக்க அல்லது வியத்திலிருக்க பாக்கியாதிபதிவாகனத்தானுதிபதியைப்பார்க்க மூன்றுவாகனமுண்டாம் எ-று

பாக்கியன்கேந்திரத்தாய் சுகந்தனைவிரும்பிப்பார்க்க
வாகமுஞ்சுகமுமுன்டு புகரேழில்வெகுவாந்தாரந்
தேக்கியபுதனேயேழிற் பார்திரிசேர்வன்பொன்னன்
றாக்கியேவேழிலாகிற் சோரத்தாற்பிரியனுமே.

இ-ள். பாக்கியன்கேந்திரத்திலிருக்க நாலாமிடமுடையவனைப் பார்க்க அவனுக்கு சுபலாபம்உண்டு சுக்கிரன் ஏழிலிருக்க வெகுஸ்திரீயுண்டு புதனேழிலிருக்கப்பரதாரம் வியாழமேழிலிருக்கசோரஸ்திரீபிரியன் எ-று. 36

ஏழிலேசனியேனீசி யிணங்குஞ்சேய் வெகுத்ரீயென்க
தோழனும்பானுரண்டிற் றேன்றிடிற்பரதாரம்மாங்
காளையாமிலக்கினதி குடும்பன்சத்துருவாய்காண
யேழையாம்புகரும்பாவ ரிணங்கிலீனத்ரீயென்ப

இ-ள். சனிஏழிலிருக்க கீழ்ஜாதிசையோகம் செவ்வாயிருக்கில்வெருஸ்திரி சூரியன்இரண்டிலிருக்கப் பரதாரம் லக்கினதிபதியும் குடும்பனுஞ் சத்துருவாகி குடும்பத்திலிருக்க சுக்கிரன் பாவக்கிரகத்துடனேயிருக ஈனபரஸ்திரீ சையோகம் சுபக்கிரகம்பார்க்கில் இல்லையாம் எ-று. 37

ஈனமாம்பாவரோடு மிணங்கிலக்கினத்தினேடும்
பானுவும்பாவிகூடச் சத்துருத்தானஞ்சாரத்

வானதோர்சுபர்கள்பார்வை யமர்தரவில்லையாகிற்
றீனமாந்தாரந்தானும் பரர்களைச்சேருவாளே.

இ-ள். சந்திரலக்கினத்திற் பாவிநிற்க, லக்கினுதிபதியுடனே பாவிகூட குடும்ப த்தானத்தில் சத்துருவிருக்ஷ விபசாரம், கர்மேசன் இரண்டாமிடமுடையவன் களத்திரநாதன் கர்மத்திலிருக்க அந்த களத்திரஞ் சோரியாம்-எ-று. 38

சேருவான்பாவியொன்று நாலிலாய்ப்பரத்தைத்தேடி
தாரெனும்புத்திரேசன் கூடச்சத்துருத்தானத்தான்
கோரமாய்ப்பார்க்கவந்தத் தாரமுங்குரூரமாகி
யாரவேகள்ளராலே பிள்ளையுண்டாவாடானே.

இ-ள். நாலாமிடத்திலொருகிரகமிருக்க பரஸ்திரீகமனி, புத்திரேசனும் ஏழாமிடமுடையவனுங் கூடியிருக்க அவனை ஆறுமிடமுடையவன்பார்க்க கள்ளனுபகனால் பிள்ளையுண்டாவாள்—எ-று. 39

தோன்றிடுமாறும்வீட்டான் பெலனின்றிச்சுங்கன்கூட
வாண்டபாவிகளைபார்க்கி லவ்வண்ணம்பாக்கியாதி
கான்றிடுங்களத்திராதி யாறெட்டிற்பன்னிரண்டி
லீன்றபுத்திரனுற்பார்க்க லின்மையேன்மகவுண்டாமே.

இ-ள். ஆறுமிடமுடையவன் பெலவீனனுகச் சுக்கிரனுங் கூடியிருக்க அவர்களைப் பாவிகள்பார்க்க முன்சொன்னபலன், பாக்கியாதிபதி-களததிராதிபதி-சஷ்டாஷ்டம வியங்களிலிருக்கப் புத்திரத்தானுதிபதியாலே பார்க்கப்பட முன்சொன்னபலன்-எ-று. 40

மகவெனுந்தானத்தானுங் களத்திரம்பொருந்தவேழான்
மிகவும்பாவியுமாய்க்கூடச்சுக்கிரன்பெலனில்லானேல்
கமவளகெர்ப்பத்தோடே யழிவதுதிண்ணமாகப்
பகருவீர்சுபக்கோடானே பார்வைதக்கதுவாய்மானே.

இ-ள். அஞ்சாமிடமுடையவன் ஏழிலிருக்க, ஏழாமிடமுடையவன் பாவியுடனேகூட சுக்கிரன் பெலவீனனுகயிருக்கத் தாரங் கெர்ப்பத்துடனே மரணம்-எ-று. 41

வாய்ந்தமதியுநீசமுறச் செவ்வாய்பார்க்கச்சுக்கிரனு
யாய்ந்தமூன்றுமிடமாக மூன்றுத்திரோகாணம்மேவிற்
றேய்ந்ததாரம்விடங்களைத்தான் றின்றுசோருங்களத்திரனு
மேய்ந்தகாரகன்றனுச்ச மெனின்மூன்றுதரீரமாமே.

இ-ள். சந்திரனீசனுகை செவ்வாயாலே பார்க்கப்பட சுக்கிரன் மூன்றுமிடத்திலிருக்க, மூன்றுத்திரேக்காணம் பாவத்திரேக்காண மாக, தாரம் விஷபக்ஷணத்தால் மரணம், களத்திரத்தானுதிபதியும் களத்திரகாரகனும் உச்சனுகை அவனுக்கு மூன்றுதாரம் வாய்க்கும் எ-று. 42

தாரநாயகனும்பாவி தனத்தவன்பாவியாகக்
கோரமாஞ்சனிசேய்ராகு கூடிடிற்றூரதாசத்
திரனுநாலாம்வீட்டிற் சுபர்சேரப்பாக்கியேசன்
றாரமாயுச்சமேறக் களத்திரஞ்சுகமுண்டாமே,

இ-ள். களத்திராதிபதி பாவியாயிருக்கக் குடும்பேசனும் பாவி யாயிருக்க சனி-செவ்வாய் ராகு-கூடியிருக்கக் களத்திரநாதம், நாலா மிடத்தில் சுபனிருக்க பாக்கியேசன் பரமவுச்சனுயிருக்க நல்லகளத் திரம் வாய்க்கும்—எ-று. 43

சுகமெனுமேழாம்வீட்டான் லக்கினன்றோன்றிவாழ
மகபதிகர்மந்தன்னி லூறின்மகாமதனயோகம்
வெகுதிரிபுணர்ந்துகாம விரதனுயோகவாய்த
தகமையுமுடைத்தாய்க்கீர்த்தி வானுமாய்த்தழைத்துவாழ்வன்.

இ-ள். ஏழாமிடமுடையவன் லக்கினத்திலிருக்கக் கர்மாதிபதி கர்மத்திலிருக்கப் புதன் யோகவானுய்த் தகமையுமுடைத்தாய் வெகு ஸ்திரீயுண்டு-எ-று. 44

ஆனதோர்பத்திரேசன் சுபனுடனுகவந்த
மீனவன்வியாழம்பார்க்கப் புத்திரர்மிகவுண்டாகுந்
தானவன்புத்திரேசன் லக்கினத்துடனேகூட
நாளெனவியாழம்பார்க்க நல்லபுத்திரருண்டாமே.

இ-ள்: புத்திரத்தானுதிபதியைவியாழம்பார்க்க அவன்சுபனுட னேகூடப்புத்திரபாக்கியமுண்டு, லக்கினேசன் புத்திரத்தானுதிபதி யைவியாழம்பார்க்கஅவன் சுபனுடனேகூடப் புத்திரபாக்கியமு ண்டு இலக்கினேசன் புத்திரத்தானுதிபதியுடனேகூடியிருக்கப் பரிபூரண பெலமாய் வியாழப்பார்க்க வெகுபுத்திரபாக்கியமுண்டாம் எ று: ()

புத்திரத்தானனீச வீடதாய்லக்கினேச
னத்திடம்வியாழம்பார்க்க வனேகபுத்திருண்டாகு

மத்துமேபுந்திமைந்தன் வீடைந்தாந்தானமாகிற்
குத்திரன்மாந்திமாந்தன் பார்த்திடிற்தெத்தாய்க்கூறே.

இ-ள் புத்திரத்தானுதிபதியும் லக்கினுதிபதியும் உச்சஸ்வட் சேத்திரத்திலிருக்க வியாழத்தாலே பார்க்கப்பட வெகுபுத்திருண் டென்பது ஐந்தாமிடம் புதன்வீடாக அல்லது சனிவீடாகி யிருக்க குளிசனுலே சனியாலே பார்க்கப்பட அவனுக்கு தெத்துபுத்திரன் என்றவாறு. 46

கூறியபுததிரேசன் லக்கினன்கூடப்பார்க்க
மாறியுஞ்சனியேபார்க்கப் புத்திரனீசனுக
வேறதாய்மனையாள்சோரன் விரும்பியும்பிள்ளையுண்டாங்
தேறியேபெறுவள்பாவி கர்மத்திற்சேர்கிலானே

இ-ள். லக்கினுதிபதியும் புத்திராதிபதியும் அன்னியோன்னிய மாய்ப்பார்க்கச் சனியாலே பார்க்கப்பட்ட புத்திரகாரகனீசனுகசோ ரபுத்திரன்-எ-று. 47

சேர்கிலானிலக்கினேச னுறிலேசேரவந்தத்
தீரனுஞ்சத்துரேசன் பெலமுறவியாழந்தானுங்
கூரமாய்நீசனுகிக் குலத்தினுமிழுக்கதாகப்
பாரியுஞ்சோராராலே கெர்ப்பமும்பற்றுவாளே

இ-ள். லக்கினேச னுறுமிடத்திலிருக்க ஆறுமிடமுடையவன் பெலத்திலிருக்கக்குரு நீசனுப்போக முன்சொன்னதுபோலேபாரி யுஞ் சோரபத்தாவாலே புத்திரரைப்பெறுவாள்-எ-று. 48

பற்றியும்புத்திரேசன் பாராவதாங்சமேறப்
புத்திரர்நாசமுண்டாங் குரூரசட்யங்சமேற
மத்தியுநீசமூட மானத்தாற்புதல்வர்நாசஞ்
சத்தியமாகச்சேரத் தயவுடனுப்ந்துபாரே

இ-ள் 5-மிடமுடையவன் பாராவதாங்சமேறப் புத்திரால்நா சம்வரும் 5-மிடமுடையவன் குரூரசஷ்டியங்கிசமேற நீசமூடமாக ப்புத்திரநாசம்வரும் எ-று. 49

ஆய்ந்திடும்புத்திரேசன் மிருத்தியங்கிசமேயாக
வாய்ந்திடுந்தானந்தன்னிற் பானுவேவாழச்செவ்வாய்

சாந்ததுவியாழத்தேடாய்ச் சகோதரப்பிள்ளை தன்னைப்
போந்தவன்றெத்துகொண்டு புகழுடன்வளர்ப்பதாமே

இ-ள். புத்திரத்தானுதிபதி மிருத்துவாங்கிசமேற, புத்திரத் தானத்தில் சூரியன்நிற்க செவ்வாய் வியாழத்துடனேகூடச், சகோ தராள் புத்திரானைத் தெத்துகொள்வார் எ-று. 50

வளமுறுமிலக்கினத்தின் மாலவர்சேய்தான்பார்க்கி
லெளிதெனப்பரதாரத்தை யிச்சிப்பன்புதல்வரில்லை
யுளமெனும்பஞ்சமத்திற் புதன்வரவுதயநாலி
லளவிலாச்சுபர்கணுட்ட மில்லையேற்பிள்ளையில்லை

இ-ள். புதன் லக்கினத்திலிருக்க செவ்வாயாலே பார்க்கப்பட் டால் பரதாரமிச்சிப்பன், புத்திரநாசம், புதன்ஐந்தாமிடத்திலிருக்க லக்கினத்தில் நாலாமிடத்திற் பாவிநிற்க அஷ்டமத்திற் சுபக்கிரக மில்லாதிருக்சப் புத்திரன் முகமறியான் எ-று. 51

பிள்ளையாமிலக்கினத்திற் சேய்சனிபின்னரெட்டா
யுள்ளதாமைந்திற்பானு சுபதிட்டியுளதாலற்ப
மொள்ளியவைந்தாம்வீட்டா னுச்சமாய்ச்சுபக்கோள்பார்க்கில்
விள்ளதாமத்தியாகிற் புத்தியுமிகவுண்டாமே.

இ-ள். லக்கினத்திற் செவ்வாயிருக்க, எட்டிற் சனிநிற்க அல் லது சூரியனிற்க சுபதிருஷ்டியுண்டாகில் காலாந்தரத்தில் புத்திரலா பம் ஐந்தாமிடமுடையவன் பரமவுச்சமேற அவனைச் சுபன்பார்க்க அல்லது சுபக்கிரக மத்தியிலிருக்க தீவரபுத்தியுடையவன் எ-று.

புத்திரகாரகன்றன் பூரணபெலமேயாகத்
தெத்திபதானத்தானைப் பொன்பார்க்கிற்பரமாம்புத்தி
சத்தியமைந்திற்பாவி தானனும்பாவிகூடப்
புத்தியுங்குரூரசட்டி யங்கிசப்புத்திரநாசம்

இ-ள். புத்திரகாரகன் பூரணபெலமாயிருக்கத் தானுதிபதியை யாழும்பார்க்க தீவரபுத்தி 5 மிடத்திற் பாவிநிற்கத, தானுதிபதிபாவி யுடனேகூட குரூரசஷ்டியங்கிசமேறப் பத்திரநாசம்வரும் எ-று.

நாசமாப்புத்திதான னீசமூடாரியேறப்
பாசமாய்க்கூடிற்புத்திர நாசமாம்பஞ்சமத்திற்

றேசிலாச்சனியேவாழப் பாவிகடிருட்டியுண்டேற்
காசுறுமங்கனுதி பயித்தியக்காரனுவன்

இ-ள். ஐந்தாமிடமுடையவன் நீசமூடாரியனுடனேகூடப் புத்திரநாசம் ஐந்திற்சனியிற்க அவனைப்பாபக்கிரகம்பார்க்க பயித்தியக்காரனுவான் எ-று. 54

ஆகியவைந்தாம்வீட்டா னதியுச்சனுகப்பொன்ன
னேகமாய்ப்பார்க்கப்புத்தி ரேசனுமிறைவன்ருனு
நாசமாங்கோபுராங்கத் தன்னிலேயாகநல்ல
தேகமாய்த்திரிகாலத்தின் கியானியாய்ச்சேருந்தானே.

இ-ள். அந்தாமிடமுடையவ னுச்சனுக வியாழத்தாற்பார்க்கப்பட 5-மிடமுடையவன் கோபுராங்கிசம் ஏற அவன் திரிகால ஞானியாயிருப்பான்-எ-று. 55

தேனெனுமைந்தாம்வீட்டான் புருடனுய்ச்செம்பொன்னேக்க
வீனுமக்களிலேநல்ல புருடரேமிஞ்சவெய்தும்
பாவனுமுறுமைந்தாம்வீ டுரிராசியாகநீசர்
மேன்னமயாய்ப்பார்க்கப்பெண்ணே பெறுவளேமிஞ்சத்தானே

இ-ள். அந்தாமிடமுடையவன் புருஷக்கிரமமாக அதை வியாழம்பார்க்கபுத்திரான் மிஞ்சியிருக்கும் அந்தாமிடம் ஸ்திரீராசியாயிருக்க அதை நீசக்கிரகம்பார்க்கப் பெண்பிள்ளையதிகம் எ-று.

ஐந்தாம்பாவம்—முற்றிற்று.

ஆரும் பாவம்.

மிஞ்சியவைந்தாம்பாவ முகித்ததுமின்னேயின்னங்
தஞ்சமாமாரும்பாவஞ் சத்துருரோகத்தானத்
துஞ்சியசோரத்தானந் தூரமூமடவதாக
வஞ்சலாம்வேங்கடேச னருளினுலுதவினேனே

இ-ள். ஆரும்பாவம் சத்துருஸ்தானம் ரோகஸ்தானம் சோரஸ்தானம் என்றுபெயர். ஆகவே இப்பலன்களெல்லாம் இந்தபாவத்தைக்கொண்டு சொல்லுவன் எ-று. 1

தவமெனுமாரும்வீட்டான் குரூரமாயுதயஞ்சாரப்
பவமெனுமெட்டிற்சார விரணமேபலிக்குமேனி
யவமெனுமைந்தாம்வீட்டா ஞுறிலாயாருனேடே
தவமெனக்கூடிற்சத்தி குன்மமேபலிக்குமிஞ்ச

இ-ள். ஆறுமிடமுடையவன் குரூரக்கிரகமாக லக்கினத்திலிருக்க அல்லது அஷ்டமத்திலிருக்கச் சரீரவிரணமாகஇருப்பன் அந்தாமிடமுடையவன் ஆறுமிடத்தில் அந்தத்தரனதிபதியுடனே கூடியிருக்க சத்திருன்மம்மரும் எ-று. 2

பலிப்பறுமேழாந்தானம் பானுவாய்லக்கினேசன்
மெலித்தவட்டமத்தினிற்க் வேயெனுமாறிற்சேரச்
சொலித்திடுஞ்சோரிசெய்த மருந்தினற்சு கமாகிக்
கலித்திடுஞ்சத்திருன்மங் காளையுமதனின்மாய்வான்

இ-ள். ஏழாமிடத்தி லாதித்தனிற்க லக்கினதிபதி யெட்டிலிருக்க வியாதிபதி ஆறில்நிற்கச் சோரஸ்திரீ மருந்தினல்சத்திருன்மம் வரும்-எ-று. 3

மாய்ந்திடுமதியுமைந்தாந் தானனுமாறில்வாழ
வாய்த்தெழும்ராகுகேது லக்கினமமயக்குட்ட
மீய்ந்திடுமிலக்கினதி நாலிற்சத்துருவோடெய்த
பாய்ந்தபாம்புதயமாறுன் பார்த்திடச்சோகையத்தி

இ-ள். சந்திரனும் புத்திரத்தானதிபதியும் ஆறில்நிற்கராகுகேதுவுடனேகூடக் குஷ்டரோகத்தினல் மரணம் லக்கினதிபதி நாலில் நிற்க ஆறுமிடமுடையவன்கூட அல்லதுபார்க்க ராகுகேது லக்கினத்திலிருக்கச் சோகைரோகமும் நொறுக்குநோயு முண்டாம்-எ-று.

அத்தியபுதனுமாறி லாவுடன்கூடமைந்தன்
சத்தியாய்கூடப்பார்க்கச் சந்ததமிரவிநின்று
தத்திலக்கினத்திற்பார்க்க வாதசூலையினன்மேனி
வற்றியேமூடமாய்ப்பாவி யாயிவனிறப்பான்மின்னே

இ-ள். புதன் ஆறிலேநிற்க ராகுவுடனேகூட சனிகூடஅல்லல் பார்க்க ஏழில் ஆதித்தனிற்க லக்கினத்தைப்பார்க்க வாதசூலையினுதசரீரம்விழும் எ-று. 5

இரவியும்ரோகத்தானும் லக்கினதிபனுமொன்றாய்
விரவியராசியாக மறிகூடலின்றிப்பார்க்கப்
புரவலன்சலத்தின்பாங்கிற் போதறவெட்டுப்பட்டு
திறமெனவிறப்பானய்ந்து தெளிவினற்செப்பநன்றே.

இ-ள். ஆதித்தனும் ஆறுமிடமுடையவனும் லக்கினதிபதியும் ஒருராசியிலிருக்கச் சந்திரனுடனேகூடியிருக்க அல்லது சந்திரன் பார்க்க ஜலக்கரையில் வெட்டுபட்டு சாவான் எ-று. 6

நன்றெனும்ரோகத்தானும் பாம்புமொன்றாகியாறி
னின்றிடச்சேயேபார்க்க நெருப்புமேவளைந்துசாவா
னன்றியும்லக்கினதி சத்தமமைந்துபாவி
கன்றெனப்பார்க்கவாறன் கர்மமேற்றியாற்சாவான்

இ-ள். ராகுவானாலும் கேதுவானாலும் ஆறுமிடமுடையவனுட னேகூடி ஆறில் நிற்க செவ்வாய்பார்க்க அக்கினியிலகப்பட்டுச் சாவான், லக்கினதிபதி ஏழாமிடமுடையவனுமிருக்கப் பாவிகளாற்பார்வைபெறக்கர்ம்மாதிபதியுஞ் சஷ்டாதிபதியும் லக்கினத்திலிருக்க ஸ்திரீநிமித்தம் விஷபக்ஷணமரணம் எ-று. 7

ஆலமாமிராகுகேது கேந்திரத்திரிகோணத்தா
யேலமாயாறன்வீட்டானிருந்ததைப்பார்க்கவப்போ
சீலமாம்பிதுர்த்தானத்தான் காரனட்டமத்திற்சேரப்
பாலனுமரத்திலேறிப் படியிலேவிழுந்துமாய்வான்

இ-ள். ராகுகேதுக்கள் கேந்திரத்திரிகோணத்தில் இருக்கஆறு மிடமுடையவனாலே பார்க்கப்பட பித்துருத்தானதிபதி காரகனஷ்டமத்திலிருக்க மரத்திலேறிவிழுந்து மரணம் எ-று. 8

மாயவனிரண்டாம்வீட்டான் களத்திரன்ரோகனோடே
யாயவனிருக்கவேழான் பார்த்திடிற்றிரிபான்மாய்வன்
றேயுமாமதியைராகு திருட்டிக்கத்தர்ம்மனேழான்
றீயவர்பார்க்கிற்சேர்ந்த திரியினன்மரணஞ்செப்பே

இ-ள். இரண்டாமிடமுடையவனுங் களத்திராதிபதியும் ஆறு மிடமுடையவனும் பார்க்க, ஒன்பதாமிடமுடையவனும் ஆதித்த னும் எட்டில்நிற்க மரத்திலேறிவிழுந்து மரணம் எ-று. 9

சாத்தியதனத்தானேழான் சத்துருவுடனேகூட
மாற்றுவன்புகரேபார்க்க மருந்திடுந்திரியான்மாய்வன்
சீத்தமாமதியைராகு திருட்டிக்கக்கர்மநாதன்
றேற்றியுமேழான்கூடத் திரியினன்மரணஞ்சொல்லே

இ-ள். இரண்டாமிடமுடையவன் ஏழாமிடமுடையவன்சத்ராதிபதியுடனேகூட சுக்கிரன் பார்க்க ஸ்திரீமருந்தினல் சாவான், சந்திரனை ராகுபார்க்க ஏழாமிட முடையவனுடனே கர்மநாதன்கூட ஸ்திரீயினல் மரணம் எ-று. 10

சொல்லியமதியாறெட்டுத் துவாதசஞ்சேரமாந்தி
வல்லவனிலக்கினேசன் பார்த்திடிற்கயிற்ருன்மாய்வ
னல்லவனிலக்கினதி லக்கினனுடனேயாகப்
புல்லியராகுபார்க்கப் பாவத்ரேகாண முன்போல்,

இ-ள். சஷ்டாஷ்டமவியங்கிளிற் சந்திரன் லக்கினதிபதியாலே பார்க்கப்பட சனி குளிகன் பார்க்க கயிற்றினல் மரணமாம், அஷ்ட்டமாதிபதியும் லக்கினதிபதியுங் கூடியிருக்க ராகுவாலேபார்க்கப் படபாவதிரேகாணமேறக் கயிற்றினல்மரணமாம் எ-று. 11

முன்னியமைந்தன்மாந்தி குருவுடன்மூன்றுங்கூடி
பன்னியவட்டமாதி பதியுடன்பார்வையாகி
தன்னிலேசனியுமெட்டாந் தானனைப்பார்க்குமாகி
துன்னியேகயிற்றிற்ருெங்கி யுயிர்தனையிழப்பதாமே

இ-ள். சனி குளிகனுடனே வியாழங்கூட அஷ்டமாதிபதியாலே பார்க்க அல்லது சனியாலே அஷ்டமாதிபதியைப் பார்க்கப்பட முன்சொன்ன பலன் எ-று. 12

இழப்பதாமெட்டிலாறிற் சகோதரன்சேயுங்கூடி
வளப்படுமாந்திமைந்தன் கூடிலாயுதத்தான்மாய்வ
னளப்பிலேயாயுதத்தாற் பாவராய்மதியுஞ்சேயுஞ்
களப்படுகுரூரசட்டி யங்கிசஞ்சாரின்முன்போல்

இ-ள். 6-ல்-8-ல் செவ்வாய் 9-மிட முடையவனுடனேகூடி நிற்க சனி குளிகன் கூடிநிற்க ஆயுதத்தால்மரணம், அஷ்டமத்தில் பாவரிருக்க செவ்வாயுடனே சந்திரன் குரூரசஷ்டியங்கிசம் ஏறஆயுதத்தால் மரணம் எ-று. 13

முன்னியசெவ்வாய்மேட விருச்சிகமுயலத்தானும்
வன்னியாயிரவிதானு மன்னியோன்யமாறிப்பார்க்க
வன்னேழிலங்கிசத்தி லப்படிமாறிப்பார்க்கிற்
றன்னிலேகோபமுண்டாய்க் குருவியாற்சயிப்பன்ருனே.

இ-ள். செவ்வாய் மேடவிருச்சிகத்தில்நிற்க, ஆதித்தனும் அவனும் அன்னியோன்யம்பார்க்க அல்லது அங்கிசத்தில் அப்படியிருக்க ஆயுதத்தால் மரணம்—எ-று. 14

சயித்திடுமாறுன் குரூர சட்யங்சஞ்சாரப்பாவி
செயித்ததைப்பார்க்கப்பானு சேர்வவந்தரையாய்ச்சாவன்
பயித்தியபுதனுஞ்சேயுங் கூடச்சுக்கிரனும்பார்த்து
தயததினுற்குரூரசட்டி சாரவுஞ்சயமாம்ரோகம்.

இ-ள். ஆறுமிடமுடையவள் குரூரசட்டியங்கிசமேறப் பாவிகள்பார்க்கச் சூரியன் கூடியிருக்க அவந்தரைமரணம், ஆறிற் செவ்வாயும் புதனும்நிற்க சுக்கிரன்பார்க்க குரூர அங்கிசமேறச் சயரோகம் வரும்—எ-று. 15

ரோகமாந்தானமைந்தன் சேயுறப்பானுபார்க்க
வாகிலேபானுநோக்க லக்கினனீசனுக
வேகிலேபிலனில்லானே லிருத்திடுமளவும்பொல்லா
வேகமாநோயுண்டாகி மிடியனுய்மரிப்பன்றானே.

இ-ள். ஆறில் சனியும் செவ்வாயும் நிற்க சூரியனுவது ராகுவாவதுபார்க்க லக்கினதிபதிபார்க்க லக்கினதிபதி ஈளபெலவானுகதீராதரோகம்-எ-று. 16

மிடியெனுமாறுன்றனு மைந்தனுமாந்திமேவப்
படியுறபாம்புபானு சேயதைப்பார்க்கநல்லோ
னுடனதைப்பார்த்திடானேற் சயரோகமாகுமேனி
கடனுறத்திரித்துகாலன் கைவசமாவனித்தான.

இ-ள். ஆறில் சனியனுங் குளிகனும்நிற்க ராகு, கேது, ஆதித்தன் செவ்வாய் பார்க்கச் சுபதிருஷ்டியில்லாதிருக்கச் சயரோகத்தால் மரணம்—எ-று. 17

இந்துவும்ரோகத்தானுஞ் சலத்துற்சலத்தான்பார்க்க
முந்தியரோகத்தானு முற்றுறக்கிருச்னமாகும்
பந்தமாமிருச்சியோக மைந்தன்கேந்திரமாய்ப்பரவான்
பிந்தியவேயம்பர்வ வஞ்சம்பீனிசமாம்ரோகம்.

இ-ள். சந்திரன் ஜலராசியாயிருக்கச் சஷ்டாதிபதியும் ஜலராசியிலிருக்க ஜலத்தானதிபதிபார்க்க மூத்திரக்கிரிச்சின ரோகம்வரும்

ஆறில் சந்திரனிற்கச் சனி கேந்திரத்தானத்திலிருக்க வியத்தானத்
தில் பாவிற்கப் பாவி யங்கிசம் ஏற பீனிசம்வரும் எ-று. 18

நேசமாமாறிப்பாவர் நின்றிடலக்கினேச
ஞசிலாப்புறமில்லானேற் சத்தியாங்குன்மமர்கு
மாசையால்ரோகனென்று மங்கிசம்பானுமைந்தன்
வாசமாயிருக்கச்சத்தி குன்மமாய்வருக்கலாமே.

இ-ள். ஆறுமிடமுடைபவன் பெல ஈனனகயிருக்க லக்கினேச
னும் பெலஈனனக இருக்கச் சத்திகுன்மம், சஷ்டேசுரன் ஏறின அ
ங்கிசாதிபதி சூரியன் சனியாயிருக்கச் சத்திகுன்மம்வரும் எ-று. 19

சத்துருத்தானங்கேந்திரஞ் சார்பாகப்பார்க்கநோக்க
மற்றுமாறனேப்பாவி பார்க்கவர்த்திக்குமொன்ன
ரத்திலக்கினேசனறி லாநினேனிலக்கினத்தின்
மத்திபன்மாந்திபார்க்கில் வர்த்திக்குமொன்னர்தானே.

இ-ள். சத்துருத்தானதிபதி கேந்திரத்திலிருக்க, பாலக்கிரகம்
பார்க்க ஆறுமிடமுடையவனைப் பாவிகள்பார்க்க சத்துருவர்த்தனே,
லக்கினேசன் ஆறில்நிற்க ஆறுமிடமுடையவன் லக்கினத்திலிருக்க
சனி குளிகன் கூடியிருக்க சத்துருவர்த்தனே எ-று. 20

ஒன்னலர்தானத்தானு நீசாத்தமனமாயோங்க
வன்னியநீசரூட லக்கினம்பெலமேயாகிற்
றன்னிலேபுகையுமாயும் லக்கினனுறுயன்றி
யுன்னியேயுதையம்பார்க்க ஞாதியாலூக்கமுண்டாம்.

இ-ள். சத்துருத்தானதிபதி அத்தமன நீசனயிருக்க அல்லது
நீசரூடரில் கூடியிருக்க லக்கினதிரதி பெலவானகச் சத்துருநாச
முண்டாம், லக்கினேசன் ஆறில நிற்க அல்லது சஷ்டேசனலே லக்
கினதிபதிதைப் பார்க்கப்பட அல்லது ஆறுமிடமுடையவன் லக்கி
னத்தில் நிற்க ஞாதிபீடைவரும் எ-று. 21

ஊர்த்தமாம்புகர்பொன்னுறு மிடமுடன்கூடியொன்றுய்ச்
சேர்த்தமாய்ச்சனிசேய்பார்க்க ஞாதியிற்சேரும்பீடை
காத்திடுமிலக்கினதி சுபனெனிலாறுனிந்த
கூர்த்தகேந்திரகோணமாறக் கொடுக்குஞாதியினுலின்பம்.

இ-ள். குரு, சுக்கிரள் ஆறுமிடமுடையவனுடனேகூடி லக்கி
னத்திலிருக்க சனி, ராகு, செவ்வாய்பார்க்க ஞாதிபீடை, லக்கினதிப

ன் சுபனுயிருக்க ஆறுமிடமுடையவனுஞ் சந்திரனுங் கூடியிருக்க கேந்திரகோணத்திற் புதனிருக்க ஞாதிகளாலே சீவனம்-எ-று.

ஞாதியாமாறன்பாவ நீசனுயங்கிசத்திற்
கோதிலாக்குரூரசட்டி கொண்டிடின்ஞாதிமாயுஞ்
சூதமாம்ரோகனுறு வர்க்கமேயதனிற்சூழ
வேதிலாப்பெலனில்லானேன் ஞாதியுமிறந்துபோமே

இ-ள். ஆறுமிடமுடையவன் பாவியாக நீசாங்கிசம் எறிக்குரு ரூசஷ்டியங்கிசத்திலிருக்க ஞாதிக்ஷயமாம் ஆறுமிடமுடையவன் ஆ றும்வர்க்கமேறிப் பாராவதாங்கிசமா யிருக்க அவன் பெலயீனனுக ஞாதிக்ஷயம் எ-று. 23

போதமாம்பாக்கியேச னுறிலாய்ப்போகப்பார்க்க
கோதிலாரோகன்செவ்வாய் சனியுடன்கூடப்பார்க்க
சாதலக்கினனுற்சென்மன் பெலமுறச்சட்டநாதன்
மாதவன்மாந்திகூடின் மரிகருமக்கினியாற்றனே

இ-ள். பாக்கியேசனுறிலிருக்க ஆறுமிடமுடையவன் பார்க்க அல்லது ஆறுமிடமுடையவன் சனி செவ்வாய்கூடிப்பார்க்க அக்கி னியால்மரணம் லக்கினன் பூரணபெலமாயிருக்க சஷ்டேசன் குளிக னுடன்கூடிப்பார்க்க அக்கினிபால் மரணம் எ-று. 24

தானெனும்பிருகுபால னுறிலேபெலமாய்ச்சார
வானவன்சுபக்கோள்பார்க்கி னித்தியமதுரமுண்பா
னனதோராறன்பாங்கின் முகுந்துபினடவதாக
வீனமிலேழாம்பாவ மியற்றுவதியற்கையாமே

இ-ள். சுக்கிரன் ஆறில்பெலவானுயிருக்க சுபக்கிரகதிருஷ்டியு ண்டாக நித்தியமதுரம் பொசிப்பன் எ-று. 25

ஆறும்பாவம் முற்றிற்று.

உ

முருகக்கடவுடுணை.

ஏழாம். பாவம்.

இயற்கையாமேழாந்தானங் குளஞ்சிரநிவர்த்தியென்னு
முயற்சியாய்ப்பொசிப்புத்தார மூத்திரககிரிச்சமற்றும்
வியப்புடன்வேங்கடேச வேதியசுவாமிசொன்னார்
நயப்புடனுளவுமற்று நவில்வபோற்றமிழ்நான்சொன்னேன்.

இ-ள். ஏழாமிடங்கொண்டு களத்திரம்சிரம் நிவர்த்தி பொசிப்
பு தாரம்மூத்திரககிரிச்சினம் இவைகளைச் சொல்லுவோம் எ-று.

சொன்னமாங்களத்திரேச னீசனாயாறெட்டாகப்
பன்னியவியந்திலாகிற் பாரியேநாசமாகு
முன்னியகுடும்பன்வெள்ளி பாவிகள்வீடாய்மோதும்
பன்னியாம்பாவர்பார்க்கின் மனையவன்மரணந்தானே

இ-ள். களத்திராதி நீசாங்கிசமேற சஷ்டாஷ்டமவியத்திலிருக
களத்திரநாசம் குடும்பாதி தியும்சககிரனும் பாவக்ஷேத்திரவியத்தி
லிருந்து பாவிகளாற் பார்ககப்பட்ட களத்திரநாசம் என்றவாறு.

மனையெனுங்களத்திரேசன் கேந்திரகோணமாக
வினவிலேசொட்சவுச்ச மித்துருவாகினன்றாய்
கனவினுங்கர்மநாதன் பார்த்திடிலனேகதாரந்
தனதெனவுண்டாயப்போக வானெனச்சங்கமாமே

இ-ள். களத்திரகாரன் கேந்திரத்திரிகோணத்தில் நிற்க அல்ல
து சொட்சவுச்சங்களில்நிற்க கர்மாதிபதி கூடியிருக்கப்பார்க்கவெகு
ஸ்திரீசையோகம் எ-று. 3

சங்கையாம்லாபநாதன் களத்திரன்கூடச்சார்ந்து
தங்கிலேபார்க்கவன்றிப் பெலமதுதகுமேயன்றித்
துங்கன்றான்கோணமாகிற் காபமேசுகமதாக.
மங்கையர்பலரைச்சேர்வன் பாக்கியமட்டுந்தானே

இ-ள். லாபாதிபதியுங் களத்திராதிபதியுங்கூட இருக்கஅல்ல
துபார்க்கப்பெலாட்டியனாகத்திரிகோணத்திலிருக்க வெகுஸ்திரீசை
யோகம்-எ-று. 4

மட்டிலாய்பாக்கியேச னேழிலாயேழாய்நாலாய்த்
தட்டிலேகேந்திரத்தால் வெகுதிரிசகிதனவன்
றிட்டமாய்த்தாரநாதன் கோபுராங்கிசமாய்க்காம
னிட்டமாங்குடும்பன்கூட வேழிலாய்த்திரிபத்துண்டே.

இ-ள். பாக்கியேசன் ஏழில் நிற்க ஏழாமிடமுடையவன் நாலில் நிற்க அல்லது கேந்திரத்திலிருக்க வெகுஸ்திரீசையோகம், தாரேசன் கோபுராங்கிசமேறக் கர்மாதிபதியுங் குடும்பாதியும் ஏழில்நிற்க அவனுக்குப் பத்துகளத்திரமுண்டு எ-று. 5

திரிமாந்தாரநாதன் பாவிகளுடனேசேரக்
கெருவனுமேழான்பாவ வங்கிசங்குணமில்லாளாம்
பிரியமாந்தாரநாதன் குரூரசட்டியங்கிசமேறி
லறிவிலாள்கோபமாகி யசடியாந்தாரமாமே

இ-ள். தாரேசன் பாவியுடனேகூடியிருக்க ஏழாமிடமுடையவன் பாவாங்கிசம் ஏற குண ஈனஸ்திரீ, ஏழாமிடமுடையவன் குரூரசஷ்டியங்கிசம் ஏற பொல்லாததாரம் எ-று. 6

தாரனுஞ்சுபனேகூடச் சுபரகைத்தாவிப்பார்க்க
வாரமாய்ச்சுபக்கோடங்கண் மத்தியேனல்லதாரம்
வீரனுங்கர்மநாதன் பெலாட்டியனுப்த்தாரநாதன்
காரகன்சுபாங்சமேறிற் களத்திரநல்லதாமே

இ-ள். தாரேசன் சுபனுடனேகூடச் சுபாள்பார்க்கச் சுபக்கிரக மத்தியில்நிற்க நல்லகளத்திரம், தாரேசனுங்காரகனும் சுபராசியங்கிசமேறக் கர்மாதிபதி பெலமாயிருக்க நல்லகளத்திரம் எ-று. 7

நல்லதாஞ்சொட்சவுச்ச மித்திரந்தாரனுகை
வல்லதுகோபுராங்ச மடவுடனேறநன்று
மில்லெனுந்தாரநாதன் குருவுடனேகப்பார்க்க
வல்லவன்கிரகேசன் பெலன்பதிவிருதைமாதே

இ-ள். தாரேசன் ஸ்வட்சவுச்ச மித்திரனுயிருக்க அல்லது கோபுராங்கிசம் ஏற சுகசஷ்டியங்கிசம்ஏற அனுகூலகளத்திரம். தாரேசனைக்குருபார்க்க குருவுடனே சுக்கிரன் பெலமாயிருக்க நல்ல பதிவிருதை யுண்டாம் எ-று. 8

மாதெனுங்களததிரேசன் சனியுடன்வாழவந்தப்
போதிலேவியாழங்கூடப் புதன்குருவாலும்பார்க்கச்
சீலமாந்தர்மசீல தேவியாங்களத்திரேசன்
கோதிலங்கிசமாய்த்தர்மன் பார்த்திடக்குணமாந்தாரம்

இ-ள். களத்திரேசன் சனியுடனேகூடிக் குருவாலே பார்க்கப் பட வியாழத்துடனேகூட தர்மபதிவிருதை, களத்திரேசன் கேந்திரத்தில் நிற்க சுபக்கிரகம்பார்க்க தர்மசீலபதிவிருதை எ-று. 9

சுகமெனுங்களத்திரேசன் சூரியனுடனுய்ப்பாவர்க்
சுகமதாய்ப்பாவிபாக்கத் தாரமும்பாவியாகுந்
தகவெனுந்தானவீட்டிற் பானுவேசார்வதாகிற்
சகமெனுஞ்சுபர்பாராரேற் சார்வதபாவதாரம்

இ-ள். களத்திரேசன் பாவராசியில் சூரியனுடனேகூடப்பாவிகளினாற் பார்க்கப்படப் பாவக்களத்திரம் 7 மிடத்திற் சூரியனிருக்க சுபதிருஷ்டியுண்டாகாதிருக்கினும் பாவகளத்திரமேயாம் எ-று. 10

சார்ந்திடும்பிருகுபால னுச்சமாய்த்தனவீடாக
வேந்தலாங்களத்திராதி யுடனவர்சுப்ரங்சமேறக்
கூந்தலாப்பிடியாடாரக் குணபதிதர்ம்மமாகச்
சேர்ந்தநற்புத்திரானேச் செ. முடன்பெறுவடானே

இ-ள். சுக்கிரனுங் களத்திராதிபதியும் பெலவானுகச்சுபாங்கிசம் ஏற மிததுருவுச்சவர்க்கங்களிலே சுபக்கிரகமிருக்க வாசாலமாய் புத்திரவதியாக நல்லபுத்திரானேப்பெறுவாள் எ-று. 11

பெறுவதரங்களத்திரேசன் பிணியெனுந்தானத்தானு
முறமெனவேழிற்கூட வேழிடமுடையான்மைந்தன்
மறுவிலனுகநீசவங்கிசம் வருவானுகி
னுறுதியாந்தாரந்தானும் பார்தனேயுகந்துவாழ்வாள்

இ-ள். ஆறுமிடமுடையவன் ஏழாமிடமுடையவனுடனேகூடி நிற்க அந்த ஏழாமிடமுடையவன் சனியாக அவன் நீசக்கிரகசங்கிசம் ஏற பரஸ்திரீ எ-று. 12

வாழ்பவனேழாம்வீடு குருவின்வீடாகமைந்தன்
றுழ்விலாதிருக்கநல்லோர் பார்த்திடினல்லதார

மேழிலேராகுகேது சனியுடனிருக்கமைந்தன்
வாழுமங்கிசத்தாய்பாவர் பார்வையான்மயக்குந்தாரம்.

இ-ள். ஏழாமிடமுடையவன் வியாழகாயிருக்க அதிற்சனியி
ருக்கப் பாவிக்ள்பார்க்கச் சனிகுரூரசட்டியங்கிசமேற அவள் பத்தா
வுக்கு விஷங்கொடுக்கும்பாவி எ-று. 13

தாரனும்லக்கினேசன் சகிதனுயுதயம்வாழில்
வாரமாய்வாலிபத்திற் களத்திரமாகவாய்க்குந்
தீரனும்லக்கினேசன் களத்திரனுடனேசேர்ந்து
மாரவேகேந்திரத்திரத்தாலிளமையிற்றூரமாமே

இ-ள். தாரேசன் லக்கினுதிபதியுடனெ லக்கினத்திலிருக்கவா
லீபந்தொடுத்து அனுகூலகளத்திராதி, லக்கினுதிபதியும் களத்திரா
திபதியும் கேந்திரத்திலிருக்க பாக்கியனாலே பார்க்கப்பட அனுகூல
களத்திரம் வாலீபத்தில்வாய்க்கும் எ-று. 14

இளமையாம்லக்கினுதிபதியுடன்களத்திரேசன்
வளமுறுகுடும்பன்கூட வல்லதுசுபர்கள்வீடாய்ப்
பழகினல்வாலீபத்திற் பாரியாம்லக்கினேச
னளவறுவர்க்கங்கார கன்பெலவண்ணமாமே.

இ-ள். இலக்கினுதிபதியும் குடும்பாதியும் தாராபதியும் சுபனு
டனேகூட அல்லது சுபக்கிரகம் வீட்டிலிருக்க அவனுக்குவாலீபத்
தில் விவாகம், களத்திராதிபதிஷட்வர்க்கமேறக் குடும்பாதிபதி பெ
லாட்டியனுக களத்திரகாரகனு மப்படியிருக்க வாலீபத்தில் விவாக
ம் எ று. 15

வண்ணமாங்காரகன்றூன் சட்டாட்டவியத்தில்வாழத்
திண்ணமாம்லக்கினுதி பதியுமப்படியேசேரத்
தண்ணதாமேழாந்தானம் பாவநீசமதாய்த்தார
மெண்ணிலாத்துக்கியாகி யிருப்பதுதிடமாய்ச்சொல்லே.

இ-ள். சுக்கிரன் சஷ்டாஷ்டயவியத்திற்போக லக்கினுதிபதியு
மப்படியிருக்க அந்தராசி நீசமூடமாய்ப்போக அவனுக்கு பாக்கியங்
கெட்டு தாரமுங்கிடையாது எ-று. 16

இருப்பவனேழாம்வீட்டான் குரூரசட்டியுறச்சுங்கன்
விருப்பிலவ்வண்ணநல்லோர் பார்க்கிறும்பதுமேற்றூர

மொருப்பொடுகேர்மதானம் பாவியாய்க்குடும்பன்ரண்டான்
பொருக்சனம்பாவர்கூடி லேழிற்றாரம்போய்த்தாரம்.

இ-ள். ஏழாமிடமுடையவுன் குரூரசஷ்டியங்கிசமேறக் காரகனு மப்படியேற சுபக்கிரகம்பார்க்க நாற்பதுவயதுக்குமேல் விவாகம், காமத்திற்பாவியிருக்க குடும்பாதிபதி பாவியுடனேகூடப் பாக்கியாதிபதி பாவர்களுடனேகூடி களத்திரத்திலிருக்க தூரதேசத்தில் விவாகம் எ-று. 17

தூரமாம்லக்கினேசன் களத்திரன்மேலிருந்துதோன்றக்
காரகன்றன் ரோகத்தாற்களத்திரநாசமாகும்
வாரமாம்லக்கினதி க்ளத்திரனுடனேவந்த
வோரேசன்பார்க்கப்பத்தா வுடன்படச்சோரியாமே.

இ-ள். லக்கினேசன்பெலஈனனுயிருகக களத்திரநாதனுமப்படியிருக்கக்காரஜன் ரோகமேற களத்திர ஈனம், லக்கினேசனுடனே ஏழாமிடமுடையவன்கூடி ரோகத்தானத்தி லிருக்க ஆறுமிடமுடையவன்பார்க்க பத்தாவுக்குச் சமீபித்துச் சோரம்பண்ணுவாள் எ-று.

உடன்படுந்தாரநாதன் காரகனிலக்கினனென்றுய்த்
திடம்படுஞ்சத்துரேசன் செலமெனுமிராசிதோன்றி
யடர்ந்ததைப்பார்க்குமாகி லவனுடன்தாரமன்பாய்த்
தடஞ்சலக்கரையிற்சோரர் தன்னுடன்கூடுவாளே.

இ-ள். ஏழாமிடமுடையவன் காரகன் லக்கினதிபதி பெலமாயிருக்கச் சஷ்டாதிபதி ஜலராசியிலிருந்து கூடிப்பார்க்க ஜலக்கரையிலே சோரியாவாள் எ-று. 18

கூடியதிரியாம்ராசி யிடபமுஞ்சிங்கங்கூறுஞ்
சேடியாங்கன்னிதேளே சென்மலககினவேயாகி
ஞடியதீககோளாகிற் புத்திரர்கவிலவேண்டா
மாடியுஞ்சுபககோள்பார்ககில் புத்திரன்சோரத்தாலே.

இ-ள். ஸ்திரிராசி ரிஷபம், சிங்கம், கன்னி, விருச்சிகம், மீனம், ஜன்மலககினமாகில் புத்திரயோகம், சுபககிரகம்பார்ககில் சோரபத்தாவாலே புத்திரயோகம் எ-று. 19

ஆலமாமேழான்வீட்டான் சட்டாட்டவியத்தனாகத்
தூலமாமிரவிகூடச் செய்ததைத்துடர்ந்துபார்க்கப்

பாலனுந்தூரமான வமங்கில்யம்பரத்தையோடே
சீலமாய்ச்சேர்ந்துபாவஞ் செழிப்புறத்தேடுவானே.

இ-ள். ஏழாமிடமுடையவன் சஷ்டாஷ்டம' வியாதிபதியாக சூரியனுடனேகூடியிருக்க செவ்வாய்பார்க்க அமங்கில்ய தூரஸ்திரீ சங்கமம்-எ-று. 20

பாரமாம்புதனுமேழாய்ப் பார்ப்பதுரோகநாளுக்
கோரமாயீனனுன கோமுட்டிக்குருவேயேழாய்த்
தீரனுயாறுன்பார்க்கக் கெர்ப்பமுஞ்செனித்துதூர்த்த
மாரும்பாப்பாத்ரீதன்னே யணுகியேநரகில்வீழ்வான்.

இ-ள். புதனேழில்நிற்க சஷ்டாதிபதிபார்க்க கோமுட்டிச்சி சங்கமம், குரு ஏழில்நிற்ற ஆறுமிடமுடையவன் பார்க்க பிராமண ஸ்திரீ கெர்ப்பிணிசங்கமம்-எ-று. 21

வானெனுமேழானீச னுடன்வந்துவாழவேழிற்
றீனமாம்பாம்புமந்தனிருந்திடில்குள்ளேசேர்வான்
பானுவுஞ்சுகத்தானத்தா யேழினிற்பருதிமைந்த
னுனதாலயத்திற் சங்கமாயழிவன்றுனே.

இ-ள். ஏழாமிடமுடையவன் ஈனகிரகத்துடனேகூட ஏழில் சனிராகு-இருக்க கெர்ப்பிணி சட்டச்சி கறுப்பிசங்கமம், சூரியன் நாலில் நிற்க வழில் சனிநிற்க தேவாலயத்திற் சங்கமம்பண்ணுவான் எ-று. 22

சங்கமாமேழாந்தாரஞ் சலமெனத்தாரநாதன்
பங்கியசலத்தில்வாழ வொன்றுநான்கேழுபத்தா
யெங்குமேகேந்திரிக்கச் சலக்கரையிடமாய்த்தேடி
மங்கையருடனேசேர்வன் மிருகம்போற்பாய்ந்துதானே.

இ-ள். ஏழாமிடஞ் ஜராசியாக எழாமிடமுடையவன் ஜலராசியிலிருக்க அல்லது-3-4-7-10 கேந்திரத்தானமாயிருக்க ஜலக்கரையில்மிருகம்போல ஸ்திரீகளைப் புணருவன்-எ-று. 23

மிருகனுஞ்சனியும்பானு மேழிலாய்ச்சேய்காலாக
வறுதலிமிருகம்போல வாகியேசேர்வனேழிற்
றெறுதேளிற்பாம்புஞ்சேயுஞ் சேர்ந்திடிவன்றிதாலிற்
குறுகினுமிருகம்போலக் கூடுவன்மாதரோடே.

இ-ள். சனியுஞ் சூரியனு மேழில்நிற்க, நாலிற்செவ்வாய்நிற்க முன்போலப்பலன், ராகு எழில்நிற்க செவ்வாய்கூடநிற்க அல்லது நாலில் நிற்க முன்சொன்னபலன் எ-று. 24

மாதெனுமேழாம்வீடு புருடவீடாகவந்து
சீதனும்புகருமங்கே சேர்வன்றியுச்சமாக
வேதநிற்றன்வீடாக விருந்திடக்காமஞ்சேர
சூதனுந்தோகையாரைப் பகமதிற்சும்புவானே.

இ-ள். ஏழாமிடமுடையவன் சுக்கிரனுக சுபக்கிரகனுடனேகூடப்பிருகு க்ஷேத்திரமாக இருக்க பகசும்பனம்பண்ணுவான் எ-று.

வானெனுமேழாம்வீட்டான் வெள்ளிபாயன்றிவெள்ளி
தானெனக்கூடுமாகிற் பகசும்பன்குடும்பன்வெள்ளி
தீனமாயேழானோடே சேரிலவ்வண்ணமாகும்
பூனலங்கவர்ந்தமாதே புத்தியாலாய்ந்துகொள்ளே.

இ-ள். ஏழாமிடமுடையவன் சுக்கிரனுக அல்லது சுக்கிரன் கூடில்முன்பலன் குடும்பத்திற் சுக்கிரன் ஏழாமிடமுடையவனுட கூடியிருக்க முன்சொன்னபலன்—எ—று. 26

ஆய்த்தகர்மத்தான்றன்னைச் சனிபார்க்கவாடுந்தேளும்
வாய்ந்திடுமேழாம்வீடாய்ப் புகர்பார்க்கிலவணமாகும்
காய்ந்தசேயேழதாகி ராகதைக்கடிந்துபார்க்கி
வேய்ந்தமங்கையர்க்குக்கொங்கை யிலம்பகமாகுந்தானே.

இ-ள். கர்மேசனைச் சனிபார்க்க களத்திரதானம் மேடவிருச்சிகமாக சுக்கிரனுற்பார்க்கப்பட முன்சொன்னபலன், செவவாயேழில் நிற்க ராகுபார்க்க களத்திரத்துக்கு கன்மலெம்பனம் எ-று. 27

இலங்கியதாரநாதன் பாவியாயிணங்கப்பாவி
புலங்கொடிதனமுலம்பம் புகழுடனேழாம்வீடு
செலந்திகழிராசியாகச் செலத்துநாதனும்பார்க்கும்மே
னலங்கிளக்ததாரங்குப்ய நீர்க்கட்டுநல்லதாமே.

இ-ள். ஏலாமிடமுடையவன் பாவியாயிருக்க அல்லது பாவியுடனேகூட முன்சொன்னபலன், ஏழாமிடஞ் சலராசியாயிருக்க சேகம்பார்க்க ஜலக்கட்டு கொங்கை எ-று. 28

நல்லவன்புகருமுச்ச நலந்திங்களிலக்கினத்தில்
வல்லதாயிரவியுச்ச மாகநற்கிரகம்வாய்க்குஞ்
சொல்லியதாரநாதன் சுட்கமாய்ச்சுபர்கள்பார்க்கி
லில்லையேற்கூடுமாகிற் குய்யமுஞ்சுட்கமென்னே

இ-ள். சுக்கிரன் பாம்புநீசுமாக சூரியன்லக்கினத்திற்பெலமுச்சமாக தேவபூச்சியசயனசுகம தாரேசன் சுட்கராசியிலிருக்க அல்லது சுட்கசங்கனைச் சுட்கருப்பம் எ-று. 29

சுட்கமாந்தாரநாதன் சுபர்வீட்டிற்றேன்றவன்றித்
தக்கதாய்பாவர்கூடிற் றூரத்தின்குய்யஞ்லட்க
மிக்கதானேழான்வீடு மொத்திடச்சீலமாகி
லக்கனஞ்சீலத்தானிற்கிற்குயத்தினிற்கலக்கட்டாமே

இ-ள். தாரேசன் பாபக்கிரகத்திலிருக்கப்பாவியுடனேகூட குய்யஞ்சுட்கம் ஏழாமிடமொற்றித்தராசியாயிருக்க ஜலக்கிரகம்பார்க்க குய்யஞ்சலம் எ-று. 30

கட்டதாயேழான்றன்னைக் குருபார்த்துநலஞ்சங்காணத்
திட்டமாய்ப்புளித்தசாதந் தேற்றியோரினமேகொள்வ
னிட்டமாயேழாந்தானன் புகரெனமதிபேபார்க்கச்
சட்டமாய்ச்சுபர்களாகச் சாதமேபொசிப்பதாமே

இ-ள். ஏழாமிடமுடையவன் குருதிருஷ்டிபெற்றிருக்கச்சவுமியாங்கிசம் ஏறச் சவுமியாள்பார்க்கத் ததியோதனம்புளியோரைபொசிப்பன் ஏழாமிடமுடையவன் சுக்கிரனுக அவனைப்பூரணச்சந்திரன் பார்க்கப் பாவிகள் கூடாமல்பார்த்திருக்க நல்லபோசனம் பொசிப்பான் என்றவாறு. 31

பொசிப்பதாமேழிற்பானு சேயுமேபொருந்தநல்ல
விசித்திரச்சுபக்கோள்பார்க்க வஞ்சைத்தான் விரும்பமுன்போ
லசிதனும்பாவியேழாய்க் குரூரசட்டியங்சமேறப்
பசிக்கொருபொசிப்புமின்றிப் பாவியாமதியில்லாதே

இ-ள். ஏழில் செவ்வாயும் ஆதித்தனுமிருக்கச் சுபாள்பார்க்க அல்லதுவேறேநிற்க நல்லபோசனம் பாவிகளேழில்நிற்க ஏழாமிடமுடையவன் பாவிகளுடனேகூடக் குரூரசஷ்டியங்கிசமேறஅவனுக்குப் பொசிப்புக்கிடையாது எ-று. 32

மதிகுருதாரேசன்னு யங்கிசஞ்சலமேவாழக்
கதியுடன்சலத்தான்பார்க்க சலிகமேபொசிப்பன்காளே
வதியெனச்சத்தமாதி யங்கிசமரணவீட்டா
னிதியெனுஞ்சலமேவாழச் சுபாங்கிசநேரமுன்போல்

இ-ள். சந்திரன் குரு தாரேசனுக ஜலராசியங்கிசஞ்சாரசலக்கி ரகம்பார்க்க வீரபானுதிபொசிப்பன் சத்தமாதி திக்கரையேறின அங்கிசாதிபதி ஜலராசியிலிருக்கச் சுபதிருஷ்டியாகியிருக்கச் சுபாக்கிசமேற நல்ல சவீரவர்க்கமாம் எ-று. 33

முன்னியகேந்திரத்திற் பாவியேயாகியாருன்
றன்னிலேபார்த்துக்குரூர சட்டியங்கிசமேசார
மன்னியமூத்திரக்கி ரிச்சினம்லருகுமாலோ
வென்னலாமேழாம்பாவ பலன்முற்றுமென்னலாமே

இ-ள். கேந்திரங்களில் பாவிநிற்க சஷ்டாஷ்டமாதிபதிபார்க்க குரூரசஷ்டியங்கிசமேற மூத்திரக்கிரிச்சனமுண்டாம் எ-று.

ஏழாம்பாவம்-முற்றிற்று.

எட்டாம் பாவம்.

ஏழதாம்பாவமூற்று மெட்டிடமாயுத்தானம்
வாழ்வுறுபானங்குய்ய நிர்ணயமரணமெய்துந்
தாழ்விலாவன்னபான தேசமுந்தக்கநன்மை
யாளுடன்வேங்கடேச ரருளினலறைவதாமே

இ-ள். எட்டாமிடங்கொண்டு ஆயுர்த்தானம்மரணம் நிர்ணயம் குய்யம் மனது அன்னம் சுகம் தேசம் துக்கம் தன்மை ஜீவனம் இவைகளைச்சொல்வோம் எ-று. 1

அறைவதாமாயுர்த்தானன் சட்டமவியத்திலாத
விறைவனுப்கேந்திரேசன் பாவனேலாயுவில்லை
முறையெனவாயுநாதன் சொடமேசத்திரவுச்சனுகத்
திசைகொளுஞ்சனியுமுச்சங் கூடிற்றீர்க்காயுவென்னே

இ-ன். கேந்திரேசன் பாவியுடனே சஷ்டாஷ்டமவியத்திலிருக்மஎட்டாமிடமுடையவனு மப்படியிருக்க அற்பாயுசு அஷ்டமாதீபதி ஸ்வட்சேத்திரவுச்சத்திலிருக்க சனியுஞ் சுபக்கிரகத்துடனேகூடியிருக்க தீர்ககாயுசு எ-று. 2

என்னவேகேந்திரேச னிலக்கினத்திருக்கத்தானே
சென்மமாமிலககினுதி சுபனுடன்வியத்திற்சார
வன்னியலககினுதி யாறிடமுடையான்சேரப்
பன்னியுஞ்சுபரேபார்ககத் தீர்ககாயுபகாலாமே

இ-ள். கேந்திரேசன் லக்கினத்திலிருக்க லக்கினுதிபதி வியத்தில் சுபக்கிரகத்துடனேகூடியிருக்க சட்டாதிபதி லக்கினுதிபதியுடனேகூடியிருக்க சுபக்கிரகம் பார்க்கதீர்க்காயுசு எ-று. 3

ஆமெனுங்கர்மமிட்டா னிலக்கினனுடனேயாகி
சேமமாமிலக்கினத்திற் சுபர்பார்க்கத்தீர்க்காயென்ன
தாமமாஞ்சுகதானத்தான் கேந்திரத்தாருன்கூட
வேமமாய்த்தீர்க்கவாயு வென்னலாமொன்ருய்த்தானே

இ-ள். கர்மேசனுடனேகூடி லக்கினுதிபதி லக்கினத்திலிருக்க சுபாள் பார்க்கத்தீர்க்காயுசு நாலாமிடமுடையவன் கேந்திரத்திலிருக்க ஸ்வட்சேத்திரகோணங்களிலே அஷ்டமாதிபதியிருக்க தீர்க்காயுசு எ-று. 4

ஒன்றுதான்கேழுபத்திற் சுபகுருவுதயத்தானு
நன்றெனச்சுபக்கோள்வீடாய்த்தீர்க்காயுநவிலலாகு
மன்றியும்லக்கினுதி கேந்திரஞ்சார்வீடாகி
யின்றியுமெட்டாந்தான னிலக்கினப்பார்வைமுன்போல்

இ-ள். 1-4-7-10-ல் சுபக்கிரகமிருக்க இலக்கினுதிபதி சுபக்கிரகத்திலிருக்க குருவாலேபார்க்கப்பட்டத் தீர்க்காயுசு கேந்திரத்தில் இலக்கினுதிபதியிருக்க குருசுக்கிராள்பார்க்க லக்கினுதிபதி சுபனுக இருந்து அஷ்டமாதிபதியைப்பார்க்கத் தீர்க்காயுசு எ-று. 5

பாவிகளாபரோக மூன்றிடம்பற்றநல்லோர்
தாவுகேந்திரகோணத்தாய் தீர்க்காயுவட்டமத்திற்
கோவெனவுச்சன்வாழ வட்டாதிகுருவேபார்க்கக்
காவலன்தீர்க்காயென்றே கருதலாத்தமிழ்வல்லோ

இ-ள். பாபான் 3-6-11-லிருக்க சுபாளெல்லாங் கோத்திரித்தி கோணங்களிலிருக்க தீர்க்காயுசு அஷ்டமத்திலுச்சனுக ஒருகிரகமிருக்க அட்டமாதிபதிவய, வியாழம்பார்க்க தீர்க்காயுசு எ-று.

வல்லதாஞ்சட்டவட்ட வியந்தனிற்பாவிவாழ
வில்லெனுமிலக்கினதி பெலயீனமற்பவாயு
நல்லதாமட்டமாதி குரூரச்ட்யங்கமேற
வல்லதுபரிதிதன்னே டுடனுறினற்பவாயு

இ-ள். சட்டாட்டமவியங்களில் பாவரிருக்க இலக்கினதிபதி பெலஈனமாக அற்பாசுசாம் அஷ்டமாதிபதி சஷ்டியுங்கிசமேறினும் சூரியனுடனேகூடினும் அற்பாயுசாம்—எ-று. 7

அற்பமாம்வியனசுத்தர் கூடியேசுபர்பாராரே
னிற்கப்பினட்டமாதி யிரவிசத்துருவாய்நேரத்
தற்பெலன்லக்கினதி பதிக்குமப்படியேதோன்றத்
தற்பராசமமேயாகிற் சமமெனுமாயுதானே

இ-ள். வியாதிபதிபாவியுடனேகூடினிற்கச் சுபக்கிரகம் பாராதிருக்க அற்பாயுசு அஷ்டமாதிபதிக்கு ஆதித்தன்சத்துருவாயிருக்க லக்கினதிபதிக்கு மப்படியேயிருக்கில் சமமாயிருந்தால் மத்திமாயுசு மித்திரனுனல் தீர்க்காயுசு எ-று. 8

ஆயுரோராருன்பாவர் கூடிடிற்காலமில்லை
சேயுமேபிறந்தபோது சட்டாட்டன்றிசையேயாகின்
தீயதாம்வியமாந்தான மதனிடைச்செறிந்துநிற்க
ஞாயமாறெட்டேநிற்கிற் பிறந்துடனசிப்பன்றானே

இ-ள். சுபக்கிரகங்கள் மூலத்திரிகோணங்களிலிருக்கசஷ்டாதிபதியுமஷ்டாதிபதியும் பாவிகளுடனேகூடியிருக்க மத்திபாயுசு இந்தத்திசைபிறந்துடனே அட்டபாதிபதி சஷ்டமாதிபதிதிசையாகஅவன்சஷ்டாட்டமவியமேற் பிறந்தவுடனே மரிப்பாள் எ று. 9

நசித்திடுமெட்டானேடே ரோகனுநண்ணக்கேது
வசித்திரசனிதான்கூட சத்திரதனன்மாய்வன்
சிசுப்பெறுமிலக்கினேசன் பாவகன்சேடிவெட்டான்
மசிப்புறகேதுகூடத் தூரமேமரணமாமம

இ-ள். அஷ்டமாதிபதியுடனே ஆறுமிடத்துக்குடையவன்கூட அல்லது கேதுவுடனேயும் சனியுடனேயுங் கூடியிருக்கச் சத்திரவிரணத்தால் சாவான், இலக்கினாதிபதியும் வாகனாதிபதியுங்கூடியிருக்க அஷ்டமாதிபதியுடனே கேதுகூட அன்னியதேசமரணம் எ-று. 9

மரவெனுமிலக்கினாதி திரமதியுப்வியத்திற்
பரவிடத்திரியோர்பார்க்கத் திரியேதான்மரணஞ்சித்தம்
பரமெனப்பானுமேழி லக்கினமதியாய்ப்பாவா
டரமெனும்வியனசுங்கன் பார்த்திடத்திரியாற்சாவான்,

இ-ள். இலக்கினத்திற் சந்திரனிருக்க வியத்திற்பாவியிருக்க ஸ்திரீகிரகங்களினாற் பார்க்கப்பட அவனுக்கு ஸ்திரீயேதுவினாலே மரணம், ஏழில் சூரியனிருக்க சந்திரன் லக்கினத்திலிருக்க பாவாள் வியுத்தில்நிற்க சுக்கிரனாலே பார்க்கப்பட அவன் ஸ்திரீயேதுவினால் பச்சை நாவிதின்று சாவான் எ-று. 10

திரியெனுமூன்றுக்தானன் சட்டாட்டவியத்திற்சேரக்
குரியவன்பரத்தைமூலச் சாகுவனிலக்கினேச
னறிவுறுபெலவானாகி லவனுடைத்திரியினாலே
மறுவிலான்மாய்வனென்றுமாமுனியுரைசெய்தானே

இ-ள். மூன்றுக்குடையவன் சஷ்டாஷ்டமவியங்களிலிருக்கபல ஸ்திரீயேதுவால் சாவன், இலக்கினாதிபதி பூரணபெலமாக இருந்தாலும் ஸ்திரீயேதுவினால் மரணம் எ-று. 11

உரையெனுமிலக்கினாதி பூரணபெலனாப்நாலாற்
றிரமெனப்பாவாள்பாக்கி யேசன்வேயாறெட்டெய்தத்
துரவெனப்பிருகுபார்க்கத் தாயுமேசோரர்கூடித்
துரைமிசைமகவைக்கொல்வா ளென்னவேசாற்றலாமே

இ-ள். லக்கினாதிபதி பரிபூரணபெலவானாக நாலில்நிற்கப் பாக்கியேசன் சஷ்டாஷ்டமவியங்களில்நிற்க அதைச்சுக்கிரன்பார்க்கஅந்தமாது சோரபர்த்தாநிமித்தம் தன்பிள்ளையைக்கொள்ளுவாள் எ-று.

சாற்றியவட்டமாதிகர்மத்தானேழிற்சார
வேற்றிநாலினிற்சேரத்தா யேதுவாய்மரிப்பாண்மூன்றான்
றெற்றியவேழிற்சேர நாலிடமட்டங்தோயப்
பார்த்திபன்பாக்கியாதி பார்க்கிலவ்வண்ணமாமே.

இ-ள். அஷ்டமாதிபதியும் பத்தாமிடமுடையவனுங்கூட ஏழாமிடத்திலிருக்க அல்லது நாலாமிடத்திலிருக்க முன்சொன்னபலன், மூன்றுமிடத்துக்குடையவன் ஏழாமிடத்திலிருக்க, நாலாமிடமுடையவன் அஷ்டமத்திலிருக்க பாக்கியாதிபதிபார்க்க முன்சொன்ன பலன் எ-று. 13

வண்ணமாம்பாக்கியாதி பெல்முறயிந்துவோடே
திண்ணமாய்நாலான்கூடப் புகர்பார்க்கத்தினந்தாய்ப்பேணுந்
தண்ணமாமாறிற்பாவி யட்டமன்பாவர்தாவ
வெண்ணிலாக்குய்யந்தாவ நோயினுன்மரிப்பளென்னே

இ-ள் பாக்கியாதிபதி பெலவானுக நாலாமிடமுடையவன் சந்திரனுடனேகூடியிருக்க சுககிரனுலே பார்க்கப்பட அந்தபிள்ளையை மாதாபூச்சியும்பண்ணுவாள், ஆறுமிடத்திற்பாவியிருக்க அஷ்டமாதிபதி பாவியுடனேகூடியிருக்க குய்யத்தானத்தில் நோயுண்டாய் மரிப்பாள் எ-று. 14

மரித்திடுந்தானுங்கூடி மைந்தனுஞ்சரமேயாக
விரித்திடுந்தூரதேசந்திரமெனிற்றன்வீடாகும்
பிரித்திடுமுபயமாகிற் பிறந்தகமல்லால்வேறே
தரித்திடவகமுண்டாகித் தானத்தின்மரிப்பன்றுனே

இ-ள். சனி சாராசியிலிருக்க அன்னியதேசத்தில்மரணம், திரராசியிலிருக்கத் தன்வீட்டில்மரணம், உபயராசியிலிருந்தால் பிறந்த வீடல்லாமல் வேறேவீடுகட்டி அதில்மரிப்பான் எ-று. 15

எட்டாம்பாவ முற்றிற்று.

ஒன்பதாம் பாவம்

அன்பினுலெட்டாம்பாவ பலன்முற்றுமாகிப்பின்னே
யொன்பதாந்தானந்தாதை பாக்கியந்தனங்கடாபஞ்
சிந்தையால்வெங்கடேசன் செப்பினுனுரைத்தபாட
லின்பமாய்மயிலின்சாய்கை வாரணங்கற்றதன்றே.

இ-ள். ஒன்பதாமிடங்கொண்டு பிதுர்சிந்தைதர்மசிந்தைபொன் பேறு பாக்கியம் இவைகளைச்சொல்வாம் எ-று. 1

கற்றவன்மதியும்பாவி களுமொன்பதாமிடத்தாய்ச்
சுத்தனுஞ்சுங்கன்கூடக் குருதோய்வன்பாக்கியவீட்டா
னிற்வனுஞ்சுங்கன்கூடிற் படர்மதிமடவராய
ரூற்றிடக்கூடிற்றுன முறின்முதற்றிரியோடுண்டாம்.

இ-ள். சந்திரன் பாவியுடனேகூடி ஒன்பதில்நிற்கச் சுக்கிரன் கூடியிருக்க குருதாரமிச்சிப்புன், பாக்கியாதிபதியுஞ் சுக்கிரனுங்கூடில் முன்சொன்னபலன், சந்திரனுடனே பாவக்கிரகங்கூடி பத்தாமிடத்திலிருக்க வயதுக்குமூத்தஸ்திரீ சையோகம்-எ-று. 2

உண்டெனுந்தர்மவீட்டா னீசனுய்ப்புகருங்கூடக்
கொண்டதுமூத்ததாரங் குலம்பதிகர்மவீட்டான்
றிண்டிறற்சுபனும்மூலத் திரிகோணமேவநாதன்
கண்டிடப்பாக்கியாதி குருபுகர் தர்மங்காணும்.

இ-ள். தர்மாதிபதி நீசனுக சுக்கிரன்கூட முன்சொன்னபலன் தர்மேசன் சுபனுயிருக்க மூலத்திரிகோணத்தில நல்ல அங்கிசம் எற பாக்கியாதிபதி குருவாகயிருக்க அல்லது சுக்கிரனுயிருக்க அவன் ஸ்வட்சேத்திர மித்துருவங்கிசங்களில் தர்மவான்-எ-று. 3

ருகுவுடன்புகர்தான்புத்தி பாக்கியத்தானங்கொள்ள
விருபுறஞ்சுபரேயாகிற் றர்மவான்றர்மவீட்டிற்
பிருகுபாலகனுய்ப்பாவர் குரூரசட்டியங்சமேறத
திருவுடன்சிறிறுதர்மஞ் சிறிதுநாள்த்ாவங்தேடும்.

இ-ள், குரு, சுக்கிரன், புதன், தர்மாதிபதியாயிருக்க சுபக்கிரக மத்தியிலிருக்க தர்மவான், கர்மதானத்தில் சுபாளிருக்க பாவாங்கிசங்கு ரூரசஷ்டியங்கிசமேறச் சிறிதுநாள்தர்மமுஞ் சிதிதுநாள் பாவமும் பண்ணுவான்-எ-று, 4

தேடியபாக்கியத்தா னங்கிசஞ்செல்லும்வீட்டா
னுடியேசுபனுயாறு வர்க்கமேனலத்தேர்வைப்பன்
வாடியபாககியத்தின் மந்தன்றனீராகுவாகிற்
கூடியகுளிகனுகத் தேவத்தானததைக்கொள்வன்.

இ-ள். ஒன்பதாமிடமுடையவன் அங்கிசாதிபதி சுபனுயிருக்க ஆறுவர்க்கமேற தேர்முகிப்பன், பாக்கியத்தில் ராகுமந்தனிருக்க குளிகன்பார்க்க தேவஸ்தானத்தைப் பிடுங்கி தன்வீட்டிலிடுவன் எ-று. 5

வானெனும்பிருகுநாதன் சுபனெனவரினும்பானு
தேனெனச்சுபருங்கூடத் தீர்க்காயுபிதாவக்கென்று
நானெனப்பானுவோடே சுபர்கூடநலமாந்தத்தை.

இ-ள். பிதுர் தானுதிபதி சவுமியனுகக்காரகன் சுபாளுடனேகூடப் புதாவுக்குத் தீர்க்காயுசு, பிதுர்தானுதிபதி பாராவதாங்சமேறக் காரகன் சுபாளுடனேகூடப் பிதுர்சவுக்கியம்-எ-று. 6

தந்தையாந்தானந்தன்னிற் சவுமியன்றங்கச்சுங்கன்
சுந்தரவியாழங்கூடி கோபுராங்கிசமேதோய
வந்தாத்திரவிதானு மவ்வண்ணமாகநல்லோர்
சிந்தையாற்பார்க்குமாகிற் பிதுர்சவுக்யந்தீர்க்காயுண்டே.

இ-ள். ஒன்பதில் சவுமியாளிருக்க குரு சுக்கிரா ளொருத்தர் கூடகோபுரங்கிசமேறக்காரகனு மப்படியே சுபக்கிரகம்பார்க்க அவனுக்கு பிதுர்சவுக்கியமுண்டாம்-எ-று. 7

உண்டெனுமிரவிகுரூா சட்டியங்கிசமுவப்பஃ
கொண்டதன்பிதாவுந்துக்கி பாக்கியங்கிசங்கொள்வீட்டான்
மண்டலப்பானுவோடே நீசனுயாறுப்வீட்டான்
கண்டிடப்பார்க்கத்தந்தை கடுகியேமரணமாமே.

இ-ள். பிதுர்காரகன் குரூரசஷ்டியங்கிசவேறப் பிதுர்துக்கம், பிதுர் ஸ்தானுதிபதியேறின வங்கிசாதிபதி பிதுர்காரகனுடனே நீசனுகியிருக்க சஷ்டாதி 'தியுடனேகூடப் பிதுர்மரணம்—எ-று. 8

கடிகையாயிலக்கினேசன் பாக்கியனுடனேகாணத்
துடியிடைபானுவாலும் பார்க்கத்துன்மார்க்கமாகும்
படிமிசைபிதுருத்தான னுலிலாய்ப்பிதாவுந்தோன்று
முடியலக்கினமுமூன்றிற் பிராதுர்போன்முயற்சிப்பானே.

இ-ள். இலக்கினேசன் பிதுர்தானுதிபதியுடனேகூடக் காரகனுவது அப்படிவுட வியாழம்பார்கக பிதுர்கர்மம்பண்ணுவன். பிதுர் தானுதிபதி நாலில்நிற்கப் பிதாவினது ஜன்மராசி மூன்றுமிடம் இவன் ஜன்மராசியாக சகோதர ஜனங்களைப்போ லிருந்து கர்மம் பண்ணுவான்—எ-று. 9

முயற்சியாய்த்தாதைதோன்று மிலக்கினமிவனேமாது
வயத்துடன்லக்னஞ்சட்ட வட்டமவியமேயாகி
னயத்துடன்சனியுஞ்செவ்வாய் பார்க்கிடபிதாவினாலே
வியப்புடனிருக்கக்கர்ம்ம மெத்தவேவ்விதியுண்டாமே.

இ-ள். பிதுரேசன் லக்கினத்துக்கு மிவன்லக்கினஞ் சஷ்டாஷ்டமவியமாகியிருக்க சனியுஞ் செவ்வாயும் பார்க்கப் பிதாவினாலே கர்மஞ்செய்துகொள்ளுவான் எ-று. 10

விதியெனுந்தானத்தானு மட்டமராசிதாளின்
மதியுடைக்குழவிதோன்ற வன்றிநான்மூன்றாய்வாய்க்கத்
கதியுடைக்குழவிகர்த்தன் காமமேமுகிப்பனென்று
நீதியுடன்முனிவர்தேர்ந்து நினைப்பதுதந்தைதாயே.

இ-ள். பிதாவினது அஷ்டமத்தானம் க்ஷேத்திரம்பிறக்க அல்லதுமூன்றும் க்ஷேத்திரத்தானம்பிறக்க பிதுர்தானே கர்மம்பண்ணுவான் எ-று. 11

தந்தையாந்தானநாதன் கேந்திரமதுவேதாவ
வுந்தியாப்பானவண்ண முதவிடாத்தூரவான
சிந்தியாப்பிதுருநாதன் லக்கினன்சேரரோகன்
விந்தையாமெட்டான்வேய னுனுறினுதவான்மின்னே.

இ-ள். பிதுர்த்தானுதிபதி கேந்திரங்களிற் சரராசியிலிருக்கக் காரகனு மப்படியேயிருக்கப் பிதாவுக்குதவாமல் தூரதேசம்போவான்பாக்கிய னிலக்கினத்திலிருக்க சஷ்டாஷ்டம வியாதிபதி தர்பத்திலிருக்கச் சகலகிரகமும் ஸ்வட்சமித்துருவாக இருக்க அன்னியதேசம் எ-று. 12

மின்னியகேந்திரத்ரிகோணத்தில்விரும்பித்தாதை
தன்னிலேசவுமியாள்கூடப் பாராவதாஞ்சஞ்சார
வன்னியுந்தன்வீடாகி லனேகபாக்கியமுண்டாகு
மென்னவேகலைவல்லோர்க ளியம்பினர்பாராயுர்த்தனே.

இ-ள். திரிகோணகேந்திரத்தில் பாக்கியாதிபதியிருக்க சவுமியாள்கூட ஸ்வட்சேத்திரம் பாராவதாங்கிசமேற அனேக பாக்கியமுண்டாம் எ-று. 13

பாரனுமாம்புத்திரேசன் பாக்கியமதுவேபற்று
விராளெனிற்கூடம்பார்க்கப் புத்திரராலேபாக்யந்
தாரதேழின்ஞாதித்தானன் பாக்கியஞ்சாரமைந்தன்
றராதரனுகக்கூட ஞாதியாற்றருமேசெல்வம்.

இ-ள். புத்திரேசன் பாக்கியத்திலிருக்க அல்லது பாக்கியனு டனே கூடப்பார்க்க புத்திரராலே பாக்கியம் ஞாதிகாஞதிபதி பாக் கியத்திலிருக்க ஞாதிகாரகனே சனிபார்க்கக் கூட ஞாதியாலே பாக் கியம் எ-று. 14

இலககினன்லாபன்சேரப் பாக்கியன்றன்வீடென்னப்
பலத்துடன்கர்மநாதன் பாககியனுடனேபார்ககப்
பெலத்துடன்பாககியாதி சகோதரனுடனேற்பெண்ணே
னலத்துடன்சவுமிபார்கக வங்கிசந்தருமேலாபம்

இ-ள். இலககினுதிபன் லாபத்தில்நிற்கப் பாககியாதிபதி பாக கியத்தில நிற்கக கர்மாதிபதி பாககியனுடனேகூடமகாபாககியம்,மூ ன்றாமிடமுடையவன் பாககியாதிபதியுடனேகூடிச்சவுமியாள்பார்க கால்லஅங்கிசமேற சகோதரராலேக்ஷேத்திரபாககியமுண்டாம்.

தருமெனுந்தாரநாதன் றேவலோகாங்சஞ்சார
வருகையிற்பாககியகார கன்குரூராங்சம்வாழ
கிறுபனும்பாககியவீன நிச்சயம்பாககியாதி
வெரூவியபாவர்கூட லககினன்சயமேல்வீணே.

இ-ள். களத்திரகாரகன் தேவலோகாங்கிசம் ஏற பாக்கியாதி பதியுங் காரகனும் குரூராங்சம் ஏற பாககிய ஈனம் எ-று. 16

வீணெனும்பாககியாதி சட்டாட்டவியத்திலாகக
கோணனுங்காரகன்று னப்படியேப்பார்கக ாவா
ளாணியாய்ப்பார்ககப் பாககியவீனமிலககினுதி
சேணுறுபெலவானுகிற் பாககியஞ்செனிககுமாதோ.

இ-ள். பாககியாதிபதி சஷ்டாஷ்டம வியத்திலிருககக காரகனு மப்படியிருககச் சுபாள் பாராதிருககப்பாககியவீனம், லககினுதிபதி பெலத்திருகக பாககியமுண்டாம் எ-று. 17

பாககியன்குரூரசட்டி யங்கிசம்பற்றவந்த
வாககமாம்வீட்டான்றன்னே சுககிரன்பார்ககவாகி

நீக்கமாமுதயஞ்பாக்கிய மைந்தனுமகனுநிற்கப்
பாக்கியவீனனல்லா லாபமொன்றில்லைமாதோ

இ-ள். பாக்கியாதிபதி குரூராங்கிசமேற அந்தநாதனைச்சுக்கிரன்பார்க்க பாக்கியத்திலக்கினத்திற் சனி குளிகன்கூட பாக்கியநாசனம் என்றவாறு. 18

லாபனும்பாக்கியத்தாய் பாக்கியன்லக்கினத்தாய்
தீபமாம்லாபன்பாக்கியன் கூடினுஞ்செழித்துவாழ்வன்
சாபமாங்காமன்பாக்கியஞ் சாரவுஞ்சவுமியாளே
தூபமாய்ப்பாராவதாங்கந் தோயப்பாக்கியமென்றேமால்

இ-ள் லாபன் பாக்கியத்திலிருக்கப் பாக்கியன்லக்கினத்திலிருக்க லாபாதிபதியும் பாக்கியாதிபதியும் கூடியிருக்க நல்லபாக்கியம் காமேசன் பாக்கியத்திலிருக்க பாராவதாங்கிசம்ஏறின் சவுமியாள் பார்க்க வெகுபாக்கியமுண்டு எ-று. 19

மாலெனுந்தாரநாத னுச்சனுய்ச்சுபரேவாழ
சீலமாய்ச்சுபரேபார்க்கத் தானங்கண்மிகவுஞ்செய்வ
னேலவேபாக்கியாதி பாராவதாங்சமேறச்
சாலலக்கினன்பெலக்கப் பெண்பார்க்கததானமாமே.

இ-ள். களத்திரத்தானுதிபதி யுச்சனுகச் சுபக்கிரகம்பார்க்கவிருக்கமகாதானம்பண்ணுவன் பாக்கியன் பாராவதாங்கிசமாறுவர்க்கம்ஏற அவனைவியாழம்பார்க்க மகாதானம் பண்ணுவான் எ-று.

தானமாந்தானந்தன்னை லக்கினன்றயவாய்ப்பார்க்க
வானவன்மாதான்பாக்கியன் சிங்காசனுங்சமேற
வானதோர்தானத்தானைக் கர்மதானத்தோன்றன்னை
யானதோர்பக்கினுதி பார்க்கவுந்தானனுமே

இ-ள். லக்கினுதிபதியைக் தானுதிபதிபார்க்கவன்றுக்கொன்று பார்க்க மகாதான்ம்பண்ணுவன் ஒன்பதாமிடமுடையவன் சிங்காசனுங்கிசமேற லக்கினுதிபதியாலே தானுதிபதியைப்பார்க்க அல்லது கர்மாதிபதிபார்க்க மகாதானம்பண்ணுவன் எ-று. 21

ஆமெனுமிலக்கினத்தை பாக்கியன்பார்க்கக்கூடப்
பூமனுமிராசயோக மாமெனப்புகலலாகு

மேமமாந்தானத்தான மொருவன்ருனிருக்கப்பாக்கிய
லாபனுப்பார்க்கிற்ருன ச்காயனுய்வர்த்திப்பானே

இ-ள். இலக்கினத்தைப் பாக்கியன்பார்க்க அல்லதுகூடியிருக்க ராசயோகம், ஸ்தானத்தானத்தி லொருகிரகமாவதிருக்க பாக்கியன் பெலத்திருக்க தானசகாயன் எ-று. 22

காயமாநாலாந்தானன் சுபனெனக்கருதப்பாக்கியன்
ஞாயமாய்க்கேந்திரத்தி னல்லவனுகச்சுங்கன்
வேயமாயிருக்கவேமா தானமேமிகவுஞ்செய்து
தூயவனென்னவாழ்வன் சுரர்தமக்கதிகமாமே

இ-ள். நாலாமிடமுடையவன் சுபனுகவிருக்க பாக்கியன் கேந்திரத்திலிருக்க சுக்கிரன்வியத்திலிருக்கமகாதானம்பண்ணுவன்-எறு

அதிமாமிலக்கினேசன் லாபமாய்க்கர்மநாதன்
பதியினிற்பெலக்சப்பாக்கியன் குருசசட்யாங்சமேற
விதியினிற்ருரன்கையால் வாங்குவன்வித்தமில்லா
னதியினின்மூழ்கித்தீரு மென்பவனவமில்லானே

இ-ள். இலக்கினேசன் லாபராசியிலிருக்க கர்மேசன்பெலத்திருக்க பாக்கியன் குருரனுயிருக்க தானம்வாங்குவான்-எ-று.

இல்லெனும்புத்திரேசன் பாக்கியத்திருககககர்மன்
வல்லவன்பாக்கியாதி கூடலக்கினமாந்தானன்
சொல்லியகுருரனுகத் தானமேதுடர்ந்துவாங்கிப்
பல்பலகாலம்போககும் பாக்கியமில்லேத்தானே

இ-ள். ஐந்தாமிடமுடையவன் 9-ல் நிற்க கர்மாதிபதியும் பாககியாதிபதியுங்கூட இலக்கினேசன் குருரனுகியிருக்கத் தானம்வாங்குவான் எ-று. 25

ஒன்பதாம் பாவ முற்றிற்று.

பத்தாம்பாவம்

பாக்கியனென்பான்றனம் பாடினேன்பத்தாம்பாவ
மாய்ககினைவிர்த்திகீர்த்தி மானமுங்கர்மமாகத்
தேககுசீவனங்கண்ஞானம் புத்திநல்வடிகள்சேர்தல்
வாககினல்வேங்கடேசன் வணங்கினர்மனத்தாற்கல்லே

இ-ள். பத்தாமிடங்கொண்டு பிரவர்த்தி ஆக்கினைகீர்த்தி புத்தி மானங்கர்மம் ஜிவனம் ஞானம் தாசாதாசி இவைகளைச் சொல்லு வோம் எ-று. 1

கல்லேறுங்கர்மநாதன் றனத்தினன்கணககன்கூடி
வல்லதாங்கர்மந்தன்னி லெக்கியம்வருவதற்கு
நல்லவன்வியாழஞ்சுங்க னகிலுங்கர்மநாடி
யில்லெனவுச்சந்தான யிருந்திடிலெககியனுவன்

இ-ள் சுக்கிரன் கர்மேசன் தநேசன் புதன்கர்மமத்திலிருக்கஎக்கியம்பண்ணுவன் வியாழமானாலுஞ் சுக்கிரனானாலும் பத்தாமிடத்திலிருக்க உச்சஸ்வடேசேத்திரத்திலிருகக அவன் எக்கியம்பண்ணுவான் என்றவாறு. 2

வனமிகுராகுவாலு மிரவிதான்கர்மமாகி
னினவிலாககங்காஸ்நான நிச்சயங்கர்மத்தானம்
வினவியமீனமாகக குருபுகர்புதன்றன்மிககாய்த்
தினஞ்செவ்வாய்கூடககங்கா ஸ்நாநமுமிவற்குண்டாமே

இ-ள். ராகு கர்மத்திலிருகக அல்லதுசூரியனிருககங்ககாஸ்நாநம்லபிக்கும் காமத்தானமீறுமாகியிருக்க அதில்வியாழமாவது சுக்கிரனாவது புதனாவது செவ்வாயுடனேகூடியிருக்க கங்காஸ்நாநம் லபிக்கும்-எ-று. 3

உண்டெனுங்கர்மத்தானஞ் சலமெனவுலவாய்ப்பொன்னன்
மண்டலமதிநானிற்கக் கங்கைபோமதிதான்வெள்ளி
திண்டிறற்கர்மனோடே சேத்திரமதுவாய்ப்புந்தி
தண்டமிழ்வியமால்பாக்கியன் கேந்திரிக்கதர்மவானே

இ-ள். கர்மத்தானஞ் சலராசியாயிருக்க அதில்வியாழமாவதுச ந்திரனவதுநிற்க கேந்திரத்தானம் பத்தாமிடமுடையவனுடனே சந் திரனவது சுக்கிரனவதுகூடி ஸ்வட்சேத்திரங்களிலிருக்க வியத்திற் புதனிருக்க பாக்கியா திபதி க்ஷேத்திரத்திலிருக்க கங்காஸ்னநம் பண் ணுவான்-எ-று. 4

வானுறைமதியுங்கர்ம நாதனுமூன்றில்வாழ
வானவன்புண்ணியவானு மன்றியும்புதன்ருன்பொன்ருன்
றீனமாஞ்சேயேகூட வல்லதுசேய்தான்பார்க்கின்
ஞானனுய்த்திருப்பணிக்கண் முகிப்பதாய்நாட்டலாமே

இ-ள்: சந்திரன்மூன்றில்நிற்க கர்மாதிபதியுடனேகூடப் புண் ணியவான் புதனவது ஜீவனவது செவ்வாயுடனேகூடியிருக்க அல்ல துசெவ்வாய்பார்க்கத் திருப்பணிமுகிப்பன்-எ-று. 5

நாட்டியகர்மநாத னலிடமுடையான்கூடத்
தேட்டமாய்ச்சீரணிக்குந் திருப்பணிசெய்வனல்லாற்
கூட்டமாங்கலையாரித்து காமனேக்கூடிற்குட்ட
மீட்டியதடாகம்வெட்ட வியற்றுவான்புத்தியாலே

இ-ள். கர்மாதிபதியுடனே நாலாமிடமுடையவன்கூட ஜீரண மாயிருக்கும் திருப்பணிகள்செய்வான் கர்மேசனுடனே சந்திரன்கூ டினல் குளத்தடாகம் வெட்டிவைப்பான் எ-று. 6

புந்தியுங்கர்மத்தானும் பத்திலேபொருந்தப்பாக்கியன்
பந்தமாம்பாவர்பாரா தாகிலெக்கியமேபண்ணுஞ்
சந்திரனுடனேகர்மஞ் சாரகேந்திரத்திற்பாக்கியன்
னிந்தியாய்ப்பாம்புபாரா தென்னிலெக்கியமேபண்ணும்

இ-ள். புதன் பத்தாமிடத்துடனே பத்தில்நிற்கப் பாக்கியாதி பதியைப் பாவியாள்பாராதிருக்க எக்கியமேலபிக்கும் கர்மாதியுடனே சந்திரன்கூடியிருக்கப் பாக்கியன் கேந்திரத்திரிகோணத்தி லிருக்க ராகுகேது பாராமலும் கூடாமலுமிருக்க எக்கியகர்த்தா-எ-று.

நித்தமாங்கர்மநாதன் சட்டாட்டமீசம்பேர்கச்
சித்தமாகுருகுகூடத் திருட்டியாலெக்கியஞ்சேர
பத்திலேசெவ்வாய்நாலில் புண்ணியன்சுபன்ருன்வந்து
உற்றியேசோபனுங்க மென்றிடிலாக்கினையாவான்

இ-ள். சர்மாதிபதி சஷ்டாஷ்டகிசத்திற்புக, பரிவாள்பார்க்க ராகுகூட எக்கியகர்மம்பண்ண நிச்சயித்தால் விக்கினம்வரும், தர்மத்தானத்திற் செவ்வாயிருக்க சுபக்கிரகம் நாலில்நிற்க சேபனுங்கிசமேற ஆக்கினைப்படுவன்—எ-று. 8

ஆக்கினைத்தானம்வெய்யோன் சேயுடனுகவன்றி
வாய்க்குங்கேந்திரத்தாற்குரூர சட்டியங்கிசமேமன்ன
தூக்கியபத்தின்மன்ன னட்டமனுடனேமேதாயத்
தேக்கியகுரூரசட்டியுறிற்றூரதேயவாக்னை.

இ-ள். பத்தில் சூரியனிற்க செவ்வாயுடனேகூட அல்லது அவர்கள் கேந்திரங்களிலிருந்து அன்னியோன்னியமாக குரூராககினைடத்திற் சனுநிற்க அஷ்டமாதிபதிகூட குரூராங்கிசமேற தூரதேசத்தில் ஆக்கினை—எ-று. 9

தூரமாம்ராகுமந்தகர்மத்தைத்துறக்கவன்றிப்
பாரமாமட்டமாதி பவனுடன்ராகுகூடி
யாரவேவாக்கியநிசங் குரூரசட்யமருவுமாகிற்
றீரனைத்தூரதேசத் தாக்கினைசெய்வதாமே.

இ-ள். ராகுவுங் குளிகனுங் கர்மத்திலிருக்க அஷ்டமாதிபதியுடனே ராகுகூட-கூ-மிடமுடையவன் நீசமாகக் குரூராங்கிசமேறமுன்சொன்னபலன்—எ-று. 10

செய்வதாங்கர்மநாதன் கேந்திரஞ்சுபனுச்சே
வெயனுங்குருரசட்டி யங்கிசமாகிலாக்னை
யுய்வெனுங்கர்மனிந்து மிவரவர்கண்டிலோக்கத்
துய்யவன்கர்மன்கூடக் குருபார்க்கச் சுகியன்கீர்த்தி.

இ-ள். கற்பாதிபதி சுபனுகக் கேந்தரத்தில்நிற்க குரூரசஷ்டியங்கிசம்ஏற ஆககினை கர்மாதிபதியுடனேகூடக குரு சுககிராள்பார்க்கப் பாராவதாங்கிசம் ஏற சற்கீர்த்தியுடையவன்—எ-று. 11

கீர்த்தியாந்தானன்புந்தி யாதித்தன்வீடுமித்திரன்
சாற்றியசவுசட்டி யங்கிசந்தன்னிற்சாரக
கீர்த்தியேயேற்கக்கர்மன் றேவலோகாங்காங்கமேறத்
தீர்ககமாங்சிங்கமேறின் மதியெனிற்கீற்த்தியுண்டே

இ-ள். கீர்த்தித்தானாதிபதி புதனை ஸ்வட்சேத்திர வீடுகளிலிருக்கச்சவுமியாள் சஷ்டியங்கிசமேற சற்கீர்த்தியுண்டு, கர்மாதிபதிகேவலோகாங்கிசமேற அல்லது சிங்காசனாங்கிசம்பெறச் சந்திரனுடனேகூடச் சற்கீர்த்தியுண்டு-எ-று. 12

மதிப்பிலாங்கர்மந்தன்னிற் பாவிகள்வாழாராகி
லுதிப்புறக்கர்மநாதன் பெலசுபசட்டியோங்கத்
துதிப்புறுகீர்த்திமானாங் கர்மாதிநேசந்தோயக
குதிப்புறுசனிசேய்மாந்தி கூடவகீர்த்திமானே.

இ-ள். பத்தில் பாவிகளில்லாதிருக்கக் கர்மாதிபதி பெத்திருக்கச் சுபாள் சஷ்டியயங்கிசம்பெற சற்கீர்த்தி, கர்மாதிபதி நீசச்சனிபாக்க மாந்திகூட செவ்வாய்பார்க்க அபகீர்த்தியுண்டு-எ-று. 13

அவமெனும்பத்தாந்தானன் சொட்சேத்திரனாகவன்றிச்
சுபனுடன்கூடவுங்கித் துல்லியராசனாவன்
பவமெனும்பத்திற்பாவி யல்லதுபாவிபார்க்க
நவமெனச்செவ்வாய்கூடிற் குருநாக்கினைநடக்குதானே

இ-ள். பத்தாமிடமுடையவன் சோரக்ஷேத்திரனாக அல்லதுசுபானுடனேகூடியிருக்க இங்கிதவானான ராஜாவாவான், பத்தில்பாவிகளிருக்க அல்லது பார்க்க செவ்வாய்கூடியிருக்க குருநாக்கினையுண்டாம்-எ-று. 14

நடப்பதாம்பத்தாந்தான நீசனாப்நாசர்பார்க்கப்
படப்பவர்பாவராசி யங்கிசம்பரவவீனக்
தொடத்தககர்மனிந்து வுடன்கூடச்சுபர்கள்கேந்ரந்
தடத்தககாற்கோணமாகிற் சன்யாசந்தாவிப்பானே.

இ-ள். பத்தாமிடமுடையவன் நீசனாகப் பாவிகள்பார்க்கப்பாவராசி யங்கிசம்பெற மானபங்கம் சேரிடும். கர்மாதிபன் சந்திரனுடனேகூடச் சவிமியாள்பார்க்கச் சுபாள் கேந்திரத் திரிகோணத்திலிருக்க சன்னியாசியாவான்-எ-று. 15

தாவிகருங்கர்மனோடே குருகூடவலதேற்பார்க்கப்
பாவித்ததேந்திரத்திற் பற்றிடிலைக்கினத்துத்
தாவித்தானனுலகருள்ளாய் முனீந்திரனாகவென்று
தேவர்கருந்தேவனென்ன மிக்கதாய்ச்செப்பனாரே.

இ-ள். கர்மாதிபனுடனே வியாழங்கூடிப்பார்க்க அல்லதுகேந்திரத்திரிகோணத்திலிருக்க அல்லது லக்கினத்து நாலாமிடத்திற் குள்ளேயிருக்க முனீந்திரனுவான் எ-று. 16

மிக்கதாமிலக்கினதி சேயெனவிரும்பியொன்பான்
றக்கதாய்கர்மத்தானைப் பார்க்கிலுமுனியாஞ்சாலத்
திக்கதாங்கர்மந்தத்திரேகாணமாகவிந்து
மொக்கவேகூடிமைந்த னுடன்கர்மாங்கிசமேற்றவன்

இ-ள். இலக்கினதிபதி செவ்வாயாகபாக்கியாதியாலே கர்மாதிபனைப்பார்க்ககூட முனிந்திரனவன் கர்மாதிபதிக்குசனி திரேகாணமாகச் சந்திரனுடனேகூடிநிற்கச் சனியுடனேகூட கர்மாதிவீட்டு அங்கிசமடுக்கச் சந்திரனுடனேகூட தேவேந்திரனுவன் எறு.

தேகமாநாலாம்வீட்டான் சந்திரனுடனேசேரப்
பாகமாம்வியாழம்பார்க்க முனீந்திரன்பத்தம்பாவ
மேகமாய்முகிந்துமப்பா லாபமேயியம்பவண்ண
வாகனனருளால்வேங்க டேசனேவவிக்கலுற்றுன்

இ-ள். நாலாமிடமுடையவன் சந்திரனுடனேகூட வியாழம்பார்க்க முனிந்திரயோகம் எ-று. 17

பத்தாம்பாவம்—முற்றிற்று.

பதினோராம் பாவம்.

வருத்திடும்லாபநாதன் சுபர்மத்யாய்ப்பாக்கியமென்னத்
தொகுத்ததைப்பார்க்கப்பாரா வதாங்கிசந்தாண்உலாபம்
பகுத்துடன்லாபனென்று மங்கிசங்கர்மத்தானை
மிகுத்தவன்பார்க்கிலாப மென்னவேவிளம்பலாமே

இ—ள். சுபாள்மத்தியிலே லாபாதியிருக்கப் பாக்கியாதிபதியாலேபார்க்கப்பட்ட பாராவதாங்கிசமேற லாபித்துக்கொண்டேயிருப்பன் லாபாதிபதி யங்கிசாதிபதி சுபனுகவிருக்க கர்மாதிபதியாலேபார்க்கப்பட தனலாபமாம். 1

விளம்பியலக்கினனுச்ச கிரகத்தைமேவுமாகில்
வளம்பெறலாபமுண்டாம் லாபனும்மீனயான்கூட
வளந்திகழ்கர்வம்ரண்டா மிடம்புகர்னீடாயோக்க
வளந்திசழ்பாக்கியரிதி பார்க்கவுமிகுமேலாபம்

இ-ள். இலக்கினதிபதி உச்சகிரகத்துடனேகூடதனலாபம்லா பேசன் நாலாமிடமுடையவனுடனேகூட காமம் இரண்டாமிடம் சுக்கிரன்வீடாகப் பாக்கியாதிபன்பார்க்க தனலாபமுண்டாகும் எ-று

லாபத்தேபாவியாக வல்லதுலாபம்பார்க்க
கோபத்தாற்குருரசட்டி யங்கிசலாபங்கொள்ள
வாபத்துமாகுமப்பா லாபமேமுற்றமப்பாற்
றீயத்தையொத்தவேயம் பெலமதுசெப்பலாமே

இ-ள். இலாபத்திற் பாவியிருக்க அல்லதுபார்க்கலா பாதிவதி குரூரசஷ்டியங்கிசமேற லாட மில்லையாம் எ-று. 3

பதினோரும்பாவம் முற்றிற்று.

பனிரெண்டாம் பாவம்.

பயமுறுமன்னிரண்டாம் பாவமும்வேயந்தானு
மகிலமும்பதனமங்கம் வயூலியம்வாமமாட்சி
நலமிலாநரசுநேத்திரஞ் சயனமுநாடித்தேர்ந்து
குலபதிவேங்கடேசக் கோவிதையருள்செய்தானே

இ-ள். பனிரண்டாமிடங்கொண்டுவேயம் அகிலம்பதனம் அங்கம் வயூலியம் வாமம் ஆட்சி நரகம் நேத்திரம் சயனம் இவைகளைச் சொல்லுவோம் எ-று. 1

அருளியவியேசன்பாவ ருடனன்றிவியத்திற்பாவி
வருகவும்பாவர்பார்க்கப் பவமூலம்வருமாஞ்சொர்ணம்
வெருவியராகுமந்தன் குளிகனும்வியத்தில்வேயன்
றருவெனக்குருரசட்டி சாரிலுந்தனமேநாசம்

இ-ள். வியேசன்பாவருடனேகூடஅல்லதுவியத்திற் பாவிநிற்க பாவக்கிரகம்பார்க்க பாவமூலமாகத் தனம்வரும் சனிகுளிகன் ராகு

வேயத்திலிருக்க, வேயேசன் குரூராங்கிசமேறப் பாவிகள் பார்க்கப் பாவமூலத்தினாலே தநக்ஷீயம் 2

நாசமாம்வேயத்தான னற்சுமனெனக்கோன்கேந்திர
நேசமாயிருக்கநல்லோர் பார்த்திடக்கடுக்கனெய்தும்
பாசமாம்பாவராகிற் கர்ணபூடணங்களில்லை
யீசனும்வேங்கடேச னியம்பியவண்ணமாமே.

இ-ள். விபத்தானதிபதி சுபக்கிரகமாக கேந்திர திரிகோணத்திலிருக்க சுபக்கிரகம்பார்க்க கர்னபூஷணந் திடனுயுண்டு பாவிகளிருக்க இல்லை-எ-று. 3

வண்ணமாப்லககினேசன் வியாதியுமூன்றில்வாழத்
திண்ணமாய்ச்சுபரேபார்க்கக கர்னபூடணங்களுண்டு
பண்ணிவிபனும்லாபன் கூடிடச்சுபரேபார்கக
வண்ணனுந்தனவானாகித் தீர்ககாயுசுண்டுதானே.

இ-ள். லாபாதிபதிரிம் வியாதிபதியும் மூன்றில்நிற்க சுபககிரகம்பூரணமாய்ப்பார்ககக கர்ணபூஷணமுமுண்டு, வியாதிபதியும் லாபாதிபதியுங் கூடியிருககச் சுபககியகங்கள்பார்ககத் தீர்ககாயுசும் தனமுமுண்டாம். 4

தானெனும்வியனைப்பாவிபார்திடச்சகிதனுகத்
தீனமாந்தனமும்லா காதனுஞ்சுபரேசே
வானதுந்தனம்மேலாபம் வியேசனும்பாவர்விடா
யீனமாம்ரோகன்கூடிப் பாவத்தாலிமைப்பன்சொர்ன்னம்.

இ-ள். வியாதிபதியைப் பாவிகள்பார்ககம் பாவிகளுடனேகூட தனநாசம், லாபாதிபதியுடனே சுபககிரகங் கூடியிருககத் தனலாபமுண்டாம்-எ-று. 5

சொன்னமாம்வியனுஞ்செவ்வா யுடன்றோயப்பிராதானுசந்
தன்னிலேபுத்திரேச னுடன்வேயன்சாரவன்றி
யெண்ணியேகுரூரமான வங்கிசமதுவேயேற
மண்ணிலேபுத்திராலே தனம்வினமாகுந்தானே.

இ-ள். விரேசன் செவ்வாயுடனேகூடங் சகோதரத்தால் தனம்விரயம், புத்திராதிபதியுடனே வியாதிபதிகூடபெலஈனராக யிருக்கக் குரூராங்கசம் ஏறப் புத்திராள் மூலத்தில் தனச்சேதம்வரும்-எ-று.

கானவன்பிதுருத்தானன் வியனுடன்சாரச்சத்ரு
வானதாந்தானன்பார்க்கப் பிதுருவாலழியுஞ்சொன்னே
மானவன் வியனுநாலாமிடமுடன்வாழப்பாவி
தீனமாம்பார்க்கமாதாவழியினுற்சேதமாமே

இ-ள். பிடர்த்தானுதிபதி வியாதிபதியுடனேகூடசத்துருத்தானுதிபதிபார்க்க பிதுர்மூலத்தால் தனச்சேதம் மாதுருத்தானுதிபதி வியாதிபதியுடனேகூடப் பாவாள்பார்க்க மாதாவினைதுவால் தனச்சேதம்வரும்—எ-று. 7

வழியெனுமாயுதநாதன் வியனுடன்கூடிவாழ
ம்ழிவெனுங்குருரநீச வங்கிசமங்கவீனம்
வழிபயம்வியத்தான்பாவ சகிதனும்மாந்திகூட
விழியுறமங்கந்தன்னி லென்னவுமியம்புவீரே

இ-ள். ஆயுர்த்தானுதிபதியுடனேவியாதிபதிகூட குருராங்கிசமேற அங்கஈனம் 12-ல் வெகுபாவிகலிருக்க வியாதிபதிபாவியாக சனி குளிகனுடனேகூட அங்கஈனம் எ-று. 8

இயம்பியவேயினேசன் பாவாங்கமேறவன்றிப்
பயன்படுகுருரசட்டி யங்கிச்மேறப்பாவர்
நயன்றறைப்பார்க்குமாகி னரகமேவீழ்னெப்பான்
வியம்பிபபுத்தியாலே நாகத்தைவிரிக்கதன்றே

இ-ள். வேயேசன்பாவராகி யங்கிசமேற அல்லது குருராங்கிசமேறப் பாவக்கிரகங்கள்பார்க்க நரகத்தில்வீழ்வன் எ—று. 9

நன்றெனும்வியக்குருர சட்யங்கநாடப்பாவா
ளொள்றெனக்கூடப்பார்க்க நரகமாமிந்துபானு
வின்றெனும்வியனுநல்லன் கேந்திரத்திருப்பதானுன்
மன்றிலேதெய்யமான மரணமேலபிக்குமென்னே

இ-ள். வியாதிபதி சஷ்டியங்கிசம் ஏற குருரனுடனேகூட அல்லதுபார்க்க நரகம் சந்திரன் சூரியன் பெலவானுக வியாதிபதி பெலவானுய் கேந்திரத்திலிருக்கத் தெய்வீகமான மரணமடைவன் சுவர்க்கங்கிட்டும் எ-று. 10

ன்னியகர்மநாதன் பெலனெனவியனுமன்னன்
றன்னிலேசுபனேயாகப் பார்க்கவும்வியத்திலுச்சன்
பன்னியேயிருக்குமாகிற் சுபாளதைப்பார்க்கும்போது
கன்னியேசொர்க்கலோகங் கடாட்சத்தாற்கடவுள்காட்டும்.

இ-ள். கர்மாதிபதி பெலத்திருக்க வியாதி சுபக்கிரகமாக இருந்துபார்க்க வியத்திலொருகிரகம் உச்சனுயிருக்க சொர்க்கங்கிடைக்கும்-எ-று. 11

கடவுளாஞ்சுபரேசொச்ச வுச்சமாய்வியமேகாண
வடவதாய்வியனுஞ்சௌமிய னுகிக்கேந்திரத்தையாளத்
திடமுடன்றெய்வலோக வங்கிசமதுவேசேரி
வடவதாய்ச்சொர்க்கலோக மமைவதுதிண்ணமாமே.

இ-ள். சுபக்கிரகம் ஸ்வட்சேத்திரவுச்சமாக வியத்திலிருக்கவியாதிபதி சௌமியனுகக் கேந்திரத்திலிருக்கத் தெய்வலோகாங்கிசமடுக்க சொர்க்கங்கிடைக்கும் எ-று 12

திண்ணமாங்கர்மநாதன் வியனுடன்கூடப்பார்க்க
வண்ணமாஞ்சுபரேபார்க்கிற் சொர்க்கலோகம்மேவாய்க்குங்
கண்ணதாம்விரனேக்கூட வன்றிறம்பார்வைகண்டா
வெண்ணிலாச்சொர்க்கலோக மியற்கையாய்வாய்க்குந்தானே.

இ-ள். கர்மாதிபதியுடனேவியாதிபதிகூடஅல்லதுபார்க்கச்சுபக்கிரகந் திருஷ்யுண்டாக சொர்க்கமுண்டாம்-எ-று. 13

வாய்த்துடனேத்திராதி சுபனுடன்கூடிவாழ
வேய்த்திடுஞ்சுபமேயா வங்கிசமேறவேய
மாய்ச்சிலசுபரேவாழ நேத்திரநன்றுய்வாய்க்குந்
தோய்த்திடுமாறுன்வேயம் வியனுறிற்சொர்ன்னமில்லை.

இ-ள். நேத்திராதிபதி சுபனுடனேகூட சுபாங்கிசமேற வியத்திற்சுபாளிருக்க நல்லநேத்திரமுண்டு, ஆறுமிடமுடையவன்வியத்திலிருக்க வியாதிபதியும் அப்படியிருக்கத் தனச்சேதம்-எ-று. 14

இல்லெனுமிலக்கினதி கேந்திரத்திருக்கவிந்து
வல்லவராறுபேர்க ளுடன்கூடவியத்திலுச்சு

நல்லவனொருவனேயாகிற் சொச்சோச்சமாகினர்க்குப்
பல்பலதேசமன்னுப் பூபதிவிபத்திற்பாரே.

இ-ள். இலக்கினதிபதி கேந்திரத்திலிருக்க, சந்திரன் ஆறுவர்க்ககிரகங்கள்கூடி, விபத்தில் ஒருகிரமுச்சனுயிருக்க ஸ்வட்சேத்திரமாகில் பூபதியாகியிருப்பான் எ-று. 15

வியத்தினல்மூலகோண கேந்திரம்விரும்பிநல்லோர்
பயப்படச்சுபாளேபார்க்கப் பன்னிரண்டொருவனுச்ச
முபத்திடிலிராசயோகம் வியலுடன்கர்மனேகில்
வயப்படப்பார்ககநல்லோர் பார்த்திடயோகஞ்சொல்லே.

இ-ள். வியாதிபதிமூலத்திரிகோண கேந்தித்திலிருகக அவனே மித்திராள்பார்கக 12-ல் ஒருகிரக முச்சனுயிருகக ஸ்வட்சேத்திரனுகப்பூபதியாவன், கர்மாதிபதியுடனே வியாதிபதிககூடப் பார்ககமித்துவகரூா இருககச்சத்துருகிரக மில்லாதிருகக ராஜாவாவன் எ-று.

சொல்லியசுபனுங்கர்மன் கூடிடவியத்திற்சுங்கன்
வல்லவன்வியனுங்கேப்திர கோணமாய்மகிழ்ந்துபார்கி
னல்லவன்ராசகோவாய் நரர்களுககதிகமாகிப்
பல்பலகாலம்வாழும் பத்தியான்மிககனுயே.

இ-ள். சுகாதிபதியுங்கர்மாதிபதியும் கூடியிருகக, வியாதிபதி சுபககிரகமாக கேந்திரத் திரிகோணத்திலிருந்து பார்கக இராஜனுவன்-எ-று. 17

அக்கமாமதிகேந்திரந்தா லாமிடம்வியாழம்பார்கத்
தக்கதாய்க்கீர்த்திவானுய்ச் சுசியனுய்த்தழைத்துவாழ்வன்
லக்கினமாதிபன்னி யண்டெனும்பாவந்தன்னே
மிக்கதாய்வேங்கேடேசன் வியம்புறவிளம்பினனே.

இ-ள். சந்திரன் கேந்தரத்தில் இருக்ம,நாலாமிடம் வியாழம் பார்க்க கீர்மானுய் சுவிஜீயாய் புத்திர மித்கிர களத்திராயுடன் விருத்திகரம்பெற்று வாழ்வன்-எ-று.

பனிரண்டாம்பாவம் முற்றிற்று.

சாதககூடாமணி

முற்றிற்று,

புத்தக விளம்பரம்.

	ரூ.	அ.
கம்பராமாயண பாலகாண்டம் பாட்டு உரை	3	8
பட்டினத்தார் பாடல் உரை	1	8
தாயுமானசுவாமி பாட்டு உரை	3	4
விநாயகபுராண வசனம் கிளேஸ்காலிகோ பைண்டு	4	0
தனிப்பாடற்றிரட்டு பாட்டு உரை	2	8
வேதாரணிய ஸ்தலப்புராண வசனம்	0	8
மஸ்தான்சாகிபு பாடல்	1	0
அறப்பளீசுரசதகம் உரை	0	12
குமரேச சதகம் உரை	0	12
மானங்காக்கும் ஞானதீபம்	0	4
பூசாறிப்பாடல்	0	4
ஸ்ரீ வேணுகோபால நாமசங்கீர்த்தனம்	0	4
பாண்டியதாஸ்பக்திரச கீர்த்தனை	0	5
மலையாளமாந்ரீக ரணத்கரம் இரண்டாங் காண்டம்	1	0
தேவரஹறவியம் என்னும்மலையாள மாந்திரீகம் 3-பாகம்	0	6
கதை புத்தகங்கள்.		
விக்கிரமாதித்தன் கதை	1	0
32-பதுமை கதை	0	8
அகடவிகட கோர்ட்டுவிசாரணை அல்லது பார்த்திருந்தவன் பெண்ணை பதுங்கியிருந்தவன் கொண்டுபோன கேஸ்	0	8
ஸ்திரீ புருஷ ரகசியம்	1	0
ஆயிரத்தொருநாளில் சொல்லிய பாரிசுக்கதைகள்	2	0
சார்தாவேஸ் கதை	0	8
கமலநாதன்	1	8
நாகபூஷணம் தமிழ் நவல்	0	12

	ரூ.	அ.
வைத்திய புத்தகங்கள்.		
போகமுனிவர் சத்தகாண்டம்-7000	4	0
பாலவாகடத்திரட்டு வைத்தியம் 1200	1	0
ஊர்வசி வைத்திய சிட்கா	0	8
இரண்டாம் பாகம்	0	8
குருநாடி சாஸ்திரம்	0	4
வைத்தியரத்தினச்சுருக்கம்	0	4
பரிபூரணம் 400	0	4
சோதிட புத்தகங்கள்.		
வீமகவி பாட்டு உரை	1	0
சுகர்நாடி சோதிடம்	1	0
விநாடி பஞ்சபட்சி	1	0
சோதிட அரிச்சுவடி 2-பாகம்	0	6
டிராமா புத்தகங்கள்.		
கோவிலன் சரித்திரம்	0	4
சாவித்திரி சரித்திரம்	0	4
நல்லதங்காள் சரித்திரம்	0	4
பவளக்கொடி சரித்திரம்	0	4
அல்லி சரித்திரம்	0	4
சதாரம் சரித்திரம்	0	4
கண்டிராஜன் சரித்திரம்	0	4
லங்காதகனம்	0	4
வள்ளியம்மை திருமணம்	0	4
இராமதாஸ் சரித்திரம்	0	4
மயிலிராவணன்சரித்திரம்	0	4
இந்துஸ்தான் பஜனைக்கீர்த்	0	4
லலிதாங்கி சரித்திரம்	0	4
குலேபகாவலி சரித்திரம்	0	4
ஞானசவுந்தரி சரித்திரம்	0	4
நந்தனார் டிராமா	0	2
ஓட்டநாடகம்	0	5
கிராம்போன் சங்கீதம்.		
8-பாகம்	0	4
16-பாகம்	0	6
20-பாகம்	0	8

இட்டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
நெ. 189, தங்கசாலை தெரு, மதறாஸ்.

விநாயக புராண மென்னும்

பார்க்கவ புராண மென்னும்

பத்தியிற் சிறந்த பண்புறைச் சீலர்காள் !

ஆனை முகத்தனை அன்புடன் பணிபவர்
ஏனை நலத்தினை எய்துவர் திணமே.

என்பதுகொண்டு ப்றபகக் களிற்றை எவரும் எக்காலத்தும் வழிபடத் தக்கதாம் தன்னை வழிபட்டார் மனம் மகிழுற வெக்காரி யங்களையு மினிது நிறைவேற்றுங் கருணை தாய்ந்த வள்ளற்பெருமான் விநாயகரே யாதலின், அவரது தோற்றப் பிரபாவங்களையும், அவர் அன்பர்மாட் டன்பு கூர்ந் தருளியத் திருவிளையாடல்களையுங், அவரை பர சித்துப் பேறுபெற்றார் பெருமைகளையும், பிரணவப்பொருளாம் ஐங்கரக்கடவுளைத் துதித்தற்குரிய சோடசம், அட்டோத்திரம், சகத்திரம் முதலான நாமங்களையும் மிகத்தெளிவாகவும், விரிவாகவுங் கூறுமிந்நூலைப்போல் வேறெந்நூலுமில்லை எனலாம். மேலும், 'இந்நூலொன்றினைப் படித்தார் பன்னூலின்பயனை நன்குணர்ந்தார்' என்றுகொள்ளத்தக்க 'சகலகலாபொக்கிஷம்' என்பதும் இந்நூலுக்கே பொருந்தும். ஆகவே, இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கும் பொருட்டு உயர்ந்த கடிதத்தில் ஐதீகப்படங்களுடன் அச்சிட்டு அழகாய் பைண்டு செய்யப் பெற்றிருக்கிறது.

விலை ரூபா 4 0 0

குமரேச சதகம் மூலமும் உரையும்

குமரேச சதகம் என்பது குமரேசன் என்னும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளுடைய திருநாமத்தை மகுடமாக வைத்து நூறு செய்யுட்களால் பாடப்பட்ட துதிநூலாகிய பிரபந்தம். இதற்குத் தகுந்த வுரை செய்யப் பட்டுள்ளது.

இதன் விலை அணா 12

வேதாரணிய ஸ்தலப்புராண வசனம்

வேதாரணிய ஸ்தல மான்மியத்தை எல்லா ஜனங்களும் அறிந்து ஆனந்திக்கும்படி, வசன நடையில் இருக்கவேண்டுமென்று பல அன்பர்கள் விரும்பிய வண்ணம், தேத்தாகுடி. S. கந்தசாமி ஐயம் அவர்களால், இலகுவான தமிழ் நடையில் சுருக்கமாக எழுதி, அச்சிட்டு விற்பனைக்குத்தயாராக இருக்கிறது. அன்பர்கள் அனைவரும் வேதவன மான்மியத்தை அறிந்துகொள்ள முந்துவார்களாக.

அதிக புஸ்தகம் வாங்குவோர்க்கும், வியாபாரிக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். வேண்டியவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும். இதன் விலை அணா 0 8 0